www.tamilarangam.net

# பாலியல் தொழிலாளர்



2002 பெண்கள் சந்திப்பு மலர் - யேர்மனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பெண்கள் சந்திப்பு மலர் - 2002**
*இலக்கம் -07*
**வெளியீடு:**
*25-05-2002*
**வெளியிடுவோர்:**
*தமிழ் பெண்கள் கூட்டமைப்பு*
**கணணி வடிவமைப்பு:**
*தயாநிதி (சக்தி-நோர்வே)*
**அட்டை வடிவமைப்பு**
*"சக்தி" (நோர்வே)*




**பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கலாமா? உலகின் அதிபுராதன தொழில் தொடர்பான கொள்கையை புனராலோசனை செய்தல்**
பிரெட் லெவி -2

**பால்வினைத்தொழில்: மறுபக்கம்...**
ஜெயந்திமாலா (சுவிஸ்) - 8

**பால்வினை**
சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)-11

**உலகமயமாக்கலும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும்**
-.சிந்துக்கரையாள் -15

**பால்வினை: பரிணாமம்**
தீபா (யேர்மனி)-20

**சிலமுரண்கள்: -குறிப்புக்கள்-**
தேவா (யேர்மனி) - 21

**சென்னையில் ஒரு சின்ன வீடு**
-ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (இங்கிலாந்து)-26

**மானிடராய் வாழ...**
உமா (யேர்மனி) - 31

**பாலியல்வினைத் தொழில்: பெண்ணிய நோக்கு**
றஞ்சி (சுவிஸ்)-36

**பாலியல் சிக்கல்களா? உரிமை மறுப்புக்களா?**
-பார்வதி கந்தசாமி (கனடா) - 39

**பால்வினைத் தொழிலும் ஆண்மேலாதிக்கமும்**
ஆங்கிலமூலம்: அந்திரியா ட்வார்கின் -43

**பெண்கள் சந்திப்பு மலர் 2001 : எனது பார்வையில்**
சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி)-53

**பபந்தாங்கொள்ளி**
நிரூபா (யேர்மனி) - 57

**முகவரி:**
Tamil Women's Forum
C/o. SALZ
Waliblingerstr. 59
70372 Stuttgart,
Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரிதலின் ஆரம்பம்....

**தோழிகளுக்கு!**

ஏழாவது பெண்கள் சந்திப்பு மலரை உங்கள் கைகளில் தருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இதுவரை வெளிவந்த பெண்கள்சந்திப்புமலர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இந்ததடவை நாம் பால்வினைத் தொழில் பற்றிய விடயங்களை பிரதான கருப்பொருளாகக் கொண்டு மலரை வடிவமைத்துள்ளளோம்.

பெண்ணியம் பற்றிய புரிதலில் உணர்தலில் பால்வினைத் தொழில் பற்றிய கருத்தோட்டத்தையும் வாதப்பிரதி வாதங்களையும் ஏற்படுத்த வேண்டிய தேவையின் அடிப்படையில் இதனை நாம் தெரிவு செய்திருந்தோம்.

பால்வினைத் தொழில் என்ற சொல்லே எம்மில் பலருக்கு அசூசையை ஏற்படுத்தக் கூடியது. இது என்ன சவம் இதற்கு என்ன எழுவது என்றும் "சாக்கடையைப்" பற்றி எழுதுவதன் மூலம் எங்கே "சாக்கடை" ஒட்டிக் கொண்டு விடுமோ என்று சிந்திப்பவர்களும் எம்மில் உண்டு. ஓர் தலைப்பபை தெரிவு செய்து இது பற்றி எழுதுங்கள் என வரையறுப்பது படைப்பாளியின் சுதந்திரத்திற்கு வேட்டு வைக்கும் முயற்சியாக இருந்தபோதிலும் சமூகத்தில் நடைமுறையில் இருக்கும் பாலியல் சுரண்டல் சமபாலுறவு போன்ற விடயங்கள் ஏனைய சமூகங்களில் பேசப்டுவது போல தமிழ் பேசும் மக்களிடைய உரத்துப் பேசப்படுவதில்லை.

பால்வினைத் தொழிலை முதல் கட்டமாக பேசுபொருளாக்குவதன் மூலம் பெண்கள் மீது சமூகமும் அதனுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களும் எவ்வாறு அடக்குமுறையை திட்டமிட்டு பேணுகின்றன என்பதை பிறிதொரு பரிமாணத்தில் நாம் காணலாம். பெண்ணின் உடல் எவ்வெற்றிற்கெல்லாம் பாவனைப் பொருளாக்கப்படலாம் என்கிற ஆலோசனைகளை வளர்க்கின்ற, வளர்கின்ற தொழிநுட்பம் வழங்குவதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இது தவிர பெண் பெண்ணின் உடல், அவளுடைய உணர்வுகள், அவள் தொடர்பான சகலவற்றையும் எவ்வாறு ஆண் பாவித்து பயன் பெறலாம் என்பதுடன் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆண்கள் மத்தியில் பெண் பற்றிய கருத்துப்படிமங்கள் ஏற்படுத்தப்படுகின்றன, .இவை அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

ஓவ்வாரு பெண்ணும் பால்வினைத்தொழிலில் முதலாளித்துவத்தின், ஆணாதிக்கத்தின் தேவைகள் எவ்வாறு அமைந்தள்ளன என்பதையும் அவை எவ்வாறு வறுமையும் அநாதரவான நிலையில் முரண்பாடுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும், சமூக எதிர்பார்ப்புகளுக்கு முகம் கொடுத்து உடைந்துபோயிருக்கும் பெண்களையும் குழந்தைகளையும் தந்திரமாகப் பயன்படுத்துகின்றது என்பதைக் கருத்திற்கொண்டு அவர்கள் பற்றி பேசும் போதும் அவர்கள் நிதிக்காகப் போராடும் போது அணுக வேண்டியது நியாயமானதாகும்

தற்போதுள்ள சமூக அமைப்பில் பால்வனைத்தொழில் ஒரு பெரும் லாபம் ஈட்டித்தரும் தொழிற்துறையாகிவிட்டது. இது ஓர் நிறுவனமாகி விட்டது. இதிலுள்ள முதலாளித்துவத்தின சூட்சுமங்களைப் புரிந்து அதற்கு ஏற்றவாறு தந்திரோபாயத்துடன் உரிமைப் போராட்டம் நகர்த்தப்படவேண்டும்.

இவ்விடயத்தை பேசுபொருளாக்குவதற்கு எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் இயன்றவரை பயன்படுத்தியுள்ளோம் என்றே நம்புகிறோம். இதனை நாம் ஒரு தொடக்கம் என்றே கொள்வோம். இம்மலரை சாத்தியமாக்கிய தோழிகள் அனைவருக்கும் நன்றிகளுடன் குறிப்பாக றஞ்சிக்கும் எமது நன்றிகள்.

*ஏழாவது பெண்கள் சந்திப்பு மலர் குழுவிற்காக*
*லக்சுமி - உயிர்நிழல், தயாநிதி - சக்தி*
*(2002 - மே)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கலாமா?

## உலகின் அதிபுராதன தொழில் தொடர்பான கொள்கையை புனராலோசனை செய்தல்

-பிரெற் லெவி-

பால்வினைத் தொழிலைக் குற்றமற்றதாக்கலாமா அல்லது குற்றமற்றதாக்கக் கூடாதா?

இந்தக் கேள்வியைத்தான் பல தசாண்டுகளாக அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. கொஸ்ரா றிக்கா, இத்தாலி, நோர்வே, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் பால்வினைத் தொழிலின் குறிப்பிட்ட சில வடிவங்களை சட்டபூர்வமாக அனுமதிக்கிறார்கள். தனிமனித சுதந்திரக் கொள்கையைப்பற்றி அதிகமாகக் கர்வம் கொள்ளும் அமெரிக்காவைப் போன்ற ஒரு நாடு, வயது வந்த இரண்டு நபர்கள் பரஸ்பர சம்மதத்துடன் செய்யும் எந்த ஒரு தொழிலையும் தடை செய்வது என்பதனை சிலர் விநோதமாகக் காண்கின்றனர். இருந்தபோதிலும், சட்டபூர்வக்கப்படும் பால்வினைத் தொழிலின் எதிர்காலம் என்பது - தங்களுடைய பாரம்பரிய அறவொழுக்கம் பற்றிய விவாதங்கள் மூர்க்கமாய் நடைபெறக்கூடும் எனும்பொழுது - தீங்கு விளைவிக்காத குற்றமற்ற செயற்பாடு எனக் காணும் ஒன்றை, அநேகமாக அமெரிக்காவின் எல்லா மாநில அரசாங்கங்களும் இன்னும் தடை செய்வது விசித்திரமாகப் படுகின்றது.



இருப்பினும் உண்மை என்னவென்றால், பால்வினைத் தொழிலானது அது காணப்படுவது போல அவ்வளவு தீங்கு விளைவிக்காததோ அல்லது குற்றமற்றதோ அல்ல. உண்மையில் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லாரும், வெகு அநேகமாகப் பெண்கள், அவர்களுடைய சொந்த விருப்பத்தின்படி கூட சுதந்திரமாகத் தொழில் புரிவதில்லை. பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழிலின் மிருகத்தனமான யதார்த்தங்களுக்கு அப்பால், வேறு பிரச்சினைகள் உள்ளுக்குள் பதுங்கிக் கிடக்கின்றன. அதைவிட, பால்வினைத் தொழிலுடன் பிணைந்திருக்கும் தீங்கு என்பது, அது குற்றமற்றதாக்கப்படுதலின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு விடுமா? சட்டபூர்வமான பால்வினைத் தொழில் என்பது நடைமுறைக்கு வரும் என்றால் திட்டவட்டமாக என்ன நடக்கும் என்பதுபற்றி எவரும் அறிந்து கொள்ளமுடியாது. ஆனால் இப்படியான ஒரு மாற்றத்தின் பின்னான விளைவுகளின் மீதான ஒரு நன்மதிப்பீட்டைச் செய்வதற்கு அதற்குள் மறைந்து கிடக்கும் ஆபத்துகளும் இலாபங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலாக, பால்வினைத் தொழிலானது சட்டபூர்வமாக்கப்படுவது அதன் வாடிக்கையாளருக்கும் தொழிலாளருக்கும் பாதுகாப்பானதாக இருக்கும். பால்வினைத் தொழிலாளர்கள் ஒரு அரச பதிவு செய்து கொள்வதன் மூலம் மிகவும் இலகுவாக ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பத்திரத்தை மாதாந்த ரீதியில் அல்லது வாராந்தரீதியில் மீளப் புதுப்பிப்பதற்கு மருத்துவ பரிசோதனை ஒன்று தேவைப்படும். சிங்கப்பூர் அங்குள்ள பால்வினைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மருத்துவ பரிசோதனை செய்யும் முறையை ஏற்கனவே வைத்திருக்கின்றது. இப்படியான ஒரு முறையானது, பணம் கொடுத்துப் பாலியல் தேவைகளை நிறைவேற்ற முன்வருபவர்களுக்கு பாலியல் ரீதியால் பரவும் நோய்களினால் ஏற்படும் ஆபத்தில் இருந்து தடுக்கமுடிகின்றது. இது பால்வினைத் தொழிலாளர்களின் உடல் நலத்துக்கும் முன்னேற்றத்தைத் தரக் கூடியதாக இருக்கும்.

பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கல் என்பது அதனை அனுமதிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் பாவனையைக் கொடுத்துவிடும் என்று சிலர் கவலைப்படுகிறார்கள். மேலும் இது சடுதியான, உள்ளூர ஆபத்தான ஒரு பாலியல் ரீதியான புரட்சிக்கு வழிகோலும் என்று கருதுகிறார்கள். ஆனால், அது போக, சட்டபூர்வமான நிர்வாண "கிளப்"கள், போர்னோகிராபி போன்றவை இன்றைய காலகட்டத்தில் பெரிதாகப் பார்க்கப்படுகின்றன என்பது சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டிய ஒரு விடயம். பால்வினைத் தொழிலுடன் பிணைக்கப்பட்டுள்ள களங்கங்களில் அநேகமானவை மறைந்து போகக்கூடும் என்பது சாத்தியமற்றது. (பெரும்பாலான எல்லா நகரங்களிலும், பட்டணங்களிலும் அங்கு இருக்க முடிந்த நிர்வாண "கிளப்"கள், போர்னோகிராபிக் கூடங்கள் இரண்டினதும் வகையறாவையும் வாடகைக்கு விடுவதையும் கட்டுப்படுத்துகின்றன என்பதில் இருந்து சமூகத்தினுடைய பார்வை பிரதிபலிக்கப்படுகின்றது.) ஆயினும் என்ன அப்படி மாறிவிடக் கூடும்? அதாவது, இறுதியில், பால்வினைத் தொழிலாளர்கள் தங்களுடைய மனேஜர்களினாலோ வாடிக்கையாளர்களினாலோ பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்ட பின்பு அவர்கள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்யக்கூடிய தெரிவொன்று இருக்குமா? Prostitution Research and Educationஐச் சேர்ந்த டாக்டர் மெலிசா ஃபார்லியினால் 475 பால்வினைத் தொழிலாளிகள்மீது நடத்தப்பட்ட பொதுவான கருத்தெடுப்பில், 62%மானவர்கள் அவர்கள் தொழிலுக்கு வந்து சேர்ந்ததன்பின் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். 46%மானவர்கள் 5 தடவைகளுக்கும் மேல் பாலியில் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.



அதே நேரத்தில் கருத்தெடுப்பில் கொள்ளப்பட்ட அமெரிக்க பால்வினைத் தொழிலாளர்களில் 82%மானவர்கள் உடல் ரீதியான முரட்டுத்தனமான தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இடையில் இந்த வன்முறைக்கு பலியானவர்கள் உதவி பெறக்கூடிய மாதிரியான ஒரு இடத்தை, ஒரு சமூகப் பொறுப்புள்ள அரசாங்கம் இவர்களுக்கு கொடுக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தங்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இந்தக் குற்றங்களை எடுத்துச் சொல்வதற்கு எந்தவிதமான வழியும் அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய வியாபாரம் என்பது சட்டத்திற்குப் புறம்பானதாக இருப்பதனால், ஒரு பொலிஸ் அதிகாரியைத் தொடர்பு கொள்ளுவது என்பது அவர்களுக்கு நன்மையை விடத் தீமையையே கூடுதலாகக் கொடுக்கும்.

பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்குதல் என்பது வழங்குபவர், வாடிக்கையாளர் இரண்டு பேருக்கும் பாதுகாப்பானதாக இருக்கும் என்பது ஒரு புறம் இருக்கின்ற போதிலும், சில வேதனையைத் தரக்கூடிய யதார்த்தங்களும் இந்த பால்வினை வர்த்தகம் பற்றி பேசப்பட வேண்டும். இத்தொழிலாளர்களின் முதலாவது தொழில் தெரிவானது, மிகவும் அரிதாக. பால்வினைத் தொழிலாக இருக்கின்றது என்பது நிச்சயமான உண்மையாக இருக்கும் வேளை, இத்தொழிலில் இருப்பவர்களில் சிலருக்கு வேறு எந்தவிதமான தெரிவும் சாத்தியமில்லாமலே இருந்திருக்கின்றது. நூற்றாயிரக்கணக்கான பெண்கள் பலவந்தத்தினாலும் சூழ்ச்சியினாலும் ஒவ்வொரு வருடமும் பால்வினைத் தொழிலுக்குள் வருகின்றார்கள் என்பது வேதனையளிக்கக் கூடியதாக இருக்கின்றது. நூற்றாயிரக் கணக்கான பெண்கள் பலவந்தத்தினாலும் சூழ்ச்சியினாலும் ஒவ்வொரு வருடமும் பால்வினைத் தொழிலுக்குள் வருகின்றார்கள் என்பது வேதனையளிக்கக்கூடியதாக இருக்கின்றது. சென்ற ஆண்டு நடுப்பகுதியில் Minnesotaவில் இயங்கிய பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழிலைச் செய்வித்து வரும் கூட்டம் ஒன்று விசாலமான புலன்விசாரணையின் பின் அதிகாரிகளினால் பகிரங்கப்படுத்தப்பட்டது. இவான் சகோதரர்கள் குடும்ப ரீதியாக, 17 வருடங்களாக இதை நடத்தி வருகின்றார்கள். கவர்ச்சி நடனக்காரிகள், உள்ளாடைகளுக்கான மாடல்கள் போன்ற தொழில்களுக்கு பத்திரிகையில் விளம்பரம் செய்து, அதற்கு வரும் பெண்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்பிள்ளைகளையும் ஆசைகாட்டி கடத்தி வந்து தங்களுக்காக வேலை செய்விக்கின்றார்கள். அக் கூட்டத்திற்குத் தலைவர்களாக இருக்கும் இவான் சகோதரர்கள். ஒரு பத்திரிகைச் செய்தியின்படி "நடனக்காரிகள்" ஆரம்பத்தில் மிகவும் "அன்பாக" நடத்தப்படுவார்கள். ஆனால் அவர்கள் அந்த நடவடிக்கையை விரும்பாவிடில் அதனைச் செய்வதற்கு பலவந்தப்படுத்தப்படுவார்கள் பயங்கரமாகப் பயமுறுத்தி சம்மதிக்க வைக்கப்படுவார்கள். தப்பியோட முயற்சித்த ஒரு பால்வினைத் தொழிலாளியை, "அவள் கொல்லப்பட்டு, அவளுடைய உடல் துண்டாக்கப்பட்டு ஏரியொன்றினுள் புதைக்கப்படும்" என்று அவளிடம் சொல்லுவதற்கு முன்னர், அவளை ஒரு மரக்குற்றியினுள் பலவந்தமாகத் திணித்து மணிக்கணக்காக ஒரு வண்டியினுள் கொண்டு திரிந்திருக்கிறார்கள். இந்த இவான் சகோதரர்கள் நூற்றுக்கணக்கான பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பால்வினைத் தொழில் தரகர்களாக இருந்திருக்கிறார்கள். மறைக்கப்படாத உள்நாட்டு அரச குற்றச்சாட்டுகளின்படி இந்த பால்வினைத் தொழிலாளப் பெண்கள் "அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவார்கள், கொல்லப்படுவார்கள்" என்ற பயத்தினைக் காட்டி தங்களுடைய ஊதியத்தை அவர்கள் இந்த பால்வினைத் தொழில் தரகர்களுக்கு விட்டுக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்ட புலன்விசாரணையில், 50 பெண்கள் அந்தக் குடும்பத்தினருக்கு உழைப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இதில் அரைவாசிக்கு மேற்பட்டோர் சிறுமிகள்.

இந்த Minnesota வழக்கில் ஆகத் தொந்தரவாக இருக்கும் விடயம் என்னவென்றால், இப்படியான நடவடிக்கைகளைக் கொண்ட கும்பல்கள் அரிதாக இல்லை என்பதுதான். உண்மையான பாலியல் அடிமைகளாக சர்வதேச எல்லைகளைத் தாண்டிக் கடத்திச் செல்லப்படும் பெண்களை பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தும் கூட்டங்கள் உலகளாவி இருக்கின்றன. பால்வினைத் தொழிலாளர்களை ஈர்க்கும், முன்பு கூறப்பட்ட, தொழில் நுணுக்கங்கள் வேறு நாடுகளிலும் கையாளப்படுகின்றன. உதாரணமாக, உக்ரேனில் நன்கு அறியப்பட்ட பால்வினைத் தொழில் செய்யும் ஒரு கூட்டம், கீவ் இல் இருந்து வெளிவரும் ஒரு செய்திப் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தைப் போட்டது. அதாவது: "அழகான, இளமையான, உயரமான பெண்பிள்ளைகள் தேவை. விளம்பர மாடல்கள், காரியதரிசிகள், நடனக்காரிகள், வடிவமைப்பாளர்கள், உடற்பயிற்சியாளர்கள் போன்ற தொழில்களுக்கு உங்களை அழைக்கிறோம். இருப்பிடம் வழங்கப்படும். வெளிநாடுகளில் தொழில் புரிவதற்கான விண்ணப்பங்களும் காலியாக உள்ளன. தொடர்புகளுக்கு நேரில் விண்ணப்பிக்க வேண்டும்" இந்த விளம்பரங்களிற்கு பதிலளித்து அவர்கள் கேட்கும் தகுதிகளுடன் பொருந்தி வருபவர்கள், அவர்களுடைய பாஸ்போட்டுகள் வாங்கப்பட்டு வெளிநாடுகளில் விற்பதற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். Global Survival Network, குற்றவாளிகளுடன் இணைந்து செயற்பட்டு நடத்திய புலன் விசாரணைகளின் போது ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாவின் காட்சி, ரக்ஷ்யாவில் நடக்கும் இந்த வியாபாரத்துக்கான சாட்சி. அரசாங்கத்தில் பணிபுரியும் அவர்களுடைய நண்பர்களினதும் ஏனையவர்களினதும் உதவியுடன் இளம் பெண்களுக்கு பொய்யான பத்திரங்களைத் தயார் செய்து 2000 டொலருக்கு மாற்றாக பெண்களைக் கையளிக்கின்றார்கள். ABC தொலைக்காட்சியின் 20/20 நிகழ்ச்சியில், இஸ்ரேலில் நடத்தப்படும் பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழில்பற்றிய ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொன்னது. பகிரங்கமாக நேர் காணப்பட்டவர்களில் Gedriya ஒருவர். இவர் ரக்ஷ்யாவில் இருந்து சட்டத்திற்குப் புறம்பாக கடத்தி வரப்பட்ட பால்வினைத் தொழிலாளிகளில் ஒருவர். அவர் சொன்னார், "என்னை அடித்தார்கள். கொல்வதற்காக எனது குரல்வளையை நெரித்தார்கள். என்னை ஒரு அறையில் அடைத்து வைத்தார்கள். நான் நினைத்தேன், நான் சாகப் போகிறேன் என்று" இந்தத் தொழிலில் ஈடுபடும் பெண்களிற்கு ஏற்படும் ஏமாற்றம் பயங்கரமானது என்பதை ஒரு இஸ்ரேலிய பால்வினைத் தொழில் விடுதி உரிமையாளர் ஏற்றுக் கொள்கின்றார். மாதத்திற்கு 3000 டொலர்கள் தொடக்கம் 5000 டொலர்கள் வரையான ஊதியம் தரப்படும் என்ற சத்தியவாக்கின் மூலம் பெரும்பாலான பெண் குழந்தைகள் வஞ்சிக்கப்பட்டு கொண்டு வரப்படுகின்றார்கள். ஆனால் வந்ததன் பின்பு ஏதாவது கிடைப்பதாய் இருந்தாலும் மிகச் சிறிய அளவில் கிடைப்பதுடன் முடிவடைகின்றது. "பெண் பிள்ளைகளிடம் இருந்து சகலதையும் ஏன் அவர்களுக்குக் கிடைக்கும் மிகச் சிறிய அளவிலான உபகாரப் பணத்தையும் கூட தாங்கள் எடுத்துக் கொண்டுவிடும் பெரும்பாலான ஆண்களை எனக்குத் தெரியும்" என்று பால்வினைத் தொழில் விடுதி உரிமையாளர் மேலும் சொல்கிறார். இந்த நடைமுறை அமெரிக்கர்களுக்கு முற்றுமுழுதாக அந்நியமானதாகவும், நெருங்க முடியாததாகவும் காணப்படும் அதேவேளை, அது அப்படி இருக்கக்கூடாது. அதே அறிக்கையில், ஒரு பால்வினைத் தரகர், ரக்ஷ்யப் பெண்களை இஸ்ரேலில் மட்டுமல்ல, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் தான் விற்கின்றார் என்பதனை ஒத்துக்கொண்டு ஊர்ஜிதம் செய்கின்றார். இவரைப் போன்ற நூற்றுக் கணக்கானவர்கள் மிகப் பெரும்பாலாக இருக்கின்றார்கள். இவ்வாறாக, இன்றைய பால்வினை வர்த்தகத்தின் அதிபயங்கரமான பக்கம் இந்த நாட்டைக்கூட பாதிக்கின்றது.

எப்படி இருப்பினும், பால்வினைத் தொழில் குற்றமற்றதாக்கப்படல் என்பது, அமெரிக்காவில் அப்பட்டமாக நடைபெறும் பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழில் வர்த்தகத்தை எதிர்த்துப் போராட முடியுமா? என்ற கேள்வி எஞ்சுகின்றது. எல்லாவற்றுக்கும் பின், பெரும்பாலான பால்வினைத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால், பதியப்படாதவர்களை நீக்குதல் என்னும் நடைமுறையினூடாக அவர்களைக் கண்டு பிடித்து, அதன் பிறகு, பலவந்தப்படுத்தப்பட்ட பால்வினைத் தொழிலை நடத்துபவர்களைக் கொண்ட வட்டத்தை உடைப்பது என்பது இலகுவானதாக அமையாதா? இதற்கான சுருக்கமான விடை என்னவென்றால், "அநேகமாக" என்பது. எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றிய "ஆம்" என்ற பதிலை அதிகாரபூர்வமாகச் சொல்ல முடியாது. காரணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னவென்றால், அதாவது, சட்டங்கள் மாற்றப்பட்டவுடன் ஒரு அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை அறிந்து கொள்வது கடினம். உதாரணத்துக்கு, நெதர்லாந்தில் சட்டத்துக்குப் புறம்பாக பால்வினைத் தொழிலாளர்களை கடத்துபவர்கள் நடைமுறையில் சுதந்திரமாக ஆட்சி புரிகின்றார்கள். இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலானவர்கள் பதியப்படாமல் இருக்கின்றார்கள். இதில் 80%மானவர்கள் வெளிநாட்டவர்கள். 70%மானவர்களுக்கு பாஸ்போட்டோ அல்லது வேறு எந்தப் பத்திரங்களோ இல்லை. தொகையான சட்டத்திற்குப் புறம்பான கடத்தலுக்கு இது ஒரு தெளிவான சங்கதி. டச்சு பால்வினைத் தொழில்முறை பற்றி ஆய்வுசெய்யும் ஆராய்ச்சியாளர் ஒருவரின்படி, இந்தப் பெண்கள் அநேகமாக பயமுறுத்தப்பட்டு, வெருட்டப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு வரும் புலம் பெயர்ந்த பெண்களாக இருக்கின்றார்கள். இடையில், நீதித் திணைக்களம் சட்டத்திற்குப் புறம்பாக பெண்களைக் கடத்துதலுக்கு குறைந்த முன்னுரிமை கொடுத்து இதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இதற்கான அதியுயர் தண்டனை 6 வருடகால சிறைவாசம். (போதைவஸ்துக் கடத்தலுக்கு தண்டனைக்காலம் இதன் அரைவாசிதான்) 1993இல் நடைபெற்ற மனிதக் கடத்தலின் குற்றஞ் சாட்டப்பட்ட ஒன்பது வழக்குகளில், இரண்டே இரண்டுக்கு மட்டும்தான் நிரூபிப்பதற்கு போதியளவு சாட்சியங்கள் இருந்தன. (இதில் ஒரு வழக்குக்கு 9 மாத சிறைத் தண்டனையும் இன்னொன்றுக்கு 4 வருடங்களும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.)

அமெரிக்க நீதி இலாகா ஏதாவது வித்தியாசமாக நடந்து கொள்ளும் என்று எந்த நிச்சயத்துடனும் சொல்வது கடினம். நெவேடாவில், வாராந்த மருத்துவப் பரிசோதனைக்குட்படும், பெண்கள் தொழில் புரியும் சட்டபூர்வமான பால்வினைத் தொழில் விடுதிகள் இருந்த போதிலும், சட்டபூர்வமற்ற பால்வினைத் தொழில் சந்தை இன்னும் மறைமுகமாக இயங்கி வருகின்றது. அது வெளிப்படுத்தும் காரணம் மிக இலகுவானது: பணம். ஒரு தகவலின்படி, சுநெழ பகுதியில் உள்ள ஒரு சட்டபூர்வமான பால்வினைத் தொழில் விடுதியில் ஒரு குறிப்பிட்ட பாலியல்ரீதியான செயலுக்கு 200 டொலர்கள். அதே இடத்தில், சட்டத்திற்குப் புறம்பாக இயங்கும் இடங்களில், அதே செயலுக்கான விலை 20 டொலர்கள். இந்த வீதிகளில் அங்கு இருப்பவர்களாகத் தெரிவதைவிட, சர்வதேசரீதியில் சட்டத்திற்குப் புறம்பாகக் கடத்தப்பட்ட, எண்ணற்ற பால்வினைத் தொழிலாளிகள் உள்ளனர். அமெரிக்க அரசாங்கம் இந்த பலவந்தப்படுத்தப்பட்ட தொழிலின் ஒடுக்குமுறை வடிவத்தை வாஸ்தவமாக ஆதரிக்காமல் - டச்சு அரசாங்கம் போல் இருக்காதா?

பால்வினைத் தொழிலானது குற்றமற்றதாக்கப்படல் என்னும் விடயத்தின்மீதான விவாதத்தில் வேறு விதமாகக் கரிசனை கொள்ளல் என்பது, இப்படியான ஒரு நகர்வில் இருந்து விளையும் வாழ்க்கையின் ஒட்டுமொத்தப் பண்பின் மீதான திட்டமிடப்பட்ட பாதிப்பாக இருக்க வேண்டும் என்று சிலர் வாதம் செய்கிறார்கள். அமெரிக்க மனோதத்துவ வல்லுநர் சங்கம் தனது 1998ம் ஆண்டின் வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்த ஒரு அறிக்கையின்படி அமெரிக்கா உட்பட ஐந்து நாடுகளைச் சேர்ந்த பால்வினைத் தொழிலாளர்களின் உளஆரோக்கியம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கின்றது. கருத்தெடுப்பில் கொள்ளப்பட்ட ஏறத்தாழ 500 பால்வினைத் தொழிலாளர்களில், திகைக்க வைக்கும் சதவிகிதமானவர்கள் உளவியல்ரீதியாகப் (உளவியல் அதிர்ச்சிக்குப் பின்னான ஒழுங்கீனம்) பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த உளவியல் ஒழுங்கீனத்துக்கான அறிகுறிகள், மன அதிர்ச்சி தரக்கூடிய பழைய எண்ணங்கள் தொடர்பான தொல்லைப்படுத்தும் நினைவுகள், கனவுகள் திரும்பத் திரும்ப வருதல், உறவுகளின்போது மரத்துப் போனது போன்றது மாதிரியான பிரமை என்பன வருகின்றன. பொதுவான ஜனத்தொகையில் 5%க்கும் குறைந்தவர்களும், வியட்நாம் போரில் நீண்ட காலம் ஈடுபட்டவர்களில் 20% தொடக்கம் 30%மானவர்கள் இந்தவிதமான உளவியல் ஒழுங்கீனத்திற்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இதனுடன் ஒப்பிடும்பொழுது இந்த கருத்தெடுப்பில் கொள்ளப்பட்டவர்களில் 67%மானவர்கள் இவ்விதமான உளவியல் ஒழுங்கீனத்துக்கு உள்ளாகியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திரும்பத் திரும்ப பாலியல் பலாத்காரத்துக்கும் அடி உதைகளிற்கும் உட்படுத்தப்பட்டு உளவியல் பாதிப்புற்று துன்புற்றுக் கொண்டிருக்கும் பாலியல் தொழிலாளர்களில் 92%மானவர்கள் இந்த வியாபாரத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று சொல்வதொன்றும் ஆச்சரியமானதல்ல. "உலகின் புராதன தொழில்" நிச்சயமாக உலகின் அதி மகிழ்ச்சியளிக்கக்கூடிய தொழில்களில் ஒன்றல்ல என்று தெரியும் பொழுது இந்தத் தொழில்தான் அதனளவில் (-வியாபாரம் என்பதைவிட அதனுடன் சாதாரணமாக இணைந்திருப்பவர்கள்) உளவியல் ரீதியான பாதிப்புக்கு முற்றுமுழுதாகப் பொறுப்பானதென்று எந்த நிச்சயத்துடனும் இன்னும் சொல்வது கடினமானது என்று பால்வினைத் தொழிலாளர்கள் உணருகின்றார்கள்.

மேற்கண்ட ஆய்வின்படி அமெரிக்க பாலியல் தொழிலாளர்களில் 40%மான சிறுவர்கள் உடல்ரீதியான பலாத்காரத்துக்கும், 57%மான சிறுவர்கள் பாலியல் பலாத்காரத்துக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை உண்மையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது. அவர்களுக்கிடையில் இருக்கும் உயர் அளவிலான மன அதிர்ச்சிகளுக்குப் பிந்திய அழுத்தத்தினால் ஏற்படும் ஒழுங்கின்மைக்கு இது உண்மையில், குறைந்த பட்சம், பகுதியளவிலாவது கணக்கிலெடுக்கப்படமுடியும். அத்துடன் பால்வினைத் தொழில் சட்டபூர்வமற்றதாக இருப்பது, அந்தத் தொழிலில் தரித்திருக்க விரும்பும் பால்வினைத் தொழிலாளர்கள் தரகர்களினால் ஏற்படும் இடையூறுகளை ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கும். இது உளவியல்ரீதியான பாதிப்புக்கு ஒரு மேலதிக பங்களிப்பாகும். ஒருவேளை பால்வினைத் தொழில் குற்றமற்றதாக்கப்பட்டால் பால்வினைத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் உளவியல்ரீதியான பாதிப்புகள் உண்மையில் குறையும். ஏனெனில், இவர்கள் தொழிலாளர்கள் என்ற முறையில் தங்களுடைய உரிமைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு, சட்டரீதியான வழிகளை அல்லது ஒருங்கிணைந்து பேசும் வழிகளை உபயோகிக்க முடியும். பிறதேச நடனக்காரிகள் தங்களுடைய பேரம்பேசும் அதிகாரத்தை உபயோகித்து சமாளிக்கப் பழகிக் கொண்டார்கள். சான் பிரான்ஸிஸ் கோவிலும் அங்கரேஜ் இலும் உள்ள கிளப்புகளில் உள்ள நடனக்காரிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களுடைய நிர்வாகத்தினருக்கு எதிராக வெற்றிகரமாக அணிதிரண்டார்கள். தங்களைப் போதியளவு நியாயமாக நடத்தும்படி கோரி பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். மோசமாக நடத்தப்படும் பால்வினைத் தொழிலாளர்களாலும் ஏன் இப்படி நடந்துகொள்ள முடியாது?

பால்வினைத் தொழிலானது குற்றமற்றதாக்கப்படுவது என்பது பற்றிய விவாதத்திற்கு ஒரு இலகுவான விடை இல்லை. பாலியல் தேவையை பணத்திற்கு விற்கவோ வாங்கவோ விரும்புவர்களுக்கு. இந்த கொள்கை மாற்றம் அதை ஒரு பாதுகாப்பான முறையில் செய்வதற்கு உதவக்கூடும். மேலும். பால்வினைத் தொழிலாளர்கள் தங்களுடைய வாடிக்கையாளர்களிடமும் அவர்களை வேலைக்கமர்த்தியவர்களிடமும் தங்களை நியாயமான முறையில் நடத்தும்படி கோரும் அதிகாரத்தை வழங்கக்கூடும். இந்த நன்மைகள் உண்மையில். உயர் இலட்சியத்தைக் கொண்டிருப்பவர்களுடன் அதிகளவு இசையக் கூடும். எங்களுடைய தலைவர்கள் தனிமனித சுதந்திரம். முதலாளித்துவம் என்னும் நோக்கில் இதற்கு ஊக்கமளிக்கிறார்கள். பால்வினைத் தொழில் திறந்த சந்தையாக்கப்படுவது என்பது. எப்படியா-யினும். பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் மோசமான ஆரோக்கியமற்ற விளைவுகளைக் கொண்டுவரக்கூடும் - குறிப்பாக, வாழ்வதற்காக உழைப்புக்குப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளில் உள்ள பெண்களுக்கும் பெண்குழந்தைகளுக்கும் - இவர்கள் பொய்களினால் இந்த வர்த்தகத்தினுள் வசீகரிக்கப்பட்டுப் பின்பு அதிலேயே தங்கி இருப்பதற்குப் பலவந்தப்படுத்தப்படுவார்கள். நிகழ்காலத்தில் குறி வைக்கப்படும். சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பாலியல் தொழிலாளர்கள் மீது சட்ட அமுலாக்கத்தை பிரயோகம் செய்தால், அவர்களுடைய வாடிக்கையாளர்களை சர்வதேச ரீதியான சட்டத்திற்குப் புறம்பான மனிதக் கடத்தல்களைத் தடுப்பதனை நோக்கி இலகுவாக மீளத் திருப்பப்படுவார்கள். இதன் விளைவாக பலவந்தப்-படுத்தப்பட்ட பால்வினைத் தொழில் இல்லாமற் போகக்கூடும். ஒரு வேளை, இந்த வர்த்தகம் அதனுடைய உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இறுதியில் துடைத்தெறியக் கூடும். மாநில அரசாங்கத்தின் திறமையான இரகசிய சேவை இலாகாவின் துணையுடன், இப்படியான மனிதத் தன்மைக்கு எதிரான, குற்றத்தை எதிர்த்துப் போராடுதல் நிச்சயமாக இயலக்கூடியது. தற்போது பால்வினைத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலில் அவ்வளவு சந்தோஷமாக இல்லை என்று சம்பந்தப்பட்ட அறிக்கைகள் காண்பிக்கின்றன. ஆனால். பால்வினைத் தொழிலைச் சட்ட பூர்வ-மாக்குவதென்பது அவர்களைக் காயப்படுத்துவதிலும் பார்க்க உதவியாக இருக்கும். தொழில் புரியும் சமயத்தில் அவர்கள் பலாத்காரப்படுத்தப்பட்டால் அவர்கள் பொலிசுக்குப் போவதற்கு அல்லது அவர்கள் ஒருங்கிணைவதற்கு இப்படியான சந்தர்ப்பத்தை வழங்குவதன்மூலம் அதனைச் செய்யலாம். பெரும்பாலான பால்வினைத் தொழிலாளர்க-ளுக்கு. அவர்களுக்கு வேறு தொழில்கள் இன்னும் இருக்கும் என்றால் அதில் பயிற்சி எடுப்பதற்கு அவர்கள் தயாராக்கப்படவேண்டும். ஆனால் இது அரசின் நலன்புரி, வேலைபுரி கொள்கைகளுக்கு மேலதிகமான ஒரு பிரச்சினையாகின்றது.




இந்த விவாதத்தில் எங்கு நிற்பது என்பதை முடிவெடுப்பதில் சிலருக்கு இருக்கும் அடிப்படைக் கேள்வி, பால்வினைத் தொழில் சமூகத்திற்கு நன்மையானதா? பாலியல் இன்பம் விற்பனைக்கு விடப்பட வேண்டுமா? நிச்சயமாக இந்தக் கேள்விகள் அறவொழுக்க எல்லைக்குள் அவற்றிற்கான இடத்தைக் கொண்டிருக்கும் பொழுது, விடைகள் விஸ்தாரமாக மனதில் எழுபவையாகின்றன. இவை உலகின் ஸ்தூலமான யதார்த்தமான உண்மையைவிட, தனிமனித உணர்வுகளில் தங்கியுள்ளன. பாலியல் இன்பத்தை விற்கவும் வாங்கவும் விரும்புபவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை எஞ்சி நிற்கின்றது. அதைவிட நல்ல கேள்வி என்னவென்றால், அதிகுறைந்த தீமையையும் அதி உயர்ந்த இலாபத்தையும் விளைவாகக் கொண்டுவரக்கூடிய இந்த விவகாரங்களை நிர்வகிக்கும் மிகச் சிறந்த வழி என்ன? ஒரு தெளிவான விடை இல்லாதபோது, பாலியல்ரீதியாக கடத்தப்படும் நோய்கள் பரவுதல், தொழிற் துர்ப்பிரயோகம், பலவந்தப்படுத்தப்பட்ட நினைவூட்டல் போன்றன பால்வினைத் தொழில் குற்றமற்றதாக்கப்படுதலினால் கணிசமான அளவு குறைக்கப்படலாம் என்பது தெளிவானது. எப்படி இருப்பினும், இந்த வியாபாரத்துடன் இணைந்திருக்கும் அதிபெரிய தீயசக்திகளுடன் போரிடுவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்றால் பெண்களும் பெண்குழந்தைகளும் சட்டத்திற்கு விரோதமாக கடத்தப்படல், பலவந்தப்படுத்தப்பட்ட தொழில் புரிதல் - இப்படியான பிரச்சனைகள், பால்வினைத் தொழிலைச் சட்டபூர்வமாக்கப்படுதலுடன் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, தன்னுடைய தற்போதைய கொள்கையைக் கடைப்பிடிப்பதுதான் அமெரிக்காவுக்கு கூடியளவு நன்மை பயக்கும்.

**(இக் கட்டுரை Progress Review 1999இல் வெளிவந்தது)**

*தமிழில் - கவித்ரா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பால்வினைத் தொழில்!

# மறுபக்கம்...

-ஜெயந்திமாலா-



முதலாளியப் பொருளாதாரம் ஏற்படுத்தியுள்ள சமூகநோய்களுக்கான சர்வரோக நிவாரணியாக அறிமுகமாகியுள்ள உலகமயமாக்கல் வறிய மூன்றாம் மண்டல நாடுகளின் சமூக, பொருளாதாரங்களை நோய்க்குள்ளாக்கியுள்ளது. அந்தநாடுகளில் நிலவுகின்ற சுய பொருளாதாரச் சீரழிவு, வேலையின்மை, வறுமை என்பனபோன்றே பால்வினைத்தொழிலும் ஒரு முக்கிய பிரச்சனையாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அண்மை ஆண்டுகளில் உலக அபிவிருத்தி(? ) மாதிரியாக உரத்துப் பேசப்படுகின்ற உலகமயமாக்கம் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே பெரும்இடைவெளியை ஏற்படுத்தி வறுமை மட்டத்தினை அதிகரித்திருப்பது பால்வினைத் தொழிலின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

மரபுரீதியாக இந்தப்பரப்பில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள விபச்சாரம், விபச்சாரி, விலைமகள் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் பெண்பால் சார்ந்த வையாகவே மொழியியலில் கையாளப் பட்டுள்ளன. இது ஒன்றே ஆணாதிக்கச்சமுதாய அமைப்பினால் பெண்களுக்கு எதிராக, இது விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அநீதியை அடையாளப்படுத்தப் போதுமானதாகும். உலகமயமாக்கம் இன்று ஏற்படுத்தியுள்ள சமூகப் பொருளாதாரச் சீரழிவுகள் பால்வினைத்தொழில் குறித்த மரபுரீதியான கருத்தியலைத் தகர்த்து புதிய வரைவிலக்கணம் ஒன்றை அதற்குத் தேவையாக்கியுள்ளது. மேற்குலகிலும் கிழக்கைரோப்பாவிலும் மற்றும் ஆசிய, ஆபிரிக்க, தென்அமெரிக்க, மூன்றாம்மண்டல நாடுகளிலும் அதிகளவான ஆண்களும் சிறுவர்களும் பால்வினைத்தொழிலில் ஈடுபடுவது இத்தேவையை ஏற்படுத்தியுள்ளது.

பால்வினைத்தொழில் குறித்து ஆய்வுசெய்யும் ஒருவர் விலைமகன், விபச்சாரன் என்ற சொற்களை உள்வாங்க வேண்டியிருப்பதுடன் ஆண்களைத் -தவிர்த்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாய்வினைச் செய்ய-முடியாதுள்ளது. இந்த அடிப்படையில் நோக்குகின்றபோது பால்வினைத்தொழில் குறித்த சமகாலப் பார்வையானது பரந்துபட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன்மூலம் இது ஒரு பெண்சார்ந்த பிரச்சனை என்பதற்கு அப்பால் ஒரு சமூகப்பிரச்சனையாக வியாபிப்பதுடன் அது குறித்த முக்கியத்துவத்தினையும் அதிகரித்து மரபுரீதியாக ஆண்ஆதிக்க சமுதாயத்தினால் பெண்கள் சார்ந்து மாத்திரம் குறுகிய அடிப்படையில் பரப்பப்பட்ட கருத்தாக்கத்தினைப் பொய்யாக்குவதாகவும் உள்ளது.

இன்றைய பால்வினைத்தொழில் முறையானது ஒழுங்கமைக்கப்பட்ட வகையிலும், ஒழுங்கமைக்கப்படாத வகையிலும் அதேவேளை சட்டரீதியானதாகவும், சட்டரீதியற்றதாகவும் செயற்படுகின்றது. அத்தோடு இன்றைய பால்வினைத் தொழிலானது ஆண்-பெண் பாலுறவுக்கும் அப்பால் பரந்துபட்ட கருத்தினைக் கொண்டதாக அமைகின்றது. இந்தவகையில் மூன்று வகையான பால்வினைத்தொழில் உறவு நிலவுகின்றது.

**1. ஆண்-பெண் முரண்பால் பால்வினைத்தொழில்**

**2. ஆண்-ஆண் ஒரேபால் பால்வினைத்தொழில்**

**3. பெண்-பெண் ஒரேபால் பால்வினைத்தொழில்**

இந்த வகைகளை உள்ளடக்கிய பால்வினைத் தொழில் குறித்த ஆய்வானது மரபுரீதியான ஆய்வின் மறுபக்கமாக அமைவதுடன் இத்தொழிலில் ஆண்களின் நேரடி, மறைமுக பங்களிப்பையும் வெளிக் கொணர்வதாக அமையும். இந்த இலக்கை அடைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பால்வினைத்தொழிலின் மறுபக்கத்தினைப் பார்ப்பதற்குச் சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் நிலவும் தொழில் முறைமையை விளங்கிக்கொள்வதன் மூலம் அதிக தகவல்களையும் அத்தொழில் மூலமான சமூகத்தாக்கங்களையும் அறிந்து கொள்ளமுடியும்.

## *2 - தாய்லாந்து :*

தாய்லாந்தில் அதிக பிள்ளைகளைக்கொண்ட குடும்பங்கள் பெண்பிள்ளைகளை பால்வினைத்தொழில் விடுதிகளுக்கு விற்பனை செய்கின்றனர். 12அல்லது 13 வயதான இந்தச்சிறுமிகள் வருடக்கணக்காகச் சிறைக்கைதிகள் போன்று அங்கு தங்கியிருந்து பால்வினைத்தொழிலில் ஈடுபடவேண்டியுள்ளது. ஒருவகையில் அவர்களுக்கு இது ஒரு மரண தண்டனையாகவே அமைகின்றது. மாதாந்தம் மேற்கொள்ளப்படும் எயிட்ஸ் பரிசோதனையில் அவர்களுக்கு எயிட்ஸ்நோய்ப்பாதிப்பு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். நவீன அடிமைகளாக நடாத்தப்படும் இந்த முறையில் இந்தச்சிறுமிகள் எயிட்ஸ் கிருமிகளைக் காவிக்கொண்டு தமது கிராமங்களுக்குத் திரும்புகின்றனர். அங்கு அவர்கள் இறக்கும்வரையும் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.

கோழிகளைப்போன்று கூடுகளில் அடைக்கப்பட்டுள்ள இந்தச்சிறுமிகள் ஆண்களின் ஆதிக்கத்திற்குப் பலியானவர்களாக உள்ளனர். குடும்பம் ஒன்றின் தீர்மானங்களை எடுப்பதில் தந்தை முக்கியம்பெறுகின்ற குடும்பஅமைப்பு முறையில் அவரின் தீர்மானத்தின்படியே அச்சிறுமிகள் விற்பனை செய்யப்படுகின்றனர். பால்வினைத்தொழில் விடுதிகளின் உரிமையாளர்களாகவும் ஆண்களே அதிகமாக உள்ளனர்.

இவர்களின் தலைவிதியை நிர்ணயிப்பதில் பௌத்தமதமும், அதன் பாரம்பரியமும் பெரும்பங்கு வகிக்கின்றன. எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுமிகள் பௌத்தமத கர்ம வினைக் கோட்பாட்டின்படி நியாயப்படுத்தப்படுகின்றனர். முற்பிறவியில் செய்யப்பட்ட வினையின்படி இத்தண்டனை கிடைத்துள்ளது என்றும், மறுபிறவியில் அவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்றும் ஆணாதிக்கப் பௌத்தமதம் நியாயப்படுத்துகின்றது. மறுபக்கத்தில் தந்தையினால் சிறுமிகள் விற்பனை செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ளும்சமூகம் இவ்வாறு சிறுவயதில் சிறுமிகள் குடும்பத்திற்கு உழைத்துக் கொடுப்பதைப் பெரும்பேறாகக் கருத வேண்டுமென்று தொடர்ந்தும் ஊக்கப்படுத்தி வருகின்றது.

**கியுபா:**

உலகின் மிகப்பெரிய திறந்தவெளி பால்வினைத்தொழில் விடுதியைக் கியுபாக்கடற்கரை கொண்டுள்ளது. மில்லியன்கணக்கான ஐரோப்பிய ஆண்கள் தனிநபர்களாக அங்கு வருடாந்தம் செல்கின்றனர். 2010ல்ஏழு மில்லியன் வெளிநாட்டவர்கள் கியுபா வருவார்கள் என்றும் அதன்மூலம் எட்டு பில்லியன் அந்நியச்செலாவணியை அது சம்பாதிக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. கியுபா அரசாங்கத்தின் கட்டுப்பாடான பொருளாதாரக்கொள்கையினால் மக்கள்பெறும்குறைந்த வருமானமும் அதன்மீதான பொருளாதாரத்தடைகளும் உல்லாசப்பிரயாணிகளில் தங்கியிருக்கவேண்டிய நிலையைக் கியுபாவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

இங்கு பால்வினைத்தொழிலானது தேசியவருமானத்தினை அதிகரித்துள்ளபோதும் மறுபக்கத்தில் கியுபாமக்களின் சமூகநலன் குறித்துக் கேள்வியையும் எழுப்பியுள்ளது 1999 லிருந்து கியுபாஅரசு பால்வினைத்தொழிலைக் கட்டுப்படுத்த எடுத்துவரும் கடுமையான நடவடிக்கைகளினால் உல்லாசப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரயாணிகளின் வருகை குறைவடைந்து உள்ளது. எனினும் இதனை அதிகரிக்க உல்லாசப்பிரயாண முகவர்நிலையங்கள் பகிரங்கமாகப் பால்வினைத் தொழிலை முதன்மைப்படுத்திப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன. **உங்கள் காதலை எங்களோடு கியுபாவில் தேட வாருங்கள்** என்று அந்த விளம்பரங்களில் கூறப்பட்டுள்ளது. மத்திய அமெரிக்க இளைஞர்கள் குழுக்களாக இயற்கைச்சுற்றுலா என்ற பெயரில் கியுபாவிற்கு கொண்டு வரப்படுகின்றனர்.

பெரிய விடுதிகளைவிடவும் தனியார் வீடுகளில் ஒருடொலருக்கு ஒருஇரவை ஒருபெண்ணுடன் கழிக்கக்கூடியதாக இருப்பதனால் விடுதி அறைகளுக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. இதனால் அங்கிகரிக்கப்பட்ட 4000 வீட்டு உரிமையாளர்களின் அனுமதியை அரசாங்கம் இரத்துச்செய்துள்ளது. தனியார்வீடுகளை வாடகைக்கு விடுவதிலும் பெண்களை வாடகைக்கு அமர்த்துவதிலும் ஐரோப்பிய, மத்திய அமெரிக்க ஆண்பிரயாண முகவர்களே முன்னணியில் இருப்பதாக சமூகவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 3- சுவிஸ்:

ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன்அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றைச் சேர்ந்த பெண்கள் மனைவியாக, காபரே நடனக்காரியாக, உல்லாசப் பிரயாணியாக மட்டுமே சுவிஸ்வர முடிகின்றது. இந்தப் பெண்கள் கணவன், தொழில் வழங்குபவர், பெண்தரகர்களில் தங்கியிருப்பதனால் சட்டரீதியான முழுமையான நன்மைகளை இவர்கள் பெறுவதில்லை.

மார்தா சாந்தோடொமிங்கோவைச் சேர்ந்தவர். இவர் குழந்தைகளுடன் தனியாக வாழும் ஒருதாய். தனது தாயாரின் நண்பி ஒருத்தியினூடாக சுவிஸில் பார்ஒன்றில் வேலைக்கு விண்ணப்பித்தார். குறிப்பிட்ட பெண் தமது குடும்பத்தின் நம்பிக்கைக்குரியவர் என்ற காரணத்தினாலும் தனது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் டொச˙மொழியிலான வேலை ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட்டார்.

சுவிஸில் நிர்வாணமாகக் காபரேநடனம் ஆடும்படியும் அங்குவரும் வாடிக்கையாளர்களுடன் மது அருந்துமாறும் அவள் முதலாளியால் கட்டாயப் படுத்தப்பட்டாள். இந்தத்தொழில் எதிர்பார்த்ததற்கு மாறாக அமைந்திருந்ததனால் அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இவற்றைச்செய்ய அவள் மறுத்ததுடன் பால்வினைத்தொழிலில் ஈடுபடவும் மறுத்தாள். தெற்கு கிழக்கு நாடுகளைச்சேர்ந்த பெண்கள் குடும்பச் சுமையைத் தாங்க வேண்டியிருப்பதனால் பின்விளைவுகளைப்பற்றிச் சிந்திக்கத் தவறுகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் மேற்குஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வீட்டுவெலை, குடும்பத்தாதி பாலியல்தொழில்களில் இடம்பெறுகிறது.

மார்தா கடன்பட்டு சுவிஸிற்கு வந்ததால் வேறுவழியின்றி இறுதியில் முதலாளியின் விருப்பை ஏற்கவேண்டியிருந்தது. இல்லையேல் அவள் வீட்டிற்குத்திரும்ப வேண்டிஏற்பட்டிருக்கும். 2200 பிராங்குகள் மாதச்சம்பளமாக அவளுக்கு வழங்கப்பட்டது. காபரே ஆடியபோது ஒரு சுவிஸ்காரர் அவளுக்கு அறிமுகமானார். மீட்பராகக்காணப்பட்ட அவரை நம்பித்தொழிலை விட்டுத்திருமணம் செய்ய அவள் சம்மதித்தாள். ஒருசிறிய வீட்டில் கிராமம் ஒன்றில் குடியேறினார்கள். மிகக்குறுகிய காலத்தில் அவர் தன்னை, வீட்டு வேலைக்காரியாகவும் பால்வினைத்தொழிலாளியாகவும் நடாத்துவதை அவளால் உணரமுடிந்தது. அவளது வெளித்தொடர்புகளுக்கு தடைவிதிக்கப் பட்டதுடன் டொச்மொழி கற்கவும் அவள் அனுமதிக்கப்படவில்லை. அவனது விருப்பத்திற்கு இணங்காதபோது தாக்கப்பட்டாள்.

மார்தாவிற்கு இப்போதுள்ள தெரிவு கடன்சுமையோடு வீடு திரும்புவதா? அல்லது சுவிஸில்

வேலை அனுமதியை இழப்பதா? என்பதாகும் சுவிஸ்காரரைத் திருமணம் செய்தஅவள் ஐந்து ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தாலேயே வேலை அனுமதியை நீடிக்க முடியும். இந்த விவகாரத்தில் மார்தாவைத்தவிர சம்பந்தப்பட்ட அனைவருமே நன்மையடைந்துள்ளனர். சட்டம் இன்னும் அவர்களுக்கே சாதகமாய் உள்ளது.

### விலங்கிடாப் பெண்

நீயாகவே
சிறைகொள் நினைத்த மனதை முகங்கொள்ள
வெறுத்த எனக்காய்
நீ தந்த உபாதைகளை உதறி உதறி தோற்றுப்
போனேன்!
இளமை கரைந்து விரைந்துசாக்காட்டுப்
பொழுதுகளோடு
சல்லாபித்துக் கொண்டிருக்கும் எனக்காக தரும்?
இந்த அரை வேக்காடுகள்
வேண்டியவையே!விரும்பு என்ற வேதனையை
உனைச்சுட்டுக் கொண்டிருப்பதால்உன் மனதை
உன்னிடம் ஒழித்துஅளைந்து விளையாட
நாளென்னமண்ணா? விலங்கிடாப் பெண்
உன்வேட்டுக்களை வேணுமானால் கல்லறையில்
காணிக்கைபோடுஒரு காதலற்ற மனுசிக்காக!
இங்கே விடுதலை விரும்பிய வேட்கை உறக்கம்
விலங்கிட தடுத்த தேவேதனை ராகக்கூவலோடு
கால்நூற்றாண்டு அவிந்தும் ஆறாத
அலங்காரத்னோடும்! இரும்பும் வைரமும்
இணைந்தவள் என்றதான உன் உபாதைகள்
வேட்டுகளோடும் ! உன் உவமைப் பெயரோடும்
வேணுமானால் கல்லறையில் காணிக்கைபோடு!

*கவி கோசல்யா சொர்ணலிங்கம்*
*-யேர்மனி*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால்வினை

-சந்திரவதனா செல்வகுமாரன்-



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்து, இந்தியா, பாபிலோனியா, கிறீஸ் ஆகிய நாடுகளில் விபச்சாரம் ஒரு தொழிலாக அங்கீகாரம் பெற்று விட்டது.

மெஸ்படோமியாவில் கி.மு.2300 இல் விலைமாதுக்கள் சுறுசுறுப்பாக தொழிலில் ஈடுபட்டதாகவும் குறிப்புகள் உண்டு. ஏதென்ஸ் நாட்டில் சட்டமேதை ஸோலன், சிவப்புவிளக்குப் பகுதிகள் இயங்குவதற்குச் சட்டத்தில் வழிவகுத்தார்.

18ம் நூற்றாண்டில்தான் இங்கிலாந்தில் விபச்சாரம் வெளிப்படையாகத் தலையெடுத்தது. அங்கு இராணுவத்துக்கும், பங்கு மார்க்கெட்காரர்களுக் கும் அவர்கள் பிரத்தியேகமாக விலைமாதர்களை நியமித்தார்கள். அந்த விலைமாதர்களிடம் மற்றையவர்கள் போகமுடியாது.

தற்போது இந்த 21ம் நூற்றாண்டில் வெளிப்படையான அதாவது அங்கீகாரத்துடனான விபச்சாரமும் அங்கீகாரமற்ற அனுமதியில்லாமல் செய்யப்படும் விபச்சாரமும் மிகவும் மலிந்து கொட்டிக் கிடக்கின்றன.

பின்லாந்தில் விபச்சாரம் தவறான கண்கொண்டு பார்க்கப்படுவதே இல்லை.

இங்கு யேர்மனியில் பல இடங்களில் அங்கீகாரம் பெற்ற விபச்சார விடுதிகள் இருந்தாலும், அங்கீகாரம் பெறாத விபச்சார விடுதிகள் அதை விட அதிகமாய் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவனையில் இல்லாத வீடுகள் கூட இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளில் ஏறக்குறைய 400000 பெண்கள் பால்வினைத் தொழிலில் ஈடுபட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பால்வினைத் தொழில் செய்பவர்களில் இரண்டு வகையினர் இருக்கிறார்கள்.

ஒரு வகையினர் தாமாக விரும்பி இத்தொழிலில் ஈடுபடுபவர்கள்.

இரண்டாவது வகையினர் கட்டாயத்தின் பேரில் ஈடுபடுத்தப்படுபவர்கள்.

இந்த முதலாவது வகையினரில் பாடசாலைப் பிள்ளைகளும் பல்கலைக்கழகப் பிள்ளைகளும் அடங்குவர். அம்மா அப்பாவிடமிருந்து கிடைக்கும் பொக்கற் மணி போதாத பட்சத்திலும் படிப்பதற்கான செலவுகளைச் சமாளிக்க முடியாத பட்சத்திலும் - வேறு வேலைகள் செய்வதை விட இந்த வேலையில் சுலபமாகப் பணத்தைச் சம்பாதித்து விடலாம் என்பது இவர்கள் கருத்து. இவர்கள் பெரும்பாலும் வீதிகளின் ஓரங்களில் காத்து நின்று, தம்மை இனம் காட்டுவார்கள். இவர்களில் ஓரளவு வசதி படைத்தவர்கள் அதை விட வசதியான வாழ்க்கைக்காக பாடசாலை விடுமுறைக்கு உல்லாசப் பயணிகள் நிறைந்த பணக்கார நாடான சைப்பிரசுக்குச் சென்று பால்வினை செய்து சம்பாதித்து வருவார்கள்.

இரண்டாவது வகையினர் கூடுதலாக போலந்து, செக்கொஸ்லொவோக்கியா, உக்ரையின் போன்ற நாடுகளிலிருந்து தரகர்களால் கடத்திக் கொண்டு வரப்பட்டு கட்டாயப் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இப்படி கடத்தி வரப்படுபவர்கள் விரும்பினால் கூட மீள முடியாத படி -துப்பாக்கி முனையிலும், குண்டர்கள் மத்தியிலும் காவல் வைக்கப் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் பணமும் மிகவும் சொற்பமே. இவர்களின் உடலுக்காகக் கிடைக்கும் பணத்தில் 70 வீதத்தைத் தரகர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். மிகுதி 30 வீதமே இவர்களிடம் கொடுக்கப் படுகிறது.

இது ஒரு துன்பியல் நிறைந்த நரக வாழ்க்கை. கட்டாயத்தின் பேரில் ஒருத்தி தன் உடலை ஒருவனின் இச்சைக்கு இரையாக்க பெண்களை நாடு கடத்தி விற்கும் இடைத் தரகரும், பெண்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து இச்சை தீர்க்க வரும் ஆண்களுக்கு பெண்களைக் காட்சிப் பொருளாகக் காட்டிப் பேரம் பேசி சிலமணி நேரங்களுக்கோ அல்லது ஒரு இரவுக்கோ வாடகைக்கு விடும் தலைமைத் தரகரும் அதில் பணம் சம்பாதிக்கும் அவலம் மிகவும் கொடுமையானது.

அனேகமான கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வாலிப வயதுப் பெண்கள் நினைக்கிறார்கள் யேர்மனி பணக்காரநாடு. அங்கு போனால் நல்ல வேலையுடன் வசதியாக வாழலாமென்று. அதனால் பத்திரிகைகளில் வேலைக்கான விளம்பரங்களைத் தேடி யேர்மனியின் உணவு விடுதிகளில் உணவு பரிமாறுபவருக்கான வேலைக்கோ, அல்லது பிள்ளைகளைப் பராமரிக்கும் பேபிமைண்டர் வேலைக்கோ அல்லது இது போன்ற இன்னும் வேறு வேலைகளுக்கோ விண்ணப்பிக்கிறார்கள். இது கூடுதலாகத் எமது தாயகத்திலிருந்து சவுதி போன்ற கிழக்கு நாடுகளுக்கு வேலை தேடிப் போகும் எமது தமிழ் சிங்களப் பெண்கள் செய்வது போன்ற ஒரு ஒப்பந்தத்துடனான ஒரு வருட அல்லது இன்னும் கூடிய காலங்களுக்கான வேலையாகவே கருதப் படும்.

ஆனால் தாமும் பணம் சம்பாதிக்கும் காலம் ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் இப்படி விண்ணப்பித்து வேலைக்கென யேர்மனிக்கு வந்து சேரும் வாலிபவயதுப் பெண்களுக்கு யேர்மனியில் காத்திருப்பது ஒரு பயங்கரமான, அருவருப்பான துயரம் தோய்ந்த எதிர்காலமே!

கூடுதலாக பேர்லினிலோ அல்லது ஸம்பேர்க்கிலோ தான் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான இடம் ஒதுக்கப் பட்டிருக்கும். அங்கு சென்ற பின்தான் அவர்கள் கட்டாய பால்வினைத் தொழில் செய்ய வேண்டுமென்பது அவர்களுக்கு விளங்கப் படுத்தப் படும். அவர்கள் அதற்கு மறுக்கும் பட்சத்தில் பலாத்காரப்படுத்தி பால்வினைத்தொழிலில் ஈடுபடுத்தப் படுவார்கள். இதிலிருந்து அவர்கள் மீள்வதற்கு வாய்ப்பே இல்லை. கடத்தி வந்தவர்களைக் காவலில் வைத்திருப்பது போலவே இவர்களும் தப்பியோட முடியாத படி துப்பாக்கி முனைகளும் குண்டர்களும் காவலுக்கு நிற்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக - இப் பெண்கள் தப்பியோடினால் அவர்களது தாய்நாட்டில் இருக்கும் அவர்களது பெற்றோர்களும் சகோதரர்களும் துன்புறுத்தப் படுவார்கள், அல்லது கொலை செய்யப்படுவார்கள் என்று சொல்லிப் பயமுறுத்தப் படுவார்கள். இந்திய தமிழ் சினிமாக்களில் வரும் பிளாக்மெயில் தனமான வில்லத்தனம் போலவே அந்தப் பயமுறுத்தல் இருக்கும். இந்தத் தரகர்கள் கொடுக்கும் இப்படியான அதீதமான அழுத்தங்களினால் பொலீசிடம் போய் முறையிடும் துணிவு கூட இந்தப் பெண்களுக்கு இல்லாது போய்விடும். அதுமட்டுமல்லாமல் இந்த விபச்சார விடுதிகளை நடாத்துபவர்களின் முறைப் படி தலைமைத் தரகரால் அப் பெண்கள் சில இரவுகிளப்புகளுக்கும் அரைகுறை ஆடைகளுடனோ அல்லது ஆடைகளே இல்லாமலோ நடனமாட கட்டாயமாக அனுப்பி வைக்கப் படுவார்கள்.

பல பெண்கள் உக்ரையின், லிற்றவ்வன், லெற்லாண்ட், ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து விசாவுக்கென ஏஜென்சியிடம் 1500டொச்சமார்க் கொடுத்து எதிர்காலத்தைப் பற்றியதான பலத்த நம்பிக்கையுடன் இங்கு யேர்மனிக்கு வந்து சேருகிறார்கள். ஆனால் இங்கே வந்ததும் தான் தாம் ஏஜென்சியால் ஏமாற்றப் பட்டதை உணர்ந்து தெரிந்து நம்பிக்கைகள் எல்லாம் தவிடு பொடியாக மனமுடைந்து ஆனாலும் விடுதலையோ அதை விட்டு வெளியேற ஒரு வழியோ தெரியாமல் துவண்டு போகிறார்கள். இவர்களைக் கூட்டி வந்த தரகர்கள் இவர்களை விபச்சார விடுதிக்கு விற்பனை செய்வார்கள். இவர்களின் பெறுமதி சிலசமயங்களில 25000யூரோ வரை கூட உயர்ந்திருக்கும். உக்ரையின் நாட்டுப் பெண்கள் அழகானவர்களாம். அவர்கள்தான் அதிகம் விலை போவார்கள். இடைத் தரகர் அந்தப் பணத்தை முக்கிய தரகரிடம் பெற்றுக் கொண்டு போன பின்னர் அந்த முக்கிய தரகர் தான் கொடுத்த 50000யூரோவையும் இந்தப் பெண்களிடமே பெற்றுக் கொண்டு விடுவார். அதாவது இந்தப் பெண்கள் தமது உடலை இன்னொரு ஆடவனின் இச்சைக்கு இரையாக்கும் போது வரும் பணத்தில் அந்த 50000யூரோ கணக்கு வைத்துக் கழிக்கப்படும். எப்படியானதொரு கொடுமை இது என்பது எத்தனை பேருக்குப் புரியும். புரிந்த ஆண்கள் கூட தமது இச்சை தீர்ந்தால் போதுமென்ற எண்ணத்துடன் இப்படியான சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குச் சென்று இந்தக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுமைகளுக்கு உரமும் வலுவும் கொடுப்பது எத்துணை அவலமானது.

யேர்மனியில் மட்டும் ஒரு நாளைக்கு பத்துஇலட்சம் ஆண்கள் பால்வினைதொழிலாளர்களிடம் போய் வருகிறார்களாம்.

இதே நேரம் எல்லாப் பெண்களுமே கடத்தப் பட்டு பலாத்காரத்தின் பேரில்தான் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. போலந்து, செக்கொஸ்லொவோக்கியா போன்ற நாட்டுப் பெண்களில் பலருக்கு இங்கு யேர்மனியில் வேலை என்ற பெயரில் என்ன காத்திருக்கிறது என்பது தெரியும். ஆனாலும் வறுமை, எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் போன்ற காரணங்களால் யேர்மனிக்கு வந்து இத்தொழிலில் ஈடுபடுகிறார்கள். சில காலங்களுக்கு உழைத்து விட்டு, அந்தப் பணத்துடன் தாய் நாடுகளுக்குத் திரும்பி நல்லதொரு வசதியான வாழ்வைத் தொடங்கலாம் என்பது அவர்களது நம்பிக்கை நிறைந்த ஆசை. அதற்காக ஏஜென்சிக்கு 750யூரோ கொடுத்து சட்டத்துக்கு முரணாக விசா பெற்று அவர் மூலமாகவே இங்கு யேர்மனிக்கு வந்து சேர்ந்து பால்வினைத் தொழிலை பணத்துக்கான ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். இப்படித் தாம் விரும்பி இத்தொழிலில் ஈடுபடும் கிழக்கு ஐரோப்பியப் பெண்கள் 30 வீதமானவர்கள் மட்டுமே! மிகுதி 70 வீதமான கிழக்கு ஐரோப்பியப் பெண்களும் ஏஜென்சிமார்களால் ஏமாற்றப்பட்டு அழைத்து வரப்பட்டு விபச்சார விடுதி நடத்துனர்களாலும், இரண்டாவது தரகர்களாலும் கட்டாய பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டிருப்பது யேர்மனிய அரச நிறுவனங்களால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.



இந்த இரண்டாவது வகைப் பால்வினைத்தொழில் செய்யும் பெண்களில் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற ஆசிய நாட்டுப் பெண்களும் அடங்குவார்கள். இவர்கள் பெரும்பாலும் ஐரோப்பிய ஆண்களால் ஏமாற்றப் பட்டே இங்கு அழைத்து வரப் படுகிறார்கள். ஐரோப்பிய ஆண்கள் இந்தக் கொடுமையைச் செய்வதற்கென்றே உல்லாசப் பயணிகளாக தாய்லாந்து பிலிப்பைன்ஸ் சீனா போன்ற நாடுகளுக்குப் போகிறார்கள். அங்கு வறிய அழகிய பெண்கள் மேல் காதல் கொண்டது போல நடித்து, திருமணம் செய்வதாகப் பொய் சொல்லி இங்கு கூட்டி வந்து பால்வினைத் தொழிலில் கட்டாயமாக ஈடுபடுத்துகிறார்கள். இந்த ஆண்களில் பெண்களை இங்கு கொண்டு வந்து விற்பவர்களும் இருக்கிறார்கள். சொந்தமாகவே விபச்சாரவிடுதி வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். அதை விட பெண்களை ஏமாற்ற முடியாத பட்சத்தில் கடத்தியும் கொண்டு வருகிறார்கள். கடத்தலுக்கு இடைத்தரகராக நின்று உதவி செய்பவர்கள் பெரும்பாலும் தாய்லாந்து பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆண்களாகவே இருக்கிறார்கள்.

சீனாவைச் சேர்ந்த ஒரு பால்வினைத்தொழிலாளி சொல்கிறார்.

நான் எனக்குப் 17 வயதாக இருந்த போது எனது ஒன்று விட்ட சகோதரியுடன் வேலை எடுத்துத் தருவதாகச் சொன்ன ஒரு உறவு மாமாவுடன் பஸ் ஏறினேன். நான்கு மணித்தியாலப் பயணம் என்றார் மாமா. ஆனால் நான்கு நாட்கள் காடுகள் மேடுகள் கடந்த பயணம் அது. அது கடத்தல் என்று தெரிய முன்னமே பயத்தில் வீடு திரும்ப மன்றாடினேன். மாமா விடவில்லை. பர்மா எல்லையில் நாமிருவரும் விலைபேசப் பட்டோம். அவர்கள் எம்மை ஒரு சட்டைத்துணி போல ஒரு ரவிக்கை போல ஆராய்ந்து பார்த்தார்கள். கன்னி கழியாமல் இருக்கிறோமா என்பதைக் கூட கவனமாக ஆராய்ந்தார்கள்..... இப்போ நான் இந்த வாழ்வில் இருந்து மீளமுடியாதவளாகி விட்டேன். - என்று -

கடந்த வாரம் 2002 மாசி பிற் பகுதியில்) பேர்லினில் அங்கீகாரம் பெற்ற ஒரு பால்வினைத் தொழிலாளர் விடுதியில் ஏறக்குறைய 1000 வெளிநாட்டுப் பெண்கள் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும் அவர்களால் அவர்களை வாடிக்கையாளர்களிடம் வாடகைக்கு விடும் தலைமைத் தரகர்கள் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிப்பதும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இந்தப் பெண்கள் பாதிக்கப்-பட்டவர்களாகவே கண்டு கொள்ளப்பட்டார்கள்.

சிலபெண்கள் - இவர்களைப் பெண்கள் என்று சொல்வதை விட சிறுமிகள் குழந்தைகள் என்று கூடச் சொல்லலாம். அவ்வளவு இளம் வாலிப வயதுப்பெண்கள் இவர்கள். - தரகர்களிடம் முரண்படும் சமயங்களில் தரகர்களால் அடித்துத் துன்புறுத்தப் படுகிறார்கள்.

பேர்லினில் இந்த வருட பெப்பரவரி மாத இறுதியில் ஒரு ரஷ்ய இளநங்கை மிகவும் கொடுமைப் படுத்தப் பட்ட நிலையில் பொலீசாரால் விடுவிக்கப் பட்டிருக்கிறாள்.

இவளை 3 ரஷ்யர்கள் 8மணி நேரமாகத் தொடர்ந்து பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அந்த ரஷ்யர்களில் ஒருவருக்கு அன்று பிறந்தநாளாம். அதைக் கொண்டாடு முகமாகவே அந்த இளநங்கை சித்திரவதை செய்யப் பட்டிருக்கிறாள்.

எல்லோரும் நினைப்பது போல போலந்து நாட்டையோ ரஷ்ய நாட்டையோ சேர்ந்த தரகர்கள்தான் பெண்களை கட்டாய பால்வினைத்தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள் என்று சொல்வதற்கில்லை.

பெரும்பாலான விபச்சார விடுதிகளின் சொந்தக் காரர்களும், தலைமைத் தரகர்களும் யேர்மனியர்களாகவே இருக்கிறார்கள். ரஷ்சியர்கள் அனேகமாக இடைத் தரகர்களாகத்தான் இருக்கிறார்கள்.

விபச்சார விடுதிகளிலும் தரகர்கள் மத்தியிலும் பெண்கள் கடைச்சரக்குகளாகத் தான் பாவிக்கப் படுகிறார்கள். இந்தப் பெண்களுக்குக் கிடைக்கும் பணமும் மிகவும் குறைவானதே. சராசரியாக அரை மணித்தியாலத்துக்கு ஒரு அறைக்கு 50யூரோ என்றே வசூலிக்கப் படுகிறது. இதில் அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரைமணி நேரமும் யாரோ ஒரு காமுகனின் இச்சைக்கு எந்த உணர்வுகளுமின்றிய ஒரு ஜடம் போல தன் உடலை பலியாக்கிய பெண்ணுக்குக் கிடைப்பது வெறும் 15யூரோ மட்டுமே.

கூடுதலான பெண்கள் தமக்குக் கிடைக்கும் இப்பணத்தைச் சேமிக்கிறார்கள். சில பெண்கள் இதைத் தாய் நாட்டில் வறுமையில் வாழும் தமது தாய்தந்தையருக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் இவர்கள் இந்தப் பணத்தை பெற்றோருக்கு அனுப்புவதைத் தவிர்த்து சேமிக்க வேண்டுமென தலைமைத் தரகர்களால் வற்புறுத்தப் படுகிறார்கள்.

ஏனெனில் இவர்கள் ஒரு யேர்மனிய ஆணை மணமுடிக்கும் பட்சத்தில்தான் விசாப் பிரச்சனையின்றி தொடர்ந்தும் யேர்மனியில் வாழ்வதற்கான வாய்ப்பும், இவர்களின் உடல்கள் மூலம் தரகர்கள் பணம் சம்பாதிப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கிறது.

ஒரு பால்வினைத்தொழிலாளியை திருமணம் செய்து கொள்ள ஒரு யேர்மன் ஆண் 7500யூரோ வை எதிர்பார்க்கிறான்.அப்பணத்தை இப்பெண்களே சேமித்து, ஒரு யேர்மனிய ஆணைத் திருமணம் செய்து தமக்கு உழைத்துத் தர வேண்டுமென இவர்கள் தரகர்களால் கட்டாயப் படுத்தப் படுகிறார்கள்.

இது ஒரு அடிமைத் தனம். முற்காலத்தில் மனிதர்கள் விற்கப் பட்டு அடிமைகளாக வாழ்ந்தது போன்றுதான் இன்றைய பால்வினைத்தொழிலாளர்களும் வாழ்கிறார்கள். இவர்களின் உணர்வுகள் மதிக்கப் படுவதில்லை. பெரும்பாலான சமயங்களில் தரகர்களால் மிதிக்கப் படுகிறார்கள். தரகர்களால் மட்டுமல்ல. உடலுறவு பணத்துக்காக என்பதால் இவர்களிடம் வரும் வாடிக்கையாளர்கள் என்ன செய்தாலும் வாய் பேசாது வலிகளைத் தாங்க வேண்டிய அவலத்திலும் இருக்கிறார்கள். எந்த உண்மையையும் வெளியில் சொல்ல தைரியமில்லாத படி அச்சப் படுத்தியே வாழ வைக்கப் படுகிறார்கள்.

இந்த விலைமாதர்கள் மீது அங்கு வந்து போகும் வாடிக்கையாளர்களில் யாருக்காவது விருப்பமோ காதலோ வந்தால், விலைமாதின் வயதுக்கும், உடல்வாகுக்கும், அழகுக்கும் முக்கியமாக அவளால் விடுதிக்கும் தரகருக்கும் வரும் வருமானத்துக்கும் ஏற்ப பேரம் பேசப்பட்டு அவள் வாடிக்கையாளருக்கு விற்கப் படுவாள். அவள் தன்னை ஒரு கடைச்சரக்காக, அழுக்குத் துணியாக உணர்ந்து கொண்ட போதும், அவளின் பெறுமதி பல்லாயிரக்கணக்காக இருக்கும். அவளின் இந்தப் பெறுமதி 25000யூரோ வைக் கூடத் தாண்டியிருப்பதாக பேர்லினைச் சேர்ந்த பெண்கள் சங்கத்துக்கான காரியதரிசி Helga Korthaase சொல்கிறார்.இவர்களில் ஓரிருவர் வாடிக்கையாளர்களால் நிஜமாகவே காதலிக்கப் பட்டு விடுதலை பெற்று குடும்பம் குழந்தையென்று வாழும் நிகழ்வுகளும் அபூர்வமாக நடந்துள்ளன.

இந்த வருட ஆரம்பத்தில் பால்வினைத் தொழிலாளர்கள் தமது பால்வினைத்தொழிலை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றதொரு சட்டம் யேர்மனியில் அமுல் படுத்தப்பட்டது. பதிவு செய்வதால் அவர்களுக்கான எல்லா காப்புறுதிகளும் செய்யப் பட்டு - அவர்களது எதிர்காலம் செழுமைப் படுத்தப் படும் என்பதும் பதிந்து பால்வினைத் தொழிலைச் செய்யும் போது தரகர்களினதும் பால்வினைத்தொழிலாளர்விடுதி நடத்துனர்களதும் அவர்கள் மீதான அராஜகம் தவிர்க்கப்படும் என்பதும் யேர்மன் அரசின் நம்பிக்கையான நன்நோக்கம். இந்தக் காப்புறுதிகளில் சுகவீனக்காப்புறுதி, பென்சன்காப்புறுதி..... போன்ற பல நல்ல விடயங்கள் அடங்குகின்றன.

ஆனாலும் இதுவரையில் எந்தப் பால்வினைத் தொழிலாளரும் வந்து இதற்கான அலுவலகத்தில் தம்மைப் பதிந்து கொள்ளவில்லையென இவர்களுக்கான சட்டங்களுக்கும் தேவைகளுக்கும் பொறுப்பான Juanita Henning கவலை தெரிவித்துள்ளார்.

இதற்கு ஒரு பால்லினைத்தொழிலாளி கொடுத்த பதில் பத்திரிகைச் செய்தியாக வந்துள்ளது. அவர் கூறுவதாவது - பால்வினைத்தொழிலில் நேரடியாகப் பணத்தைப் பெற்றுக் கொள்வதால் அந்த வேலை செய்பவர்களை மற்றைய வேலைகள் செய்பவர்கள் போலக் கருதாமல் ஒரு வர்த்தக நிறுவனம் வைத்திருப்பவர் போலவே கருதுகிறார்கள். அதனால் அதற்காக வசூலிக்கப் படும் வரிகளும் வர்த்தகர்களுக்குப் போலவேதான் வசூலிக்கப் படும். அதாவது ஒரு பாலியல்தொழிலாளி ஒருநாளைக்கு 250யூரோ உழைப்பதாகக் கணக்குப் போட்டு அதன் படியே எல்லா வரிகளும் காப்புறுதிகளுக்கான பணங்களும் அறவிடப்படும். இது மிகவும் அதிகம். -

இதன் காரணமாக நானுறுஆயிரம் பால்வினைத் தொழிலாளர்களில் ஒருவர் கூடப் பதிந்து கொள்ள முன்வரவில்லை.

இந்த பால்வினைத்தொழில் யேர்மனியில் மட்டுந்தான் என்று சொல்வதற்கில்லை. உலகளாவப் பரந்து கிடக்கிறது.

மேற்கு ஆபிரிக்காவில் உள்நாட்டுச் சண்டை காரணமாக கென்யா, சீராலியோன்.... போன்ற நாடுகளிலிருந்து தப்பியோடி வரும் பெண்குழந்தைகள் அவர்களுக்கான உதவி நிறுவனங்களில் வேலை செய்பவர்களாலேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டு பின்னர் பால்வினைத் தொழிலாளர்களாக்கப் படுகிறார்கள். பெண்குழந்தைகள் பாலுறவுக்கு இணங்கும் பட்சத்திலேயே அவர்களுக்கு உண்ண உணவும், நோய்களுக்கான மருந்தும் உதவி நிறுவனங்களில் வேலை செய்பவர்களால் வழங்கப் படுகிறது.

கிட்டத்தட்ட 40 நிறுவனங்களில் வேலைசெய்யும் 70 பேர்கள் இந்தத் துர்வேலை செய்து கொண்டிருந்ததை UNO உதவி நிறுவனம் கண்டு பிடித்துள்ளது.

இதற்கு ஃபறீ ரவுணைச் சேர்ந்த ஒரு பெண் சொல்கிறார். - இது ஒன்றும் புதிதல்ல. இங்கு உதவி நிறுவனங்களில் வேலை செய்பவர்களுடன் பாலுறவு கொள்வதால்தான் அகதிகளாகத் தப்பியோடி வந்த சிறுமிகள் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள். - என்று.

UNHCR சொல்கிறது.

ஆபிரிக்காவில் மிகவும் பாதிக்கப் படுபவர்கள் குழந்தைகளே. இவர்களில் 18 வயதுக்குட்பட்ட பெண்குழந்தைகள் முதலில் இராணுவத்தாலும் பின்னர் உதவி நிறுவனங்களில் வேலை செய்பவர்களாலும் பாலியல் துர்ப்பிரயோகத்துக்கோ அல்லது பாலியல் வல்லுறவுக்கோ உட்படுத்தப்படுகிறார்கள் அதன் பின்னர் உணவு உடை மருந்து பாடசாலை போன்றவற்றுக்காக பாலுறவுக்கு வற்புறுத்தப்படுகிறார்கள்.

அதன் பின் பால்வினைத் தொழிலாளர்களாக்கப் படுகிறார்கள். - என்று சொல்கிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகமயமாக்கலும் தென்கிழக்காசியாவின் பால்வினை வர்த்தகமும்

*-.சிந்துக்கரையாள்....-*

இக்கட்டுரை People's Solidarity for Social Progress (PSSP) என்னும் மாதாந்த சஞ்சிகையின் மார்ச் 2001 இதழில் கொரிய மொழியில் வெளியாகியுள்ளது.



கட்டுரையாளர் மின் சூய் (Min Choi) PICIS (Policy and Information Center for International Solidarity), Third World Against Globalization குழுவின் செயற்பாட்டாளர்களில் ஒருவர்.

2000ம் ஆண்டு செப்டெம்பர் மாதம், தீயினால் ஏற்பட்ட விபத்து குன்சான் (Kunsan) இல் உள்ள பால்வினைத் தொழிலாளர் விடுதியை சாம்பலாக்கியது. இந்த விபத்தின்போது கொரிய பால்வினைத் தொழிலாளர்களும் அதனுள் இருந்தார்கள். இந்தத் தீ விபத்தும் அந்தப் பெண்களின் மரணமும் நாடு முழுவதும் உண்மையில் அதிர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது. ஆனால், அத்துடன் இந்தப் பெண்கள் மேற்கொண்டிருந்த - மனிதர்கள் வசிப்பதற்கும் கீழான - வாழ்க்கைத் தரத்தைப் பற்றியும் மிகவும் அதிர்ச்சியடைந்தார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், இந்த குன்சான் பெண்கள் சிறை வைக்கப்படல், அவர்கள் மீதான வன்முறை, சுரண்டல் என்பவை கொரியாவில் மட்டுமல்ல, ஆனால் ஆசியா மற்றும் உலகின் அனைத்துப் பாகங்களிலும் பரவிக் கிடக்கின்றது.

இந்தப் பெண்கள் - சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் ஏற்கனவே நலிந்தவர்கள் - இவர்கள்தான் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள். எதனாலென்றால்: பல்தேசியக் கம்பெனிகளினதும் செல்வந்த நாடுகளினதும் இலாபத்தை உச்சமாக்குவதற்கு சர்வதேச நிதிநிறுவனம் (IMF) கொண்டு வரும் மீளமைப்புத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டங்கள், உலகவங்கிக்கான கடன், சுதந்திர வர்த்தகம், உலக வர்த்தக அமைப்பு திணிக்கும் விதிகளை இல்லாதொழித்தல் என்பனவற்றினால். உலகளாவிய மூலதனமானது, மலிவான இன்னும் பணிவான உழைப்புக்காக, உள்ளூர் பெண்களைச் சுரண்டுவதற்கும் அல்லது வறுமையில் இருந்து தப்புவதற்காக செல்வந்த நாடுகளிற்கு புலம் பெயர்ந்த பெண்களைச் சுரண்டுவதற்கும் உலகத்தைச் சுற்றி அலைந்து திரிகின்றது. பால்வினைத் தொழிலாளர்களைச் சுரண்டுவதென்பது இந்தப் பெண்களுக்கிடையில், உரிய விகிதத்தில் அமையாத மட்டங்களை அடைந்துள்ளது. ஒரு நாட்டில் மட்டும் முற்றுமுழுதாக செயற்படும் பால்வினைத் தொழில் என்பது இப்போது இல்லாது போய்விட்டது என்னும் உண்மையில் இருந்து, இன்றைய பால்வினை வர்த்தகம் முன்னைய காலங்களில் இருந்த நிலையில் இருந்து வேறுபடுகின்றது. ஆனால் இது உலகரீதியான வலைப்பின்னலைத் தோற்றுவிக்கும்படி வியாபிக்கின்றது. பால்வினை வர்த்தகம் என்பது எண்ணிக்கையில் மட்டும் அதிகரிக்கவில்லை. ஆனால் வன்முறை, சட்டத்திற்குப் புறம்பான கடத்தல், அடிமைத்தனம் என்பனவற்றிற்கு முகம் கொடுக்கும் அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட பெண்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருப்பது உழைப்பின் சர்வதேசப் பிரிவுடன் சம்பந்தப்பட்டிருத்தல் என்பது உலகமயமாக்கலின் மூலம் கொண்டு வரப்படுகின்றது. உலக மயமாக்கலின் விளிம்புகளில் வைக்கப்பட்டிருக்கும் மூன்றாம் உலகநாட்டுப் பெண்களுக்கு இந்தத் தொழில் அவர்களது உயிர் காப்பாற்றுவதற்கான ஒரு வழியாகின்றது.

### தென்கிழக்காசியா - சர்வதேச பால்வினை வர்த்தகத்தின் மையம்.

"பால்வினை வர்த்தகம்" என்ற சொல் உச்சரிக்கப்படும்பொழுது, உடனடியாகவே தென்கிழக்காசியா நினைவுக்கு வருவதில் இருந்து, இந்தப் பிராந்தியத்தில் உள்ள பிரச்சினையின் முக்கியத்துவத்தை காண்பிக்கின்றது. கிட்டத்தட்ட 200 000 ஆயிரம் தொடக்கம் 250 000 வரையான தென்கிழக்காசிய பெண்களும் சிறுவர்களும் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றார்கள். இது உலகரீதியான சட்டபூர்வமற்ற சர்வதேசக் கடத்தலின் மூன்றிலொரு பங்காகும். இதில் 60சதவிகிதமானவர்கள் இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு விற்கப்படுகின்றார்கள். மிகுதி 40 சதவிகிதமானவர்களும் உலகின் ஏனைய பாகங்களிற்கு விற்கப்படுகின்றார்கள். அமெரிக்காவுக்கு விற்கப்படும் 40 000 தொடக்கம் 80 000 வரையிலான பெண்களிலும் சிறுவர்களிலும் 60 வீதமானவர்கள் தென்-கிழக்காசியாவைச் சேர்ந்தவர்கள். 1990க்கும் 1997க்கும் இடையில் 200 000 பெண்கள் பங்களாதேக்ஷில் இருந்து இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றிற்கு சட்டத்திற்குப் புறம்பான முறையில் கடத்தப்பட்டிருக்கின்றார்கள். இந்தியாவில் உள்ள பால்வினைத் தொழில் விடுதிகளில் ஏறக்குறைய 16 000 நேபாளப் பெண்களும், பெண்பிள்ளைகளும் தொழில் புரிகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் 200 நேபாளப் பெண்கள் இந்திய நகரங்களுக்குள் செல்கின்றார்கள். 1990களில் மியன்மார், லாவோஸ், கம்பூச்சியா போன்ற நாடுகளில் இருந்து பெண்கள் தாய்லாந்துக்கு ஓடத் தொடங்கினார்கள். இப்பொழுது சியன்மாயில் 50%மான பால்வினைத் தொழிலாளர்கள், மியன்மார் காடுகளிலிருந்தும் வறுமைக்கோட்டில் உள்ள கிராமங்களில் இருந்தும் தோற்றுவிக்கப்படுகின்றார்கள். தாய்லாந்தைச் சேர்ந்த பெண்கள், தங்களுடைய நாட்டைவிட மேலாக அபிவிருத்தியடைந்துள்ள வேறு ஆசிய நாடுகளுக்கு அல்லது மேற்கு நாடுகளுக்கு செல்கின்றார்கள். இந்தோனேசியப் பெண்கள் மலேசியாவுக்கும், சிங்கப்பூருக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் புலம்பெயர்கிறார்கள். கொரியாவும் தென் கிழக்காசியப் பெண்கள் சென்றடையும் ஒரு இடமாக வந்து கொண்டிருக்கின்றது.

மேலும், கொரியாவுக்கு வரவேற்பாளர்களாக வரும் பிலிப்பைன் பெண்கள் பால்வினைத் தொழில் முகவர்களாலும் தரகர்களாலும் ஏமாற்றப்பட்டு கடைசியில் பால்வினைத் தொழில் செய்வதில் வந்து நிற்கிறார்கள் என்பது தொடர்ந்தும் ஒரு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவமாக இல்லை. இந்தப் பெண்கள் அடிமைகளைப் போன்ற நிலைகளில் வாழ்கின்றார்கள். மனித உயிரிகளிற்குத் தரப்படும் அதிதாழ்ந்த மரியாதையைக்கூட இவர்கள் இழந்து நிற்கிறார்கள். கொரியாவில் பால்வினைத் தொழிலுக்கு பலவந்தமாகத் தள்ளப்பட்ட பிலிப்பைன் பெண்களின் கதைகள், ஆசியாவிலும் உலகளாவியும் நடைபெறும் பால்வினை வர்த்தகம். சட்டத்திற்குப் புறம்பான கடத்தல்கள் என்பனவற்றின் ஒரு எடுத்துக் காட்டான வரைமாதிரியாகும். சர்வதேச அளவிலான பால்வினைத் தொழில் முகவர் நிலையங்களும், தரகர்களும் வீட்டுவேலைகள், வரவேற்பாளர்கள் போன்ற தொழில்களைப் பெற்றுத் தருவதாக வாக்குக் கொடுத்து பெண்களை வசீகரம் செய்கிறார்கள் அல்லது செல்வந்த நாடுகளில் உள்ள ஆண்களுடன் திருமணம் செய்து கொள்வதற்கு பெண்களைத் தயார் செய்து அவர்களை விற்கின்றார்கள். இப்படி விற்கப்பட்ட பெண்கள் தாங்கள் சென்று சேர்ந்த இடங்களில் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் துர்ப்பாவனைக்கு ஆளான நிலைகளில் வாழுகின்றார்கள். 10 வயதேயான பெண்பிள்ளைகள் கடினமான வேலைகளுடன் போராடுகின்றார்கள் அல்லது ஹோர்மோன்கள் ஏற்றப்பட்டு வாடிக்கையாளர்களை வரவேற்க/ பலவந்தப்படுத்தப்படுகின்றார்கள். சர்வதேசரீதியிலான திருமண முகவர் நிலையங்கள், தந்தைவழி ஆதிக்க விழுமியங்களினால் அடக்கப்பட்ட ஒழுக்கமான ஆசியப் பெண்களைப் பயன்படுத்தி தபாற்கட்டளைகள் மூலம் நிதி திரட்டலில் ஈடுபடுகின்றார்கள். இந்தப் பெண்கள் யாரென்றால், நிச்சயமாக தங்களுடைய வறுமையில் இருந்து தப்பிக்க முடியாதவர்கள், ஏனென்றால் அவர்கள் வறியவர்கள். இந்தப் பெண்களை இறக்குமதி/ செய்யும் தலைவர்கள், நிர்ப்பந்திக்கப்பட்ட பணிவின் கீழ்/, ஒரு சட்டபூர்வமான திருமண நிறுவனத்துடன் இந்தப் பெண்களை பிணைத்துக் கொள்கின்றார்கள். பால்வினைத் தொழில் தரகர்கள் பெண்களை 15 000 தொடக்கம் 20 000 டொலர்களுக்கு வாங்குகின்றார்கள். அண்மைக் காலங்களில், இது குறுகியகால - மாத வாடகைக்கு - அளவில் பெண்களை வாங்குவது என்ற வரையில் பரிணாமம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடைந்துள்ளது. ஆனால், பால்வினைத் தொழில் தரகர்கள் செலுத்தும் கட்டணம், உண்மையிலேயே, அந்தப் பெண்களினால்தான் தாங்கிக் கொள்ளப்படுகின்றது. பெண்கள் தாமாகவே, அறிமுகக் கட்டணமான 100 டொலர்களுக்கு, பால்வினைத் தொழில் தரகருக்கு கடனாளியாகின்றார்கள். இந்தக் கடனானது, பால்வினைத் தொழில் தரகரை இந்தப் பெண்களிடத்தில் சொல்லமுடியாத அளவு சேவைகளைக் கோருவதற்கு அனுமதிக்கின்றது. உண்மையில் இந்தப் பெண்கள் ஷபால்வினைத் தொழிலுடன்/ ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஆனால் அடிமைத்தனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்.

"புராதன தொழில" இல் இருந்து "அதி இலாபகரமான வர்த்தகத்திற்கு"

சர்வதேசரீதியாகவோ அல்லது தங்களுடைய நாட்டிலோ விற்கப்படுகின்ற பெண்கள் செய்த ஒரே "பாவம்" அவர்கள் வறியவர்களாக இருப்பதுதான். குளிர்யுத்த காலத்தில் இந்த வறுமையானது இராணுவ மனோபாவத்தினால் சாதுரியமாகக் கையாளப்பட்டது. இப்பொழுது இது சர்வதேசரீதியான பால்வினை வர்த்தகத்தின் அடித்தளமாகிக் கொண்டு வருகின்றது. வரலாற்றுரீதியாக இராணுவ மனோபாவமும் பெண்களின் மீதான பலாத்காரமும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துக்கொண்டிருந்திருக்கின்றன. அமெரிக்கப் படைகளின் முகாமிடல் தென்கிழக்காசியப் பிராந்தியத்தின் பால்வினை வர்த்தகத்தில் ஒரு பெரிய பங்கினை வகித்தது. முதலாவது உலக மகாயுத்தத்தின்பின் ஆசியாவில் இருந்த இராணுவ மனோபாவத்தின் தோற்றம், இந்தோசீன, வியட்நாம், கொரிய யுத்தங்களின் மூலம் வறுமையையும் பொருளாதார தாழ்நிலையையும் பரப்பியது. யுத்தச் செலவினங்களுக்கு பெண்கள் ஊதியம் செலுத்தவேண்டி இருந்தது. இராணுவ வீர இளைஞர்களின் தைரியத்தைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுடைய எதிர்க்கும் மனோபாவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும், அமெரிக்க அரசாங்கமானது உள்ளூர் அரசாங்கங்களுடன் 'R&R' (ஓய்வும் பொழுதுபோக்கும்) என்ற உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது. அதாவது, அமெரிக்க அரசாங்கம் அதனுடைய சிப்பாய்களுக்கு உள்ளூரில் இருந்து ஓய்வைப் பெற்றுக் கொள்வதற்கும், பொழுதுபோக்குவதற்கும் அனுமதி வழங்கியது. தொகையான வறிய பெண்கள் இந்த 'R&R' உடன்படிக்கையினூடாக உள்வாங்கப்பட்டார்கள். இந்தப் பெண்கள் "மிகவும் இலகுவானவர்கள்" என்று கருதப்பட்டதனால் உள்வாங்கப்பட்டனர். "ஓய்வும் பொழுதுபோக்கும்"என்பதன் உள்ளடக்கம் பற்றி ஊகிப்பதொன்றும் கடினமானதல்ல. இது கொரிய gijicheon இன் வரலாறும் ஆகும். (gijicheon என்பது அமெரிக்க இராணுவத்தளங்களைச் சுற்றி இருக்கும் கிராமம் என்று பொருள்படும். ஆனால் இது, இராணுவத் தளங்களைச் சுற்றியிருக்கும் பால்வினைத் தொழில் விடுதிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.)

என்னதான் இருந்தாலும், அமெரிக்க இராணுவ மனோபாவத்தின் எஞ்சிய துகள்கள் இன்னும் ஆசியப் பிராந்தியத்தில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. பால்வினைத் தொழில் தரகர்கள் கூட்டான பால்வினை வர்த்தகத்தின் இலாபகரத் தன்மையை அனுபவித்தவர்கள். இராணுவப் படைகள் நீங்கிய பின்பும் இவர்கள் பெண்களைப் பாவிக்கும் பால்வினை வர்த்தகத்தைக் கைவிடவில்லை. மேலும், ஆசியப் பிராந்தியத்தில் உள்ள அரசாங்கங்கள், உலக வங்கியின் வலிமையான சிபாரிசுடனும் ஆதரவுடனும், உபரி இலாபத்தைச் சம்பாதிப்பதற்கு அதி சிறந்த வழி பெண்களின் உடல்கள் என்று தெளிவாக உணர்ந்து கொண்டன. எனவே இந்த அரசாங்கங்கள் பால்வினைத் தொழில்துறையை ஊக்குவித்தன. இது உல்லாசப் பிரயாணத்துறையுடன் அதிகரித்தது. சர்வாதிகாரி Park Jung-Heeஇன் ஆட்சியில் அரச கருத்தமைவின்கீழ், பால்வினைத் தொழில் தரகர்கள், உண்மையில் தங்களுடைய சுரண்டலை, தேசபக்தியின் ஒரு வெளிப்பாடு என்று கூறுவதன் மூலம் பெண்களை "உண்மையில்" சௌகரியப்படுத்துவதற்கு முயன்றார்கள். மின்வெட்டும் நேரத்தில், ஆசியாவின் பால்வினை வர்த்தகம் ஒரு முதலாளித்துவ பெருந்தொகை உற்பத்திமுறையின் தோற்றத்தைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கியது. இப்பொழுது உலகமயமாக்கல் காலகட்டத்தில், விலைமதிப்பற்ற வாய்ப்புகளின் இன்னுமொரு தொடரை பால்வினை வர்த்தக வியாபாரிகள் இன்னும் வரவேற்கிறார்கள். இராணுவ மனோபாவத்தின்கீழ் இருந்த அமெரிக்கச் சிப்பாய்களின் "அடக்கி வைக்கப்பட்ட பாலியல் விருப்புகளை"பெண்கள் திருப்திப்படுத்தியதில் இருந்து அல்லது அரசு பொருளாதாரத்தை பெண்கள் "தாங்கியதில்" இருந்து இப்பொழுது நவதாராளவாதத்துடன் சம்பந்தப்பட்டு, நன்கு ஆலோசிக்கப்பட்டு கட்டியமைக்கப்பட்ட சர்வதேச நிதியுடன் உலகம் முழுவதும் சுற்றித் திரியும் குற்றவாளிக் கும்பல்களுக்கும் தேசிய எல்லை கடந்து விரியும் கம்பெனிகளுக்கும் தொழில் புரியவேண்டி இருக்கின்றது.

வரலாற்றுரீதியாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்களில் இருந்து வரும் வறுமையான பெண்கள் பால்வினைத் தொழிலாளர்களாக இருந்தார்கள். பகுதிநேரத் தொழிலின் அதிகரிப்பு, அவர்களின் வாழ்வின் அடிப்படையாக இருந்த சூழலியல் அழிவு, அரசதுறைகளின் நீக்கம், ஏற்றுமதி-நோக்கிய பொருளாதாரத்திற்கான மாற்றம் என்பனவற்றை உள்ளடக்கிய மீள்கட்டமைப்பின் விளைவுகளாக இப்பொழுது, இப் பெண்களுக்கிடையிலான வறுமை ஆழப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு பால்வினைத் தொழில் என்பது தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் உழைப்புக்கு பற்றிப் பிடிக்கக்கூடிய ஒரு இழையாக வந்துவிட்டது. பெண்களின் உடல்கள் என்பது மிகுந்த ஆதாயத்தை வழங்கும், மலிவான விலையில் ஏற்றுமதியாகும் சரக்குகளாகி விட்டன. உலகமயமாக்கலின் கீழ் பால்வினை வர்த்தகம் என்பது உயரும் வேறு தொழிற்துறைகள் தம்பட்டமடித்துக் கொள்வதுபோல அதியுயர் ஆதாயத்தைக் கொண்ட தொழிற்துறைகளில் ஒன்றாக இருக்கின்றது. பால்வினை வர்த்தகத்தில் இருந்து கிடைக்கப் பெறும் ஆதாயமானது, சர்வதேசரீதியிலான போதைவஸ்து வர்த்தகம், ஆயுத வர்த்தகம் என்பவற்றில் இருந்து கிடைக்கும் ஆதாயமளவுக்கு உயர்ந்தது. அந்தக் காலங்களில் இராணுவ பதட்டநிலை இருந்தபொழுது, சிப்பாய்களின் ஆத்ம, உள நிலைகளைப் பாதுகாத்து வைத்திருப்பதற்காக ஆசியப் பெண் உடல்களைப் பாவிப்பதில் அமெரிக்க அரசாங்கம் உள்ளூர் அரசாங்கங்களுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டது. இப்பொழுது உலகமயமாக்கல் என்னும் பெயரில் இன்னும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு போர் நடந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில், முதலாளித்துவவாதிகளும் உள்ளூர் அரசாங்கங்களும் கைகோர்க்கின்றன. தேசிய எல்லையைக் கடந்து பரவும் கம்பெனிகளிலும் ஊழியம் செய்பவர்களின் தேவைகளை திருப்திப்படுத்துவதற்காகவும் மலிவான உழைப்பைப் பெறுவதற்காகவும்". மெக்சிக்கோவிற்குப் பின்பு அதியுயர் மனித ஏற்றுமதி வீதத்தைக் கொண்ட பிலிப்பைன் நாட்டின் அரசாங்கமானது மனித உழைப்பை ஏற்றுமதி செய்வதில் உள்ள திறனை உணர்ந்து கொண்டது - முக்கியமாக பெண்களின் உழைப்பை- வெளிப்படையாகவே இது மேலதிக ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்றது. "பெண்நிலை-வாதத்தின்" விளைவுகளால் "மாசுபடுத்தப்பட்ட" தாகக் கருதப்படும் மேற்கிலுள்ள பெண்களைப் போலல்லாது பணிவாக இருக்கும் மலிவான ஆசியப் பெண்களைச் செல்வந்த ஆண்கள் தங்களுக்கு நல்லதென்று தெரிவு செய்கிறார்கள். சுற்றுலாப் பயண முகவர் நிலையங்கள் ஆசியப் பெண்களுடன் "பிறதேச படையெடுப்புகள்" என்று முன்னெப்போதுமில்லாதவாறு விளம்பரம் செய்கின்றன. இந்த விளம்பரங்களுக்கு பதிலளிக்கும் செல்வந்த ஆண்கள் "ஆசிய மர்மம்" என்பதனை, எதையும் எல்லாவற்றையும் கேட்கும் உரிமையைத் தரும் ஒரு விடயமாக அர்த்தப்படுத்துகின்றார்கள். பெண்களின் மாதிரிகள் அதிகரித்து இருக்கின்றன. எந்த மாதிரியான "சேர்க்கை" யைக் கொண்ட பெண்களையும் இப்போது சில டொலர்களுக்கு மட்டும் ஆண்கள் கேட்க முடியும்.

வரலாற்று ரீதியில் இருந்தும், வளர்ச்சியடைந்த உலகத்துக்கு பலவந்தப்படுத்தப்பட்ட மூன்றாம் உலகத்தின் இழிநிலைக்கான ஸ்தூலமான நிபந்தனைகளில் இருந்தும் பெண்களின் யதார்த்தநிலையும் பால்வினை வர்த்தகமும் பிரித்துப் பார்க்க எண்ண முடியாதது. ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ், இப்பொழுது உலகமயமாக்கலின்கீழ், குறைந்த ஊதிய உழைப்பினதும், இயற்கை மூல வளங்களினதும் சர்வதேசரீதியான முக்கிய தளங்களாக மூன்றாம் உலகநாடுகள் வந்துவிட்டன. வடஅரைக-கோளத்தின் திறமையானது, இப்படியான செல்வத்தைச் சேர்த்துக் குவித்தல், தெற்குடன் ஒப்பிடும்பொழுது ஒப்பிடமுடியாதளவு வாழ்க்கைத்தரத்தை அனுபவித்தல், தெற்கில் உள்ள உழைப்பினதும் மூலவளங்களினதும் சுரண்டல் என்பவற்றில்தான் உண்மையில் தங்கியுள்ளது. உலகமயமாக்கலினால் கொண்டு வரப்பட்ட, செல்வந்த நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் இடைவெளி, மூன்றாம் உலகப் பெண்களுக்கிடையில் முன்னெப்போதுமில்லாதவாறு வறுமையை அகலிக்கக் காரணமாகின்றது. இந்த வறுமையானது பெண்களை வேறு எந்தத் தேர்வும் இல்லாது, ஆனால் குறைந்த ஊதிய உழைப்புக்குத் தள்ளுகின்றன. இந்த உலகமயமாக்கல் காலகட்டத்தில் EPZகளும் பால்வினைத்தொழில் விடுதிகளும்தான் ஒரு வருமானத்திற்காக இவர்கள் திரும்பிச் செல்லக்கூடிய ஒரே இடங்களாக இருக்கின்றன. உலகளாவிய முதலாளித்துவத்தின் பொறிமுறை, சாதாரணமாக நிலவி வரும் தந்தைவழி ஆதிக்க கருத்தியலுடனும் எப்பொழுதும் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறையை வலியுறுத்தும் பால்சம்பந்தமான இரட்டை நிலைப்பாட்டுடனும் சாமர்த்தியமாகக் கூட்டுச்சேருகின்றது. பால்வினை வர்த்தகம் குறைந்த நிதி உள்ளிடலைக் கோரும் ஒரு இலாபகரமான தொழிற்துறையாக வந்து கொண்டிருக்கின்றது.

பால்வினைத் தொழிலாளர்களின் ஒழுங்கமைப்பு

ஏற்கனவே, எண்ணிலடங்காத சர்வதேச அமைப்புகள், மனித உரிமைகள் குழுக்கள் என்பன பால்வினைத் தொழிலாளர்களுடனும் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் நடைபெறும் சட்டத்திற்குப் புறம்பான கடத்தல்காரர்களுடனும் பணிபுரிகிறார்கள். தனிமையில் இருந்தும் தீங்கில் இருந்தும் பால்வினைத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அறவொழுக்க விதிகளின் அடிப்படையில் பணிபுரியும் அமைப்புகளும் இருக்கின்றன. ஆனால் ஆசியாவில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. இவை இந்தப் பெண்களுக்கு கல்வி புகட்டல் மற்றும் மருத்துவரீதியான, சட்டரீதியான உதவிகளை வழங்குகின்றன. இவற்றில் CATW(Coalition Against Trafficking in Women) பிலிப்பைனிலும், GAATW(Global Alliance Against Traffic in Women) தாய்லாந்திலும் இயங்குவனவாகும். இவர்கள் நவதாராள உலகமயமாக்கலுக்கும், பால்வினை வர்த்தகத்துக்கும் இடையில் முக்கியமான தொடர்புகளை ஏற்படுத்துகிறார்கள். இதை ஒரு உலகளாவிய பிரச்சினையாக்குகிறார்கள். எப்படி இருப்பினும் இந்த இயக்கங்களில் மிகவும் யோக்கியதையானவை என்று குறிப்பிடக்கூடியவை எவையென்றால் பால்வினைத் தொழிலாளர்களுக்கிடையிலான அரசியல் ஒழுங்கமைப்பைக் கொண்டவைதான். சமூகச் சீர்கேடு என முத்திரை குத்தப்பட்டும், கண்காணாமல் இருக்கவேண்டும் எனவும் இருந்த இவர்கள், இப்பொழுது தங்களை இனம் காட்டுகிறார்கள், கெட்டிக்காரத்தனமாகப் போராடுகிறார்கள். நாடுகளிற்கு நாடு, அமைப்புகளிற்கு அமைப்பு வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தப் பெண்கள் பால்வினைத் தொழிலாளர்களாக தங்கள் அடையாளத்தை ஸ்திரப்படுத்துகிறார்கள்" தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கோருகின்றார்கள்" பால்வினைத் தொழிலாளர்கள் குற்றமற்றவர்களாக்கப்படவேண்டும் என்று கோருகின்றார்கள்.

1998ம் ஆண்டு மே மாதம் 12 நாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் தாய்வானில் கூடினார்கள். இவர்கள் WAFSWR (World Action Forum for Sex Workers Rights)இனைக் கௌரவித்தார்கள். இதில் பங்கு பற்றியவர்கள் பால்வினைத் தொழிலாளர்களும் மற்றும் செயற்பாட்டாளர்களும். பால்வினைத் தொழிலாளர்கள் குற்றமற்றவர்களாக்கப்படல் வேண்டும், பால்வினைத் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்னும் விடயதானங்களில் இவர்கள் விவாதங்களை நிகழ்த்தினார்கள். அனுமதியுடன் கூடிய பால்வினைத் தொழிலைத் தடை செய்த தாய்வான் அரசாங்கத்திற்கெதிராக இவர்கள் இதனைச் செய்து காட்டினார்கள். பொலிசுடன் மோதினார்கள். The Durbar Mahila Samanwaya Committee of India - இது மேற்கு வங்காளத்தில் இயங்கிவரும் ஒரு அமைப்பு. இந்த அமைப்பில் அண்ணளவாக 30 000 பால்வினைத் தொழிலாளர்கள் (ஆண்கள், பால்மாற்றமடைந்தவர்கள் உட்பட) அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள். இது 30



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளைகளைக் கொண்டுள்ளது. இது 1995இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட மறு ஆண்டில் இது வங்காளத்தில் ஒரு மகாநாட்டைக் கூட்டியது. இதில் 1500 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். 1997இல், வறுமையில் மிகமோசமாகப் பீடிக்கப்பட்டிருக்கும் நகரங்களில் ஒன்றான கல்கத்தாவில், பால்வினைத் தொழிலாளர்களின் முதலாவது தேசிய மகாநாட்டைக் கூட்டியது. தந்தைவழிச்சமூகத்தினால் "தாழ்த்தப்பட்ட வர்க்கம்" என்றும் முதலாளித்துவத்தினால் "தொழிலாளர்கள்" என்றும் பிரகடனப்படுத்தப்பட்ட இவர்கள், அவர்களைக் குற்றவாளியாக்கும் அரசாங்கத்தின் சகல முயற்சிகளுக்கும் அங்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். Empower of Taiwon உம் Zi Teng of Hong Kongஉம் "சிவப்பு விளக்கு"வலயங்களில் பால்வினைத் தொழிலாளருக்காக ஆதரவு நிலையங்களை வைத்திருக்கும் அமைப்புகளாகும். இவைகள் தகவல் பரிவர்த்தனை, உடல்நலக் கண்காணிப்பை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பால்வினைத் தொழிலாளர்களை ஒழுங்கமைப்பதற்கான தளத்தைப் போடுதல் போன்ற விடயங்களில் பணிபுரிகின்றன.

பால்வினைத் தொழிலாளர்களை ஒழுங்கமைப்பது உலகமயமாக்கல் எதிர்ப்புக்கு ஒரு முக்கியமான நிகழ்ச்சி நிரல்!

பால்வினைத் தொழிலை "மனிதகுலத்தின் மிகப் புராதன தொழில்" என்று குறிப்பிடுகின்றார்கள். அத்துடன், மனித உயிரிகள் ஆண்கள், பெண்கள் என்று பாகுபடுத்தப்பட்டு இருக்கும்வரையிலும் பால்வினைத் தொழிலானது தொடரும் என்றும் கூறுகின்றார்கள். ஆனால், பால்வினைத் தொழில் "மனிதகுலத்தின் மிகப்புராதன தொழில்" அல்ல. ஆனால் "தந்தைவழி ஆதிக்கத்தின் மிகப்புராதன சுரண்டலும் ஒடுக்குமுறையும்" ஆகும். அத்துடன் வரலாற்றுரீதியாக கீழ்த்தட்டுகளில் இருந்த பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது, அது தானாகத் தொடருவதற்கு, இது ஒரு "இயற்கையான" தோற்றப்பாடு அல்ல என்பதைக் காட்டுகின்றது. ஆனால் வர்க்கப் பிரிப்பினால் கொண்டுவரப்பட்ட ஒரு "சமூகரீதியான" தோற்றப்பாடு என்று தெரிகிறது. பால்வினைத் தொழில் என்பது பரஸ்பர சம்மதம் கொண்ட இரண்டு உடல்களுக்கிடையிலான ஒரு பரிவர்த்தனை மட்டும்தான் என்றும், ஒருவர் தன் வாழ்விற்கான உழைப்பிற்காக அதில் ஈடுபடலாம் என்றும் சிலர் விவாதிக்கலாம். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது, இது உண்மைபோலத் தோற்றமளிக்கலாம். ஆனால் எப்படி இருந்தாலும் இந்த இலகுவான தர்க்கமானது பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிப்பதற்குப் போதுமானதல்ல.

ஏன் பெண்கள்தான் கூடுதலாக பால்வினைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்?

ஏன் பால்வினைத் தொழிலாளர்கள் அடிமைகளைப் போன்ற நிலையில் இருந்து தொழில் புரிகிறார்கள்?

ஏன் பால்வினைத் தொழிலாளர்கள் ஒழுக்கரீதியாக களங்கப்பட்டவர்கள் என்றும் சமூகத்தில் இழுக்கானவர்கள் என்றும் கருதப்பட்டார்கள்?

மறுபக்கத்தில் பார்த்தால், பால்வினைத் தொழில் என்பது, தந்தைவழியாதிக்கச் சுரண்டலினதும் ஒடுக்குமுறையினதும் புராதன வடிவம் என்று பிரகடனப்படுத்திய பின், பால்வினைத் தொழிலாளர்கள், தொழிலைச் சட்டரீதியாக்கும்படியும், "தொழிலாளர்கள்" என்ற ரீதியில் உரிமைகளுக்காகக் கோருவதும், அவர்களுடைய ஒடுக்குமுறைக்கான நியாயப்பாடாகத் தோன்றலாம். இது எப்படியாயினும் ஒன்றிற்கொன்று முரணானது. ஆனால் பால்வினைத் தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடுவது என்பது, உண்மையில் பெண்களை ஒடுக்கும், பெண்களை களங்கப்படுத்தும் முதலாளித்துவத்திற்கும் தந்தைவழி ஆதிக்கத்திற்கும் எதிரான போராட்டங்களாகும். இவைகள் வாழ்வதற்கான அழுகுரல்கள். மரியாதையான வாழ்க்கைக்குத் தேவைப்படும் அதிகுறைந்த நிபந்தனைகளையாயினும் வேண்டி நிற்கும் ஒரு கோரல். மனிதர்களை ஒடுக்குதலையும் அந்நியப்படுத்தலையும் உருவாக்கும் முதலாளித்துவ அமைப்புமுறை இருக்கும் நிலையில், பால்வினைத் தொழில் உட்பட, எதையும் இந்த நிகழ்ச்சிக் குறிப்புடன் செய்துவிட முடியாது. இது எண்ணிலடங்காப் பெண்களிடம் இருந்து வரும் அழைப்பு. வேறு எந்தத் தெரிவும் இல்லாமல் ஆனால் தங்களுடைய குடும்பங்களை பராமரிப்பதற்கு, அவர்களுடைய அடிமைநிலை போன்ற வாழ்க்கையில் இருந்து மீள்வதற்கு, தங்களுடைய தொழிலுக்கான நியாயமான ஊதியத்தைப் பெறுவதற்கு, எயிட்ஸ் மற்றும் ஏனைய நோய்களைத் தவிர்ப்பதற்கு, உடல் ஆரோக்கிய கவனிப்பை அணுகுவதற்கு - பால்வினைத் தொழிலைத் தங்கள் உழைப்பாகக் கொண்டவர்களின் கோரிக்கை. இந்த விடயமானது, பால்வினைத் தொழிலுடன் தொடர்புபடுத்தி புரிந்து கொள்ளப்படக்கூடாது. ஆனால், பெண்களின் உரிமைகளிற்குச் சாதகமான ஒரு அரசியற் செயற்பாடாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பால்வினை வர்த்தகம் என்பது இன்னமும் தேசிய எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சனையல்ல. ஒரு பெண்நிலை நோக்கில் இருந்து பால்வினைத் தொழிலை அணுகும்பொழுது சர்வதேசியம், மூன்றாம் உலக மக்களின் ஒருங்கிணைப்பு என்பன தவிர்க்கமுடியாமல் தேவைப்படுகின்றன. சர்வதேசரீதியான பால்வினை வரத்தக வரைபடமானது, உலகமயமாக்கல் மூன்றாம் உலகத்தைத் தன்னுள் இணைத்துக்கொள்ளும் முறையுடன் பொருந்தி வருகின்றது. ஆனால் அதே நேரத்தில் விளிம்பை நோக்கித் தள்ளுகின்றது. நவ-தாராள உலக மயமாக்கலில் ஏற்கனவே நிலவும் தந்தைவழி ஆதிக்கத்துடன் கூட்டுச் சேர்கின்றது. பெண்களின் வறுமையைத் துரிதப்படுத்துவதில் உலகமயமாக்கலும் பால்வினை வர்த்தகத்தின் ஒரு தொங்கலும் ஒரே சமயத்தில் இந்த வறுமையின் காரணியாகவும் விளைவாகவும் இருக்கின்றன. இது மிகக் கொடூரமானது. ஆனால், அத்துடன் அதி ஷஇயற்கையான/ ஒடுக்குமுறையின் பரந்துபட்ட வடிவம். இந்த வகையில், தொழிலுக்கும் வாழ்க்கைக்குமான உரிமைகள், பெண்களின் ஒழுங்கமைப்பு என்பவற்றுக்கான போராட்டம், குற்றமாக்கப்படும், நீக்கப்படும், ஒடுக்கப்படும் பெண்கள் - இந்த நடவடிக்கைகளுக்கெதிரான எல்லா முயற்சிகளுக்கும் எதிரான போராட்டம் நவ தாராளவாத எதிர்ப்பு, உலகமயமாக்கல் எதிர்ப்பு இயக்கம் என்பன முக்கியமான நிகழ்ச்சி நிரலாக அமைய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால்வினை: பரிணாமம்

-தீபா-



சில பெண்கள் ஆடம்பர வாழ்க்கை ஒன்றுக்காக தமது உடலை அறியாத தெரியாத ஒருவனிடம் அனுபவிக்கக் கொடுப்பதைப் பார்க்க எனக்குக் கவலையாக இருக்கிறது. இதைச் சரியென்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

உடலுறவு என்பது உணர்வோடு சம்பந்தப்பட்டது. அந்த உணர்வுகள் எதுவும் இல்லாது வெறும் ஜடங்களாய் பணத்துக்காக உடலைக் கொடுப்பது எத்துணை கேவலமானது.

பணம் தேவையென்றால் எத்தனையோ வேலைகள் இங்கு குவிந்து கிடக்கின்றன.

அதில் கிடைக்கும் பணம் சொற்பமாயினும் அது புனிதமானது. எமது நியமான நேர்மையான உழைப்பிற்கான ஊதியம் அது.

அதை விடுத்து ஐரோப்பிய அமெரிக்க பள்ளி மாணவிகளும் பல்கலைக்கழக மாணவிகளும் ஓரளவு பணமிருந்தும் ஆடம்பரம் ஒன்றுக்காக சைப்பிரஸ் போன்ற பணக்கார நாடுகளுக்கு உல்லாசப் பயணிகளாகச் சென்று உடலை விற்று வருவது வன்மையாகக் கண்டிக்கப் பட வேண்டியதொரு விடயம்.

இவர்களின் இந்த செயற்பாடு வறிய நாடுகளான சீனா தாய்லாந்து ஆப்ரிக்கா போன்ற நாடுகளிலுள்ள பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு உறுதுணையாக இருக்கின்றன.

சில பெண்கள் பால்வினையை தமது விருப்போடு ஒரு தொழிலாகச் செய்வதால், கட்டாயப் பால்வினைக்கு வற்புறுத்தப் படும் பலபெண்களைப் பாதுகாக்க முடியாதுள்ளது.

இந்த விடயத்தில் பெண்கள் எல்லோருமாக ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். ஆண்கள் தமது இச்சைகளுக்காகப் பெண்களை எப்படிப் பயன் படுத்துகிறார்களென்பதை உணர்ந்து புரிந்து அதை எதிர்க்கத் துணிய வேண்டும். ஒட்டு மொத்தமான பெண்கள் இனமும் ஓங்கிக் குரல் கொடுக்கும் போதுதான் இது இல்லாது ஒழிக்கப் படுவதற்கு ஒரு வழி கிடைக்கும்.

பெண்களைப் பால்வினைக்குப் பயன் படுத்தும் இந்த செயற்பாடு கூட ஒரு திட்டமிட்ட பெண்கள் மீதான சதிதான்.

முந்திய காலத்தில் பணக்கார ராஜாக்களுக்கும், வணிகர்களுக்கும் இன்னும் சுகபோக வாழ்வில் மையல் கொண்ட மானிடர்க்கும் போகும் இடமெல்லாம்

(பார்க்க பக்கம் 60)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிலமுரண்கள்
# -குறிப்புக்கள்-

-தேவா-



பாலியல்கல்வியும், பாலியல்அறிவும் ஆண் பெண் இருவரின் உடல்சம்பந்தப்பட்ட தெளிவைத்தரும் ஒரு புரிதல். ஆசியபெண்ணைபொறுத்தவரை, இவ்வறிவு பெண்ணுக்கு தெரிந்திருந்தாலும், பாலியல் உறவு எனும்போது அது திருமணத்தின்பின்னரே என்ற சட்டங்கள் அவளுக்கு மட்டுமே இருக்கின்றன. ஆணுக்கு இது அமுல் நடத்த ப்படமாட்டாது. தெரிந்ததே. பாலியல்உறவுவிடயம் பெண்ணுக்கு தெரிந்திருக்ககூடாது என விவாதிப்பவர்கள் எம்மத்தியிலே இருக்கின்றனர்.

"தெரியாதிருத்தல் நிலையே பெண்ணுக்கழகு" கொள்கை ஆணாதிக்கத்தின் கூறுகளில் ஒன்று. (பெண்ணுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைப்பதே வேடிக்கையான கற்பனை!) இயற்கையான உணர்வுகளை பெண் அடக்கிவைத்திருக்கணும்.என்ற நிலைப்பாடு நாகரிகமான ஒரு சமூகத்துக்கு பொருந்தாது. அது மனித உரிமையை கேள்விகுள்ளாக்குகிறது மட்டுமில்லை, அடக்குமுறையை ஒருபாலாருக்கு மட்டுமே கைக்கொள்கிறது. பெண்ணை திருமணத்திற்காக தயார்படுத்தும் பெருமையும், பெற்றோரிடம் ஆழப்பதிந்திருக்கும் "குலப்பெருமை காக்கும்"கொள்கையும் பாலியல்சம்பந்தப்பட்ட அறிவு-உணர்வுகளை அடக்கியாள்கிறது. தாய்மைக்கு தயாராகும் பெண்ணின் இயற்கைநிகழ்வும் (சாமத்தியமடைதல்), பெண்ணை முதல்இரவு-உறவுக்குதயார்படுத்தபடும் செயற்கைநிகழ்வும் (திருமணம்) ஆசியநாடுகளிலே, பெண்ணின் உறுப்பு-உடலை கருத்தில் வைத்தே கொண்டாட்டங்கள் நிகழத்தப்படுகிறன. பெண்ணின் முதல்பாலியல் விவகாரம் கலியாணம் என்கிற சடங்குக்குள் மதஅரசியலில் ஆழப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாலியல் விடயத்தில் என்றைக்கு மதம் தலையிட்டதோ அன்றையிலிருந்து மதங்கள் மனிதனை கட்டுப்பாட்டில் வைத்திருக்க சட்டங்கள் போட்டன. பெண்ணை அடிமையாக்கி ஒழுக்கவரம்புகளை கட்டிஎழுப்பின. குடும்பங்கள் உருவாக்கப்பட்டன. காதலுக்கு சட்டகங்கள் போடப்பட்டன. ஒரு மூடுமந்திரமாக மனிதனோடு பாலியல்பிரச்சினைகள் கூடவந்தபடிதான். மதங்கள், ஒழுக்கச்சட்டங்களை எப்படித்தான் அமுல்படித்தினாலும், குற்றங்களுக்கு தண்டனை கொடுத்தாலும், அவைகளால் மனிதனின் பாலியல் விவகாரத்தை தம் கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கமுடியாது எனற் நிலைமை எப்போதோ ஏற்பட்டாயிற்று.

அரசுகள் இது விவகாரத்தை கைப்பற்றி, இன்னொரு விதமாக கைக்கொள்ள எத்தனிக்கிறது. "குடும்பத்துள் பாலியல்கொடுமையா? அதை அவர்களே பார்த்துக்கொள்ளட்டும். குடும்பம் ஒரு கோவில்.(கோவிலைத்தானே அரசு குத்தகைக்கு எப்போதோ எடுத்துக்கொண்டதே) பொறுத்துப்போகவேண்டியது பெண்ணும், பிள்ளைகளுமே. என்கிறது. கல்வியில், தொழிலில், சமூகபடிநிலையில் ஆணுக்கு நிகராக பெண்ணை, அரசுகள் பல ஒரு சரிசமமற்ற நிலைப்பாட்டை மதத்தின் ஆணிவேர்களை தழுவி தொடர்ந்து கடைப்பிடிக்கின்றன. அதற்கு ஒத்து ஊதுகிறமாதிரி சமூகமும் குடும்பகௌரவத்தை தூக்கிப்பிடித்து, பெண்தானே குடும்பக்கோயிலை காப்பாற்றவேண்டியவள், வீட்டுக்கு குத்து-விளக்காயிருக்கவேண்டியவள் என்று ஒரு கொடியை தூக்கி பெண்கையில் கொடுத்துவிட்டு, அவள் தன்பதவியை சரியாக செய்கிறாளா என்பதை, கண்ணில் நெய் விட்டுக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறது.

பாலியல் பிரச்சினை தொடர்பான எவ்வித குழப்பநிலைகளுக்கும் பெண்ணே பொறுப்பு ஆக்கப்படுகின்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் அரைகுறை ஆடை அணிவதால், அழகாயிருப்பதால், நடப்பதால்- பேசுவதால்- வெட்கப்படுவதால்-சிரிப்பதால், அவள் உடலுறுப்புக்கள் ஆணுக்கு மயக்கம் தருவதால் ஆண் உணர்ச்சியடைகிறான் போன்ற குற்றசாட்டுகள் பாலியல்வன்முறைக்கு பாதிக்கபட்டவரையே குற்றவாளியாக்குகிறது.

உலகின் சில் சமூக,மதஅமைப்புகளில் பெண் திருமணமாகாமல் குழந்தை பெற்றால் அது அவளின் குற்றமாக உறுதியாக்கப்பட்டு, அவள் குற்றவாளியாக்கப்பட்டு,தண்டனையும் பெறுகிறாள். அவள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், தீர்ப்பும் ஒருபக்கசார்பாகவே வழங்கப்படுகிறது.

பாலியல் உறவு

தமிழ்சமூகத்தை, பொறுத்தவரை பாலியல்-உறவு-பிரச்சினை பற்றி இரண்டாவது நபருடன் பேசுவதோ, ஒரு கலந்துரையாடல்விவகாரமோ அல்ல. மிகமிக இறுக்கமான சட்டகத்துள் அடக்கிவைக்கப்பட்டுள்ளது. தாய் தன்மகளுக்கு சொந்த உடல் பற்றி தனக்கு தெரிந்த விபரங்களை சொல்லிக்கொடுப்பதற்கு கூட தயங்குகிறாள். இரட்டைஅர்த்தம்(பாலியல்உறுப்பு-உறவுபற்றிய) பகிடிகளை விரும்பி, கேட்டு, சிரித்து, மகிழ்பவர்களிடம், இந்த உறவுப்பிரச்சினைகளை பேச எடுத்தால் அது உறைநிலையை அடையும். ஒரு கலாச்சாரமே பாலியல்உறவின் சிக்கல்களை இன்னொருவரோடு-(கணவன் -மனைவிக்கிடையேயும்கூட) பகிர்ந்து கொள்ள தடையாய் இருக்கிறது என்றால்,அது மனிதனுக்கு அந்நியமாக போன கலாச்சாரம். ஆனால் இங்கு காணப்படும் முரண்நகை என்னவெனில், நாளும் நாளும் தமிழ்வீடுகளில் மிக மிக ஆவலோடு பார்க்கப்படும் தமிழ் சினிமாக்களிலும், அதன் பாடல்களிலும பாலியல்உறவு சம்பந்தப்பட்ட விடயங்களே முக்கியப்படுத்தபடுகின்றன. இந்த மீடியா பொழுதுபோக்குக்கு மட்டுமே பயன்படுகிறது, ஒரு ஓய்வுக்கான தேடுதலாய் சினிமா தேவை , அது வியாபார அடித்தளத்தில் கட்டப்பட்டிருப்பதே போன்ற வாதங்கள் சினிமா எந்தரகமாயிருந்தாலும் பார்க்கலாம் உணர்வுக்கு இழுக்கிறது. நீலப்படங்களுக்கு சற்றும் தரம் குறையாதளவுக்கு பல தமிழ்திரைப்படங்களில் பாலியல் உறவுக்காட்சிகள் விபரிக்கப்படுகின்றன். அங்கு கவர்ச்சியாக காட்டப்படும் திருமண, சாமத்தியசடங்கு, பிறந்தநாள் வைபவங்கள், புகலிடதமிழரின் வாழ்விலும் சிறப்பம்சங்களாக நிறைவேறுகின்றன. இவைகள் மிகவும் கவனமாகவும், நிறைவேற்றவேண்டிய தொண்டுகளாகவும் பராமரிக்கப்பட்டுவர வேண்டியனவாக வலியுறுத்தவும்படுகின்றன. உடைகள், நடைகள் ஆகிய புறவயமானவைகளும் சினிமா ஆட்கொண்டு, அவைகள் தொடராவிட்டால் அது, கேலிக்-கிடமானதாக, முட்டாள்தனமாக கருதப்படுகிறது. மணிக்கணக்கில் கவர்ச்சிகரமாக யாவரின் கவனங்களை பதியச்செய்யும், காதல் காட்சிகள்-பாடல்கள் பெண்உடலை பாலியல் உறவுக்காக் சித்தரிக்கப்படுவதை யாருமே கண்டுகொள்ளாமலும்,(கண்டுரசிப்பதே இதைத்தானே) அக்கறை எடுக்கப்படாமலும், கலந்துரையாடாமலும் ஒதுக்குவது இளையவர்களின் பாலியல் பற்றிய தெளிவுக்கு உகந்தது அல்ல. நாளும், பொழுதும் தமிழ் மட்டரகசினிமா சம்பந்தங்களிலே ஈடுபட்டு இவைகளில் தம்கவனங்களை ஊன்றியுள்ள வளர்ந்தோர், இளையவர்களுக்கு பாலியல் உறவுகள்பற்றியசிந்தனை, தாம் நினைக்கும்வரை- அதாவது அவர்களுக்கு தாம் திருமணம் ஒழுங்கு செய்து கொடுக்கும்வரை வரக்கூடாது, அப்படி வந்தாலும் அதனை அவர்கள் அடக்கிகொள்ளணும் என்ற கருத்து மனிதஉரிமையை கேள்விக்குள்ளாக்குகிறது. பிள்ளை எதை சாப்பிட்டால் சுகதேகியாய் வளருமோ,அன்பு அதனுடைய வளர்ச்சிக்கு எத்தனை அவசியமானதோ, அதேஅளவுக்கு பருவவயதிலும் பாலியல் அறிவு-உறவு முக்கியம் என்பதை பெற்றோர்,உற்றோர் உணரவேண்டும்.

பாலியல் உணர்வுகளை பெண்ணுக்கு அடக்கத்தெரியணும். ஆணுக்கு அது தேவையில்லை ஆகிய ஆணாதிக்ககூற்றுக்கள் இருபாலாருக்கும் இடையில் ஒரு பெரிய பாதாளத்தை உருவாக்கியுள்ளது.

குடும்பத்தினுள்ளே பாலியல்வன்முறை

பாலியல்வன்முறை கணவன்-மனைவி, கணவன்-மனைவியின் சகோதரி, தந்தை-மகள், அண்ணன்-தங்கை, மாமன்-மருமகள், சித்தப்பா,பெரியப்பா-மகள்,பாட்டன்- பேத்தி என இன்னும் அறியப்படாத உறவுமுறைகளிலே தொடரப்படுகின்றது. குடும்ப-கௌரவம், ஆணில்தங்கியிருத்தல் போன்ற காரணிகளால் பாதிப்புக்குள்ளானோர் வெளியேவரமுடியாது-சொல்லமுடியாது வெந்துகொண்டிருக்கின்றனர். வன்முறைக்கு ஆளாகும் பெண்ணும் சமூகத்தின் முன்னால் ஒரு அழுக்கானவளாக பார்க்கபடுகிறாள்.

மகள் ஒருத்தி போலிசுக்கு முன்னால் தனக்கு மேல் மாமன் செய்த பாலியல்வன்முறையைவிபரித்து அழுதபோது, அவள் தாயின் விமர்சனம் இது: ",என்னுடைய தம்பி என் மகளை கெடுத்திருக்கமாட்டான். எங்களிலே பகை கொண்டவர்களே மகளுக்கு ஏதாவது சொல்லிக்கொடுத்து, இப்படி சொல்லவைக்கின்றனர்" இப்படியான வாக்குமூலம் தருபவர்கள் ஆணின் பாலியல் வக்கிரபுத்தியை ஆதரிக்கின்றனர். மகளை, தன் கணவன் பாலியல் இம்சைக்குள்ளாக்குவது தெரிந்துமே மனைவி எதிர்க்காமல் இருப்பது தெரியாத-மாதிரி நடந்துகொள்வது தன் சுயநலம் கருதியே. இந்தப்போக்கினால் இங்கு அட்டூழியங்களும் தொடரத்தான்செய்யும். குடும்பத்துள்ளே வன்புணர்வுகள் முழுஉலகநாடுகளிலுமே உயிரோடிருக்கிறது. இப்படியான வன்முறைமூலம் பிறந்த பிள்ளைகளும் சாட்சியாய் இருந்துமே குற்றவாளிகள் தப்பிவிடுகின்றனர். ஆணாதிக்கத்தின் வேர்கள் மிக ஆழமாய் கிளைவிட்டிருக்கும் குடும்ப அமைப்பிலே பாலியல் வன்முறை நீடிப்பதற்கு எதிர்காலபயம், தனிமை, உற்றவரை இழந்துவிடக்கூடிய அபாயம், வருமானம், வசதி இப்படி இன்னும், இன்னும் காரணங்களை அடுக்கிகொண்டே போகலாம். தமிழ்சமூகத்திலே ஆண்-பெண் சுயவிருப்பின்றி பெற்றோரால் ஒழுங்குசெய்யப்படும் பல திருமணங்களிலும் மட்டுமல்லாது, காதல் திருமணங்களிலும்தான் பாலியல்வன்முறை நடைபெறத்தான் செய்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை.



## தொழில்நிலையங்களில் பாலியல்வன்முறை

ஆணும், பெண்ணும் கலந்து வேலைபுரியும் தொழிலகங்களில் பெண்ணை பாலியல் உறவுக்கு வசப்படுத்த முனைதல், அவளை அவள் விருப்பின்றி தொடல், அவள் உடம்பில் சேட்டைவிடுதல், ஆண் விருப்பத்துக்கு இணங்காவிட்டால் அவளைப்பற்றிய அவதூறுகளை பரப்பல் போன்ற இன்னும் பல பாலியல்வன்முறைகள் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. தொழில் பறிபோய்விடலாம், பெற்றோரிடம், கணவனிடம் இதுபற்றி புகார் செய்தால் அவர்கள் பெண்தொழில் செய்வதை மறுக்கலாம். குடும்பத்துக்கான வருமானம் குறையலாம். தம் ஆர்வமுயற்ச்சிக்கு தடை வரலாம் ஆகிய இன்னும் பல காரணிகளும் இவ்வன்முறை தொடர்ந்து நடைபெறவும், பெண்களை செயலற்றவர்களாகவும் ஆக்குகிறது. எல்லாவேலைகளிலும்-உற்பத்திதுறைகளிலும் வாழ்வின் அத்தியாவசியங்களை நிவர்த்திக்க பணமீட்டலில் ஊன்றியுள்ள பெண்களில், 80சதவீதத்துக்கும் மேற்பட்டோர், தாம் ஏதாவதொரு விதத்தில் பாலியல்துன்புறுத்தலுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆளாகியிருந்ததாக-இருப்பதாக கூறியதாக கணக்கெடுப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

## மதம்சார்பால்வினைத்தொழில்

ஆணாதிக்ககருத்தியலின் அடிப்படையில், இந்துமதத்திலே தேவதாசிமுறைமை உருவாக்கப்பட்டது. நடன-இசைக் கலைகளில் முன்புஅரசனும், பின்னர் நிலசொந்தக்காரனும் மிக-விருப்புடையவனாயிருக்கவேண்டும் என்ற கொள்கை



சொத்துஆதிக்கத்தின் செல்வாக்கை பறைசாற்றுவதற்கு தேவைபட்டது." பணமுள்ளவனின் இந்தப் பெருமை பின்பு முதலாளிகாலத்திலும் தொடர்கிறது." செல்வம்- உயர்வானது. இது கொண்டோர் உயர்குடிமக்கள். இவர்கள் ஆடல்,பாடல்கலைகளை மதித்தனர். கலைகளில் சிறந்த பெண்களை ஆடல்கணிகையர் பெயர் சூட்டப்பட்டு அவர் வாழ்வுக்கு வழிசமைத்தனர்" இப்படி பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் இந்த ஆடல் கணிகையர் யார் என்றால், அது சொத்துள்ளவனின் ",சுகசமாசாரத்துக்கு", உருவாக்கப்பட்டவர்கள் என்ற உண்மைதெரியவரும். இவன்களை திருப்திப்படுத்த அமுல் செய்யப்பட்ட இந்த முறைமை எழுதப்படாத சட்டம். விலைமகளிர் ஆக்கப்பட்டவர்கள், பணமுள்ளவனுக்கு "சேவைசெய்யும்" பாக்கியம் கிடைத்ததையிட்டு, தாம் பெறும் புண்ணியம் என்பதான முளைச்சலவை செய்யப்பட்டிருந்தனர். சமூகத்தின் வசைக்கு இவர்கள் ஆட்பட்டிருந்தும், இவர்கள் இப்படி இறைவனால் படைக்கப்பட்டுள்ளனர் என்ற முன்வினைப்பலன்வாதம் ,இந்துவத்தினால் கொண்டுவரப்பட்டது. இந்தபோதனை இன்னும் இந்தியாவின் சிலபகுதிகளில் நிலைகொண்டிருப்பதும், சாதி,அடித்தளங்களைக் கருத்தில் கொண்டும், ஆணாதிக்கத்தின் வசதிக்கேற்பவும் பெண்கள் தாமே விரும்பி தேவதாசிகளாக செயற்-படுவதாக, மிக கச்சிதமாக கூறப்படுகிறது. தலித்பெண்களை, தாங்கள் அனுபவிக்க ஏற்படுத்திக்கொண்ட தந்திரமும்கூட. இந்தியாவிலே சாதிமான்கள், தங்கள் சுகபோகத்துக்காக, பணத்திமிரினால் வைப்பாட்டிகளாக பெண்களை வைத்திருந்தார்கள் என்பது அறியப்பட்டதே. (தமிழ்சினிமாக்கள் பலவற்றில் இவ்விடயம் விலாவரியாக பேசப்பட்டுள்ளது.) அப்பெண்களுக்கு பிறக்கின்ற பிள்ளைகளும், அதே தொழிலில் பிறக்கவைக்கப்பட்டனர்.

இந்தியாவிலே மும்பை- சவுண்டாட்டி என்னும் கிராமத்திலே இருக்கிற ஏலம்மா என்று ஒரு தெய்வத்தை வணங்கும் பால்வினைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்கள், ஓரினசேர்க்கையாளர், அலிகள், தம்மை இத்தெய்வம் தேவதாசிகளாக ஆசீர்வதித்திருப்பதாக நம்புகின்றனர். ஏலம்மாவோடு திருமணமான பெண்ணை ஆண் யாரும் மணமுடிக்கவோ, காப்பாற்றவோ முடியாது. இந்த நூற்றாண்டிலும் இவ்வாறான மூடநம்பிக்கையின் அடிப்படையில், பால்வினைத்-தொழிலை தொடர்ந்து ஊக்குவிப்பது, இடைத்தரகர்களின் வியாபாரதந்திரம். வறுமையின் தீவிரத்தை கருத்தில் எடுக்காது, மதத்தின் பேரால், பெண்ணை தொடர்ந்து, பால்வினைத்தொழிலில் ஈடுபடவைத்த-வைக்கின்ற-வைக்கும் நோக்கம் இது.

## அரசுசார் பாலியல்வன்முறை

யுத்தம் அரசுகளுக்கு தேவைப்படும்போது பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுவது பெண்களே. நாடுபிடித்தகாலத்திலும் சரி, நவீனயுகத்திலும்சரி. ராணுவத்துக்கு பெண்ணை பாலியல்கொடுமைக்குள்ளாக்கும் சுதந்திரத்தை அரசுகள் தாராளமாக அள்ளிவழங்குகின்றன. போர்காலத்தில் வன்முறைக்குள்ளாகும் பெண்ணுக்கு எந்த நட்டஈடும் கிடைக்காமல் போகும்போது, (அவள் உயிரோடு மீளுவதே பெரிய விடயம்) ராணுவத்துக்கு ஊதியஓய்வுப்பணமும் பெற்று வாழ வழி இருக்கிறது. ஆனால் பாலியல் சித்திரவதைக்குள்ளான பெண்ணோ உடல்- உளநிலை பாதிக்கபட்டதோடல்லாமல், குடும்பத்தாலும் வெறுக்கப்படுகிறாள். அவள் அவ்வாறானதுக்கு ராணுவமும், அரசும் முழுப்பொறுப்பாயிருந்துமே அவள் சமூகத்தால் விலக்கப்பட்டுள்ளாள்.

சரித்திரநிகழ்வென்று வர்ணிக்கப்பட்ட மேற்குயப்பானிலுள்ள நீதிமன்றம் 1998ல் வழங்கிய ஒருதீர்ப்பானது யுத்தஅரசே பாலியல்வன்முறையை எப்படி ஊக்குவித்தது என்பதை பிட்டுக்காட்டியது. 2வது உலகயுத்தத்தின்போது, யப்பான் 200,000க்கும் அதிகமான பெண்களை கொரியா்,சீனா, பிலிப்பைன், கொல்லாந்து,இந்தோனிசியா, நாடுகளிலிருந்து வரவழைத்து தம் ராணுவத்துக்காக பால்வினைத்தொழிலில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். கிம் சாக் சன் என்னும் தென்கொரியபெண் 1991ல் தன்னைப்போல, இன்னும் பல பெண்களும் அன்றைய யப்பான் அரசால் எப்படி பால்வினைத்தொழிலுக்கு வற்புறுத்தப்பட்டோம் என்பதை உலகறியச்செய்தாள். நீதிபதி, நீதி கேட்டு வழக்கு போட்ட 3 பெண்களுக்கும் நட்டஈடுவழங்க-வேண்டுமென்பதோடு மட்டுமல்லாது அவ்வரசு இந்த பெண்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டுமெனவும் தீர்ப்பளித்தார். இது உலகின் அரசவன்முறைக்கு எதிராக கொடுக்கப்பட்ட தீர்ப்பாகும்.

## குடும்ப வறுமை

குடும்பவறுமை காரணமாக பெண்கள், சிறுவர்கள் இத்தொழில்தரகர்களுக்கு,-அறிக்கைகளின்படி- சொந்த பெற்றோர்களாலேயே விற்கப்படுகின்றனர். பெண் தம் கணவனை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றோரை இழந்தவளாகவளோ- அவர்களால் கைவிடப்பட்டவளாகவோ, அல்லது குழந்தைகளை காப்பாற்றவேண்டியநிலைக்கு தள்ளப்படும்போது, ஏதாவது தொழில்களில் தம் வருவாயை-வயிற்றை நிரப்பிக்கொள்ள தேவை உள்ளது. இழக்கவே ஒன்றுமே இல்லாத நிலைவந்தபோதும், தன்உடலை முதலாக வைத்து பிழைக்க எந்த ஆசிய பெண்ணும் தானாய் முன்வருவதில்லை. காரணம் அவளுக்கு மேலே அழுத்தபட்டிருக்கும் ஒழுக்கங்கள், அடக்கு-முறைகள்,சுதந்திரமின்மை, குடும்ப-பொறுப்பு,கௌரவம் என்பன உன்னதமானதாக அவள் கழுத்தை இறுக்கிக்கொண்டிருக்கின்றன. பட்டினியால் பெற்ற பிள்ளைகளை கொலை செய்த பெண் ஒரு பரிதாபத்துக்குரியவளாக சித்தரிக்கப்படுகிறாள்.பிள்ளைகளை காப்பாற்ற , பால்வினைத்தொழிலில் ஈடுபட்டவளோ அருவருக்க-படுகிறாள். பசியைவிட தன்மானமே பெரிதென்ற, மரபுவழிப்படுதல் பெண்ணுக்குமேல் திணிக்கப்பட்டிருப்பது ஒருபுறமும், பெண்ணுக்கு தன்உடல் பற்றிய தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் அவள் மரணவாயிலுக்கு தள்ளப்புடும் நிலையிலும்-அவள் இறப்புக்கு பின்னரும் கூடகிடையாது என இன்னொருபுறமாக வலியுறுத்தப்படுகிறது.

தாய்லாந்து, பிலிப்பைன், ஆபிரிக்காவின் சிலநாடுகளிலும் இருந்து இளம் பெண்கள் வளர்முகநாடுகளுக்கு திருமணத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டு, பின்னர் இவர்களை பால்வினைத்-தொழிலில் ஈடுபடவைப்பது பால்வினைத்தரகர்களின் தந்திரம். பணத்திற்காக மனிதவிற்பனை செய்தது, அடிமைகளாக மனிதரை விற்றகாலத்தில் மட்டுமல்ல, இன்றுமே தொடர்கிறது.

பால்வினைத்தொழிலை பெண் மேற்கொண்டிருத்தல் பற்றி வளர்முகநாடுகளின் சிந்தனைக்கும், ஆசியநாடுகளின் சிந்தனைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்களுண்டு குடும்பவறுமைகாரணமாக ஆசியப்பெண்கள் பால்வினைத்தொழிலுக்கு போகிறார்களா என்பதை ஆராயும்போது, சில உண்மைகள் வெளிப்படுகின்றன. பிலிப்பைனிலிருந்து கொங்கொங்குக்கு பெண்கள், களிப்பூட்டும் நிகழ்வுக்காக என்று அரசின் அனுமதிசீட்டோடு பால்வினைத்தொழிலுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். வீட்டு வேலைக்கு ஏன் மத்தியகிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அங்கு வீட்டுஎசமான்களால் பாலியல்வன்முறைக்கு ஆளாக்கபடும் பெண், அத்துன்பத்திலிருந்து விடுபட வேலையை விடுகிறாள். கடன் எடுத்து விமானடிக்கட் வாங்கி, கடன் கட்டவேண்டிய நிலைமையில், சகோதரர்களை-கணவனை- பிள்ளைகளை காப்பாற்றவேண்டிய கட்டாயத்தில், நாட்டுக்கு திரும்பவும் முடியாமல், வேறுவழியின்றி, பாலியல் தொழிலுக்குள் நுழைகின்றாள். தன் உடலை விற்கிறாள். உயிர்வாழ்தலுக்காக இப்படி பலர் இதனுள் மூழ்கிவிடுகின்றனர். அவ்வாறு ஆனதற்கும் அவளே காரணமாக்கப்படுகிறாள். எளிதாக பணம் திரட்டும் வழி இது என்று முடிவெடுத்தபின் இதிலிருந்து மீளுவதென்பது, அவள் உயிருடன் வாழும்வரை முடியாது. சமூகத்தின் முன்னால் இவள் தொழில் ஆணை வசப்படுத்துகிற, மயக்கநிலைப்படுத்துவது, ஒழுக்கத்தை உடைக்கிறது என்ற நிந்தனைகளையெல்லாம் செய்கிறதாகிறது. இதனால் வயிற்றுபிழைப்பு என்ற மனிதனின் அத்தியாவசியம் மறக்கடிக்கப்பட்டு, அது பெண்ணின்சாகசம் என முத்திரை குத்தப்படுகிறது.

## *சிறுவர்மீதான பாலியல்வன்முறை*

சிறுவர்களை இத்தொழிலில் ஈடுபடுத்தும் அருவருப்பான, காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு ஏதாவது நியாயம் உண்டா? எவ்விதத்திலும் மன்னிப்பு அற்ற தண்டனை கொடுக்க வேண்டிய குற்றம் இது. மனித உரிமைபற்றிய கேள்வியை ஒவ்வொரு அரசிடமும் கேட்கவேண்டியுள்ளது. உலகெங்கும் 2 லட்சம்.சிறுவர்பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாக யுனிசெப் கணக்கிட்டுள்ளது. ஆனால் இத்தொகையைவிட கூடியளவு உண்மையில் இருக்கக்கூடுமாம். பிரேசில்,பிலிப்பைன், தாய்லாந்து, நேபாளம், இலங்கை, இந்தியா,தென்அமெரிக்கா, கம்போடியா்ஆகிய இன்னும் பலநாடுகளிலும், வயதுகுறைந்தோரை பாலியல் தொழிலில்,ஈடுபடுத்தி கேளிக்கை விடுதிகளும் தனிப்பட்டவர்களும் பெரும் லாபமடைவதாக அறிக்கைகள் கூறுகின்றன. பெரியநகரங்களில், உயிர்வாழ்தல்வேண்டி சிறுவர்கள் தாமாகவே இத்தொழிலை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்தியாவுக்கு ஒவ்வொரு வருடமும் 5000-7000வரை சிறுவர்கள் நேபாளத்திலிருந்து பால்வினைத்தொழிலுக்கு ஈடுபடுத்த கொண்டுவரப்படுவதாகவும், இவர்களில் 20சதவீதமானோர் 16 வயதுக்கும் குறைந்தவர்கள் எனவும் அறியப்பட்டுள்ளது. கடத்திகொண்டுவரப்பட்ட சிறுமியின்மேல் 10-15 பாலியல்வன்முறையாவது நடைபெறுகிறது இறுதியில் அவளாகவே தானாகவே உடன்படும்வரை. வசதியுள்ளவனின்-உடல்பலமுள்ள-வனின்-வயதுவந்தோனின் காமஇச்சைக்காக சிறுவர்களின் மேல் பாலியல்வன்முறை செய்யப்படுகிறது. சிறைகளில்மட்டும்தானா சித்திரவதை நடைபெறமுடியும்? தன் காமத்தை தீர்க்க எந்த வழியிலும் முனைபவனுக்கு இன்னொரு உயிரின் வயிறோ வாழ்வோ பற்றிய அக்கறை ஏற்படாது. தன்உடற்பசிக்காக இன்னோர்மனிதனை வன்முறைக்குள்ளாக்குவது மனிதஉரிமையை பறிப்பது ஆகும்.

உல்லாசபிரயாணிகள் சிலரின் கருத்துப்படி, பெண், சிறுவர் பாலியதொழிலாளர்களின் கடைவிரிப்பு கவர்ச்சியாக,அமோகமாக இருப்பதாலேயே சிவப்புவிளக்கு பகுதிக்கு தாம் இழுபடுவதாக கூறப்பட்டது. இந்த இளம்சிறார்களின் வாழ்வுரிமையை பறித்து, சூறையாடி, கொள்ளைலாபம் பெறுவதற்கு சிறார்களையோ, பெண்களையோ காரணமாக்குவதானது, அவர்கள் தலையிலேயே எல்லாக்குற்றத்தையும் கட்டிவிட்டு தப்பிவிடும் தந்திரத்தை கொண்டது. சிறுவர்களை தம் பாலியல் வக்கிரத்துக்காக, வீடியோபடங்கள் எடுத்து, அவர்களை பாலியல் ரீதியில் துன்புறுத்தியும், உயிர்கொலைசெய்தும் வருவதான கொடுமைகள் நடந்தகொண்டுதான் இருக்கின்றன.

இலங்கையில் ஒரு உல்லாசபிரயாணி, சிறுவர்களை தன்பாலியல்சுகத்துக்காக பயன்படுத்துவது நன்கு தெரிந்துமே பெற்றோர் தன்சிறுமகனை அந்தப்பிரயாணியிடம் அனுப்பி பணம் பெற்றனர். இது விடயத்தில் அவர்களின் கருத்து: "இதனால் என்ன நடந்துவிட்டது? ஒரு பெண்பிள்ளையைத்தான் ஆணிடம் விடக்கூடாது. ஆண்பிள்ளைக்கு என்னதான் நடந்துவிடமுடியும்? அங்கு ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலியல்கொடுமையில் ஆண்- பெண் பேதம் கிடையாது. வறுமையின்-வயிற்றுப்பசியின்-மனிதனின் உயிர்வாழ்தலின் நிமித்தம் தென்அமெரிக்கநாடுகளில் சிறுவர்கள் வீதியில் வாழும் அநாதைகளாய், பால்வினைத்தொழிலாளிகளாய் வாழ்வுநடத்தும் அவலம் தெரிந்ததே. சிறுவர்களின்மீதான பாலியல்கொடுமை முதலாம், இரண்டாம், மூன்றாம் நாடுகள் என்ற வேற்றுமைகளைக்கடந்து, அவர்களின்மேல் நடாத்தப்படுகிறது என்பது யதார்த்தம்.

இன்னும்சில

யேர்மனியில் மட்டும் பால்வினைத்தொழிலால் ஒரு வருடத்துக்கு 11 கோடிக்கு மேலாக லாபம்தருகிறதாம். 400,000 பெண்கள் இதில் ஈடுபட்டுள்ளார்களாம். கணக்கெடுப்பு சொல்கிறது. பால்வினைத்தொழிலை ஒரு சாதாரணதொழிலாக மதிக்கும்படி பல ஐரோப்பியபெண்கள் போராடுகின்றனர். இதுபற்றி காரசாரமான கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன: "பணத்துக்கு உடல்விற்பனை மற்றைய தொழில்கள் மாதிரியேதான். இதனை தடைப்படுத்துவதினாலேதான் குற்றங்கள் செய்யப்படுகின்றன. பெண்களுக்கு ஒரு உத்தரவாதம் இல்லை. அவர்கள் கொலை செய்யப்படுகின்றனர். இதனை ஒரு தொழிலாய் அரசு அங்கீகரித்தால், பெண் உயிருக்குஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கலாம்"

அதேசமயம் பணத்தை கொடுத்துவிட்டு, தம்மை தேடிவரும் ஆண்கள், தம்மை "ஒரு அழுக்குபண்டமாய்" கணக்கெடுக்கின்றனர் என்ற வாக்குமூலங்களும் பதியப்பட்டுள்ளன.

காலம்காலமாக மக்கள் பாலியலை-அதன்சார்புபிரச்சினைகளை மத,கலாச்சாரக்கண்கொண்டு பார்ப்பதை விடுத்து, வாழ்வியலின் அத்தியாவசியத்தை, உடல்- உணர்வு பற்றிய அக்கறையை புரிந்து கொள்ளல் எப்போதுமே தேவை. இந்த நூற்றாண்டுவரை இதுபற்றிய தெளிவுகள் நம்மிடம் தேடப்பட்டுள்ளதா? உலகின் எல்லா பரப்புகளிலும் உடல்- மனிதவிற்பனை இன்னுமே நிகழ்ந்துகொண்டிருக்கும் அவலம் கேள்விகளாகவே இருக்கின்றன.

தமிழ் சமூகத்திலே திருமணமூலமே பாலியல் உறவு-குடும்பத்துள் வன்முறை போன்ற பல கேள்விகளுக்குட்படுத்தவேண்டிய விடயங்களை ஆராயவேண்டிய கட்டாயம் உள்ளது. இதுபற்றிய கலந்துரையாடலுக்கு ஒரு போலியான வெட்கம் தேவையில்லை. இது ஒரு திறந்த மனப்பான்மையோடும் சமூகநலத்தை பொறுத்தும் நிகழவேண்டும்.

*(கட்டுரையில் சூட் ஆசியன் பத்திரிகையிலிருந்தும், வேறுபலபத்திரிகைகளின் கட்டுரைகளிலிருந்தும் சில குறிப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.)*

## 'எயிட்ஸ்' நீ வாழ்க!

அம்மையே "எயிட்ஸ்" பயங்கர நோயே
நீயொரு பேயென நான்அறிவேன்.
அகராதியின்படி ஆதித்தொழிலால்
ஆபிரிக்காவில் ஆரம்பமானாய்.
ஆண்மோகம் பெண்போகம் காரணமாய்
வந்த நோய்க்கலப்பே.
ஆனாலும் இன்று அதிகம் பலியாவது
அப்பாவிக் குழந்தைகளே!

இல்லற ஈரலிப்பு ஒட்டுமொத்தமாக
இற்றுப் போய்விட்டால்
இல்லாத பொல்லாத எண்ணங்கள்
பற்றிப் படர்ந்து விட்டால்
ஈனத் தொழில் புரியும்
பால்வினைத்தொழிலாளர்கள் தித்திப்பார்கள்.
ஈரப்பசை கரையும்வரை
தினம் கொள்ளையின்பம் கொடுப்பார்கள்.

உல்லாச மொழி பேசிப்
பொல்லாத விழியாலலே
கற்காத வழிகாட்ட
உருக்கத்தோடு துடிதுடித்து
"பத்தினி "போல் நெருக்கமாக நடிப்பார்கள்
ஊருக்கு உபதேசம் உனக்கல்ல
என்ற நிலையில் ஆண்களிருக்கும் வரை
ஊடலைத்தினம் நாடும் உன்மத்தர்கள் ஒருபோதும்
திருந்தமாட்டார்கள்.

எச்சில் குணம் படைத்தவரின்
கொட்டம் அடங்கும் வரை "நீ"
வாழ்க.
எச்சரிக்கை இது என்ற எண்ணம்
மனதில் என்றென்றும் இருக்கட்டும்
ஏனென்று சொல்கிறேன் கேள்.
குரங்கான மனதை மேயவிட்டால்
ஏவற்பேய் "சிரங்கு" தொற்றுமையா.
சொறியச் சொறியச்
சுகம்தான்.

ஐயா உன் ஆட்டத்தால் அரிக்கும்.
கையில் கடிக்கும். தடிக்கும்
ஐயையோ ஊனமெல்லாம் புரையோடி
எரிந்துருகி கரையுமையா.
ஒதுங்கி வாழ்ந்தாலும் ஓடாகி
எலும்புக் கூடாகி உள்ளே மளையுமையா.
ஒழுக்கம் கெட்டதற்குத்தண்டனை இது வென்று
பட்டினத்தார் ஆகிவிடு.

ஓலமெதற்காக? ஒப்பாரியெதற்காக ?
அலங்கோலமானபின்னர் எங்கு
ஓடி ஒளித்தாலும் "எயிட்ஸ்" அம்மை உன்னை
ஒரு போதும் விட்டகலாது.
ஔவை சொன்னாள். ஒருத்தனுக்கு
ஒருத்தியென்று.
ஏட்டளவில் உபதேசம்!
ஔடதம் "நீ" யின்றேல் பண்பான
வீட்டிற்கும் பரிதாப இருட்டடிப்பு வந்துவிடும்!

-ஈஸ்வரி மெல்பன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சென்னையில் ஒரு சின்ன வீடு

-ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்-



"இந்த தாய் சொல்வதில் எத்தனை உண்மை இருக்கிறது?"

காயத்திரி சிவராமன் தனக்குள் யோசிதது்க் கொண்டாள்

"சில பெண்கள் தங்கள் சுய நலத்திற்காகா எதையும் செய்வார்கள் எதையும் சொல்வார்கள் அதுவும் ஆங்கில நாட்டில் இப்படி பொய் சொல்லுபவர்களுக்கு .."

திருமதி சங்கரலிங்கம் சட்டென்று நிறுத்திக் கொண்டதற்கு காரணம் காய்த்திரியின் பார்வை ஆத்திரத்தைக் கொட்டியதாகும்

காயத்தரி இந்தியத் தாய் தகப்பனுக்கு லண்டனில் பிறந்தவள் "இதோ பாருங்கள் மிஸ்ஸ் சங்கரலிங்கம் நாங்கள் இந்தக் கேசின் முடிவை உங்கள் வாக்குமூலத்திலிருந்தும் உங்கள் மகளின் வாக்குமூலத்திலிருந்தும் தான் முடிவு கட்ட முடியும் உங்கள் இருவரின் வாக்குமூலமும் ஒரு வீதத்திலும் ஒத்துப் போகவில்லை" காயத்தரி நிறுத்திக் கொண்டாள்.

"எப்படிப் பொருந்த முடியும்? அவள் வேண்டுமேன்றே இப்படி அவமானம் செய்கிறாள்"

தாயின் குரலில் ஆத்திரம் முகம் சிவந்துவிட்டது. மூச்சு வாங்கியது. முந்தானையால் முகத்தைத் துடைத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டாள். முகத்தைத் துடைக்கலாம் மகளுக்கு நடந்ததைிருக்கும் துயரைத் துடைக்க முடியுமா?

"அம்மா யாரையும் திட்டமிட்டு அவமானம் செய்யும் வயதில்லை அவளுக்கு. இப்போதுதான் பதின்மூன்று வயதாகிறது. நீங்கள் சொல்வது போல் அவள் இத்தனை கதைகளையும் கற்பனை செய்திருக்க முடியாது"

"நிறுத்துங்கள் சோசியல் வேக்கரின் வேலை குடும்பத்தை பிரிப்பது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்"

திருமதி சங்கரலிங்கம் கோபத்துடன் அதிர்ந்தாள்.

அவள் குரல் மட்டுமல்ல உடம்பும் பரபரத்தது.

"தாயே இந்த நாட்டுச் சடட்டத்தின படி ஒரு குழந்தை ஒரு குடும்பத்தின் பாதுகாப்பில் மட்டும் இல்லை. அரசாங்கத்திற்கும் அந்த குழந்தையின் பாதுகாப்பில் பெரும் பங்கிருக்கிறது.உங்கள் பெண்ணுக்கு இப்போதுதான் பதின்மூன்று வயதாகின்றது தனது குடும்பத்தில் தனக்குப் பாதுகாப்பில்லை என்று சொன்னால் பாதுகாப்பு கொடுப்பது இந்த அரசாங்கத்தின் கடமை. குழந்தைகள் தேசிய சின்னங்கள் அவர்களின் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஒரு குடும்பம் கொடுக்காவிட்டால் அந்த பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்."

"அது தான் தெரிகிறதே லண்டனில் எத்தனை குழந்தைகள் போதை மருந்து விபச்சாரம் குற்றத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று" திருமதியின் நக்கலான சொல்லுகக் காயத்திரி மறுமொழி சொல்லாமல் அந்த தாயை ஊடுருவிப் பார்த்தாள். அப்படிச் பொல்லாத நாட்டிற்கு ஏன் நாங்கள் வருகிறோம் என்று அவள் கேட்க நினைத்தாளோ என்னவோ

உண்மையில்தான் ஐரோப்பாவிலிருந்து வந்த லொறி ஒன்றில் இருபது முப்பது அகதிகள் வந்து சேர்ந்தார்கள் என்றும் அவர்களில் பெரும்பாலோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் ரிவியில் சொன்னார்கள்

"மிஸ்ஸிஸ் சங்கரலிங்கம் உலகத்தில் எல்லா நாடுகளிலும் தான் பிரச்சனையிருக்கிறது இதற்கு லண்டன் மட்டும் விதிவிலக்காக இருக்கமுடியாது. அதிலும் இப்படியான விடயங்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் அவர்கள் யார் எந்த மாதிரிக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரியும் "

காயத்தரி அமைதியாகச் சொல்கிறாள்

"இதோபாருங்கள் இலங்கையில் இருக்கேக்கேயே என் மகளுக்கு தலையில் சுகம் இல்ல. தகப்பனை ஆமிக்காரன் சுட்டு சாக்காட்டினபோது அவளுக்கு ஆறு வயது. வீட்டில ஷெல் விழுந்து பாட்டி , பாட்டன் ஒரு நிமிடத்தில கருகி இறந்தபோது அவளுக்கு வயது ஏழு. இந்த கொடிய நிகழ்ச்சிகள் அவள் மனதைப் பாதித்துவிட்டது."

தாய் இப்போ விம்மி விம்மி அழுதாள்

அதற்கு மேல் விசாரணையைத் தொடர காய்த்தரி விரும்பிவில்லை.

"சரி உங்களுக்கு வசதியான நாளில் நாங்கள் இந்த விசாரணையைத் தொடரலாம் என்றிருக்கிறேன்"

காய்த்தரி எழுந்தாள்

மிஸ் சாந்தி சங்கரலிங்கம் என்று எழுதப்பட்ட பைல் அவள் கையிலிருந்தது.

சாந்தியிழந்து விட்ட ஒரு பதின்மூன்று வயதுப் பெண்ணின் கதை அந்த பைலில் இருக்கிறது.

திருமதி சங்கரலிங்கம் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

"அவளுக்குப் பைத்தியம் என்று எத்தனை தரம் சொல்லியும் நம்பமாட்டேன் என்கிறீர்களே"

வெறுப்புடன் சொல்லிவிட்டு கதவை கடந்தாள் திருமதி சங்கரலிங்கம்.

காயத்திரி பைலைத் தடவினாள்.

சுாந்தியின் கண்ணீர் ஞாபகம் வந்தது. காயத்திரி கண்களை இறுக மூடிக் கொண்டாள். மலரமுன்பே கருகிவிட்ட மொட்டா அவள்?

மலர்ச்சியான வாழ்க்கை தேடி லண்டன் ஓடிவரும் இளம் குழந்தைகளின் வாழ்க்கை எப்படி சிதைக்கப் படுகிறது என்று காயத்திரிக்கு தெரியும் அவளின் பதினைந்து வருட அநுபவத்தில் எத்தனையோ இனங்களுடன் அவள் வேலை செய்திருக்கிறாள்

கதவை யாரோ தட்டினார்கள்

வந்தவர் அவளின் மேலதிகாரி

சாந்தி சங்கரலிங்கம் என்ற பதின்மூன்று வயதுப் பெண்ணின் எதிர்காலத்திற்குகுப் பொறுப்பாக இருப்பவர்.

"கம் இன்" காயத்திரி உயிரற்ற குரலில்.

மிஸ்டர் பீட்டர் வலன்ஸ் அவளை உற்று நோக்கியபடி முன் அமர்ந்தார்.

"குட் நியூஸ் இல்லை என்று நினைக்கிறேன்"

"இந்த தாய் தன் மகளுக்கு நடந்த கொடுமையைத் தன் மகளின் கற்பனைக்கதை பொய் , பித்தலாட்டம் என்றெல்லாம் சொல்கிறாள்."

"மெடிக்கல் எவிடெனஸ் இருந்ததே" மிஸ்டர் வலயன்ஸ் புருவத்தை உயர்ததிக கொண்டார்.

"சாந்தியின் உடம்பில் இருந்த காயங்கள் எல்லாம் சாந்தி தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டவை என்கிறாள் தாய்"

காயத்திரி பெருமூச்சுடன் சொன்னாள். சில பெண்கள் மற்றவர்களிலுள்ள கோபத்தில் தங்கள் உடலை வதைத்துக் கொள்வார்கள் மிஸ்டர் வலன்ஸ் மௌனமாகிறார்

சாந்தியின் பாடசாலை ரிப்போட் இருக்கிறது. அந்த ரிப்பொட்டில் சில பகுதிகள் ஞாபகம் வருகிறது

" இன்று சாந்தி மிகவும் மனமுடைந்த நிலையில் காணப்பட்டாள். என்னவென்று விசாரித்த போது பதில் சொல்லாமல் அழத் தொடங்கிவிட்டார்."

அந்த ரிப்போட் சாந்தியின் பன்னிரண்டாம் வயதிலிருந்து தொடங்குகிறது.

ஸ்கூல்நேர்ஸின் ரிப்போட்

"சாந்தியிடமிருந்து தகவல்களை எடுக்க எத்தனையோ நாட்கள் எடுத்தன. உண்மையைச் சொன்னால் தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடும்பம் தன்னை ஒதுக்கி வைக்கும் என்பதால் தான் உண்மையை சொல்லத் தயாரில்லை என்று சொல்லியிருக்கிறாள்."

பாடசாலை சைக்கோலஸ்ட்டின் றிப்போர்ட்

"பன்னிரண்டு வயதான இந்தப் பெண் இளம் வயதில் இலங்கியல் நடக்கும் அரசியல் பிரச்சனைகளால் தகப்பனை இழந்தவர்.அவர் ஏழு வயதாக இருக்கும் போது அவளை அன்புடன் வளர்த்து வந்த பாட்டனும் பாட்டியும் ஷெல் விழுந்தால் சிதறி செத்து விட்டார்கள். அன்றிலிருந்து இந்தப் பெண் உலகத்தை மிகப் பயங்கரமாகப் பார்க்கிறாள். தான் அன்பு வைத்தவர்கள் எல்லாம் தன்னை விட்டு போய் விடுவதாக நினைக்கிறாள். தாயை மிகவும் நேசிக்கிறாள். ஆனால் தனக்கு தன் வீட்டில் நிகழந்த விடயங்களை சொன்னால் தாய் தன்னை நம்பப் போவதில்ல என்று நினைக்கிறாள். ஏனெனில் இவர்களின் வாழ்க்கைக்குத் தாயின் தம்பியின் தயவு தேவைப்படுகிறது.அந்த அங்கிளின் உதவி பறிபோனால் தாய் தன்னைப் பழி வாங்குவாள் என்று சாந்தி நம்புகிறாள்"

காயத்தரி தனக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் மிஸ்டர் வலன்ஸைப் பார்க்கிறாள்

"நாங்கள் சாந்தியின் குடும்பத்தாரின் உதவ இல்லாவிட்டால் இந்த கேசை முன்னெடுப்பது கஸ்டமாக இருக்கும்."

அவர் எழுந்துவிட்டார். அவர் ஆங்கிலேயன். அதிகம் தலையிட்டால் தன்னை இனவாதி என்று சொல்லி விடுவார்கள் என்ற பயம். காயத்திரியின் உதடுகள் கோபத்தில் துடிக்கின்றன.

தாய் தகப்பனின் வேண்டுகோளுக்காக விருப்பமில்லாத கலியாணங்கள் செய்து கொண்டு இயந்திரமாக உழைத்து இறக்கும் எத்தனையோ ஆசியப் பெண்களை அவள் சந்தித்து இருக்கிறாள்

கணவனின் கொடுமை தாங்காது தற்கொலை செய்து கொண்ட கேசுகளும் அவளுக்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றன. காயத்திரி இந்த வேலைககு வந்த பின் அவள் சந்தித்த கண்ணீர்க் கதைகள் ஆயிரம். உறவினர் என்ற போர்வையில் வீட்ட வரும் மாமாக்கள் சித்தப்பாக்கள், தாத்தாமாரில் ஒரு சிலர் செய்யும் மன்மத லீலைகளை சொல்லத் தெரியாத குழந்தைகளை பாடசாலை ஆசிரியை அடையாளம் காட்டும் போது "பெண்ணாகப் பிறந்தாலே" என்று அவள் யோசிப்பாள்

மிஸ்டர் வலன்ஸ போய்விட்டார்

இன்னும் சில கிழமைகளில் சாந்தியின் எதிர்காலத்தை நிர்ணயிக்க ஒரு கான்பிரன்ஸ் நடக்கும் அதில் சாந்தியின் பாடசாலைஆசிரியை, பாடசாலைநேர்ஸ், பாடசாலை சைககலாயிஸ்ட், குடும்ப வைத்தியர், சோசியல் வேக்கர் லோயர் என்று எத்தனையோ அரசாங்க உத்தியோகத்தர்களும் சாந்தியும் தாயும் வருவார்கள்

அப்போது சாந்தியின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும்

"இன்று சாந்தியின் உதடுகள் வீங்கியிருந்தன. அவள் வகுப்பு ஆசிரியை இது பற்றி அவளிடம் விசாரிக்கச் சொன்னதால் நான் சாந்தியை என் அறைக்கு அழைத்தேன்."

பாடசாலை நேர்ஸின் றிப்போர்ட் தொடர்கிறது. இந்த றிப்போட்டில் இருக்கும் எல்லாமே காயத்திரிக்கு தெரியும். .காயத்தரி சட்டென்று பைலை மூடிவிட்டு எழுந்தாள். இன்னுமொரு கேஸை அவள் பார்க்க வேண்டும்.

லண்டனில் வழக்கம் போல மழையும் காற்றும் போட்டி போட்டுக் கொண்டு நடைபாதையில் போவோரை நனைத்துகு கொண்டிருந்தது

மாசிமாதம் தொடங்கி விட்டாலும் குளிர் குறையப் போகிறது என்று கற்பனை செய்தவர்களுக்கு ஒன்பது செல்சியஸ் பாகையில் சூடு அசையாமல் நின்றபோது எரிச்சல் வந்தது. பற்றாக்குறைக்கு மழை வேறு. இதில் குடை கொண்டு போனால் வாயு பகவான் இப்படியே பிடுங்கி விடுவான் காய்த்திரியின் மனதில் அதைவிட சூறாவளி நடந்து கொண்டிருந்தது. காயத்திரி நடையைக் கூட்டினாள்

அந்த வீதியின் கடைசியில் சாந்தியின் பள்ளிக் கூடமிருக்கிறது.

சாந்தியை அவள் முதல் தரம் சந்தித்தது ஞாபகம் வருகிறது

"எங்கள் பாடசாலையில் படிக்கும் சாந்தி சங்கரலிங்கம் என்ற பெண் ஏதோ ஒரு மனப்பிரச்சனையில் இருக்கிறாள் என்று நினைக்கிறோம். அதற்கு பின்னணியான காரணங்கள்அவள் குடும்ப நிலையாயிருக்கலாம்"

இப்படித்தான் தொடங்கியிருந்தது பாடசாலைக் கடிதம். ஆந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டு சாந்தியின் தாயைச் சந்திக் சென்றது ஞாபகம் வருகிறதுவீட்டைத் திறந்தவுடன் ஏதோ பக்திப்பாடல் கேட்டது. சாம்பிராணி மனம் வீட்டை நிறைத்திருந்தது.

"நீயார்" என்ற கேள்வியைக் கண்களில் தொங்கவிட்டுக் கொண்டு கதவைத் திறந்தவள் சாந்தியின் தாய் காயத்திரி தன்னை அறிமுகம் செய்து கொண்டாள். "நான் ஒரு சோசல் வேக்கர் சாந்தியன் பாடசாலையிலிருந்து வந்த ஒரு கடிதத்தை பற்றி விசாரிக்க வந்திருக்கிறேன்". உத்தியோக தோரணையில் சொன்னாள் காயத்திரி

தாய் ஒன்றும் தெரியாதவள் போல விழித்தாள் உண்மையாகவே ஒன்றம் தெரியாமல் இருக்கலாம்.

என்னவென்று இந்த தாய்க்கு விடயத்தை சொல்வது? சாந்திக்கு நடக்கும் கொடுமைகளை இவள் விளங்கிக் கொள்வாளா? சாந்தியின் காயம் வந்த உதடுகளை உறிஞ்சியவன் உனது தம்பி என்று சாந்தி சொல்கிறாள் என்பதை எப்படி தாங்கிக கொள்வாள்?

பூப்படைந்தது என்று நீ பெரிய கொண்டாட்டம் போட்டதன் காரணம் சாந்தியின் இளமையைப் புண்ணாக்கி விட்டகைனாலத்தான் வந்தது என்பதை இவள் ஒப்புக் கொள்வாளா?

நகம் பதிந்து நீலம் பாரித்த இளம் முலையைத் திருகியவன் உன்னுடன் சேர்ந்து உன் தாயின் கருப்பையைத் தனதாக்கிக் கொண்டவன் என்பதை இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாவித் தாய் மனம் தாங்கிக் கொள்ளுமா?

காயத்திரி திருமதி சங்கரலிங்கம் கொண்டு வந்து வைத்த தேனீரைப் பருகிக் கொண்டாள். வடையை எடுத்து கீழும் மேலும் பார்த்தாள்.

"உறைக்காது சாப்பிடுங்கள்" சாந்தியின் தாய் முக மலர்ச்சியுடன் சொன்னாள்.

சாந்தியை "பிரைவேட்டாப்" படிப்பிக்க எங்க உதவி எடுக்கலாம் என்று சாந்தியன் தாய் பாடசாலையை ஆசிரியரைக் கேட்டிருந்தாள் அது விடயமாகத்தான் இந்த சோசியல் வோர்க்கர் வந்திருப்பதாக அவள் நினைத்துக் கொண்டாள்.

லண்டனுக்கு வந்த தமிழர் பலர் தாங்கள் பட்ட கஸ்டங்கள் தங்கள் குழந்தைகளுக்கு வரக்கூடாது என்பதற்காக எத்தனையோ கண்டப்பட்டு வேலை செய்து பிரைவேற்றாகப் படிப்பிக்கிறார்கள்

சாந்தியின் தாயால் அது முடியாது. இலங்கையில் அவள் பட்ட கஷ்டத்தால் இப்போதே அவள் இதயம் படபடக்கத் தொடங்கி விட்டது. நீரிழிவு நோய் எட்டிப் பார்த்து விட்டது.மாத்திரையும் மருந்துமாகத் தன் நேரத்தை செலவழிக்கிறாள்.

"இந்த நாட்டுக் குளிர் உடம்புக்கு பிடிக்கவில்லை. இரத்தம் உறைந்து இருதயம் சரியாக வேலை செய்யமாட்டேன் என்கிறது"

பெருமூச்சுடன் சொன்னாள் சாந்தியின் தாய் "பிரைவேட் பள்ளிக்கூடத்திற்கு சாந்தியை அனுப்ப முடியாவிட்டால் எப்படியும் இந்தியாவில போய் இருக்கப் பார்க்கிறன் தம்பி உதவி செய்யிறன் என்று சொல்லியிருக்கிறான்"

பெருமையுடன் சொல்லிக் கொண்டாள் சாந்தியன் தாய் தம்பி உதவி செய்கிறானாம் ஆடு நனைய அழும் ஓநாய்.

காயத்திரி வடையை சாப்பிட்ட உறைப்புத் தீர கொஞ்சம் தண்ணீர் குடித்தாள்.

சாந்தியை பற்றி பாடசாலையில் சில கேள்விகள் வந்திருக்கின்றன. தயக்கத்துடன் தொடங்கினாள் காயத்தரி

"எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதிக கொடுத்தேனே" தாயின் மறுமொழியிலிருந்து சாந்தியின் தாய்க்கு விடயம் தெரியாதென்று

மெல்ல மெல்லமாக விஷயத்திற்கு வந்தாள் காயத்தரி உண்மை எப்படிக் கசக்கும் என்பது அவளுக்குத் தெரியும்

"மிஸ்ஸிஸ் சங்கரலிங்கம் சாந்தி சாந்தி இந்த வீட்டில் தனக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறுகிறாள்."

காயத்திரி சட்டென்று நிறுத்தினாள்.

தாயின் முகத்தில் இன்னும் குழப்பம்.

"சாந்தி சிலவேளைகளில் உடம்பில் சில காயங்களுடன் வருகிறாள். காரணம் உங்கள் தம்பி என்று சொல்கிறாள்"

காயத்தரி கவனமாக தன் வார்த்தைகளை அவிழ்த்தாள்

தாய் வெலவெலத்துப் போனாள் தன்குடும்ப ரகசியம் வெளிவந்த பயத்தால் முகம் வெளிறி விட்டது. "என்ன சொலகிறாய் என் தம்பி இவளை தன் குழந்தை போல் பார்க்கிறான் எட்டு வயதில் இருந்து இவளுக்கு அவன் எவ்வளவு செலவழிச்சான் தெரியுமா?" தாய் அலறினாள்

ஏன் செலவழித்தான் என்பதன் விளக்கம் உனக்குத் தெரியுமா என்று கேட்க நினைத்தாள் காயத்திரிஆனாலும் மௌனமாக இருந்தாள்.

"இப்படிக் கதை கட்டிவிட்டவளுக்கு எப்பித் திமிர் இருக்க வேண்டும் " தாயின் ஆத்திரம் வார்த்தைகளாக வெடித்தன.

" மிஸ்ஸிஸ் சங்கரலிங்கம் சாந்தியாக வந்து எதையும் பாடசாலையில் சொல்லவில்லை. அவள் நடவடிக்கையில் மாற்றங்கள் இருந்ததை அவதானித்த வகுப்பு ஆசிரியை, பாடசாலை நேர்ஸ், பாடசாலை சைக்கோலோஜிஸ்ற் எல்லாரும் என்வென்று விசாரித்த பின்தான் உங்களிடம் பேசச் சொல்லி என்னைக் கேட்டார்கள்".

"இந்த நாட்டில் உண்மையான அன்பைப் பற்றி என்ன தெரியும். ஏதையும் செக்ஸ் ஆக்கி விடுவிர்கள், அவன் தனது பிள்ளை போல் ஓடிவிளையாடுவான் அள்ளிப் பிடித்துக் கொஞ்சுவான் தகப்பன் இல்லாத குழந்தை என்று எவ்வளவு தயவாக இருந்தான்" தாயின் கண்களில் கண்ணீர்

"பெண்களுக்கு கொடுமை செய்பவர்களில் பெரும்பாலானோர் தெரிந்தவர்களும் சொந்தக்கார்களும்தான் நாங்கள் பெண்கள் எங்களுக்கு பருவம் தெரியாத வயதில் எந்த தாத்தா எந்த அந்தரங்கத்தில் கொஞ்சினான் என்று யாருக்குத் தெரியும்? எந்த மாமா உன் மார்பகத்திலும் என் மர்மபாகத்திலும் சீனியே சர்க்கரையே என்று நாக்கையும் மூக்கையும் நுழைக்கவில்லை என்று நம்புவாயா" காயத்திரி தன் உத்தியோகத்திற்கு அப்பால் பட்டுப் பேசினாள்.

"சட்அப் இந்த நாட்டுக்கு வந்த நாளிலிருந்து என் மகளுக்கப் பைத்தியம் உங்கள நாட்டில் பிறந்த நிமிடத்தலிருந்து சாகும் வரை செக்ஸ் பற்றித்தான் பேசுவீர்கள்"

தாய் குலங்கிகுலுங்கி அழுதாள்

"இவளின் நடத்தை வரவரச் சரியல்லை என்றுதான் பிரைவேற் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வெளிக்கிட்டீர்களா?"

காயத்தரி ஆறுதலாகக் கேட்டாள். இப்படி எத்தனை கொடுமைகளை எத்தனை தாய்மார்கள் தாங்கிக கொள்கிறார்கள். தனக்கு எல்லாம் தெரிந்தும் தெரியாததது போல் அந்த தாய் நாடகமாடுவது காயத்திரிக்கு மனதில் பட்டது.

உண்மையைத் தாங்கிக கொள்ளாத மனசும் தான் எப்படியும் தன் மகளை பாதுகாப்பாக இருக்க பிரைவேட் பள்ளிக் கூடம் தேடுகிறாளா?

காயத்திரி தான் போக வேண்டிய இடம் வந்ததும் சாந்தியின் நினைவை அகற்றுகிறாள்.

இந்த தாய் ஒத்துழைக்காவிட்டால் சாந்தியின் மாமனாரில் ஒரு நடவடிக்கையும் எடுக்க முடியாது சாந்தி ஏற்கனவே எத்தனையோ பயங்கர அநுபவங்களால் மிகமிக நொந்து போய் இருக்கிறாள். தாய்க்குப் பயந்து பாடசாலையில் சொன்ன உண்மைகளை இன்னொரு தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லப் பயப்பிடலாம். உண்மைகளைச் சொல்லி என் வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்ற ரகத்தில் சாந்தியும் ஒருத்தியா? மிஸ்டர் வலன்ஸ் சாந்தியின் தாயின் முடிவிற்கு எதிராக எதையும் சொல்லப் போவதில்லை. அது அவர்களின் கலாச்சாரம் என்று தட்டிக் கழிக்கலாம்.

எப்படி சாந்திக்கு உதவி செய்வது?பதின்மூன்று வயதில் பெருமூச்சு விடும் பெண்ணுக்க அவள் பாதுகாப்பு கொடுக்கமுடியுமா? அவளுக்குத் தெரியாது

கலாச்சாரம் குடும்ப அமைப்பு சமயக் கோட்பாடுகள் என்பன எவ்வளவு தூரம் பாதுகாப்பைத் தருகிறது?

கொன்பிரன்ஸ் நான் காயத்தரிக்கு அன்றிரவெல்லாம் நித்திரை வரவில்லை. குறிப்பிட்ட எல்லா உத்தியோகத்தர்களும் வந்திருந்தார்கள் சாந்தியின் தாய் வராததால் கொன்பிரன்ஸ் ஒத்தி வைக்கப்பட்டது.

இது பற்றி சாந்தியின் தாய்க்கும் போன் பண்ணினால் கொன்பிரன்ஸ்சுக்கு இன்னொரு திகதி எப்போது போடலாம் என்று கேட்டாள் காயத்திரி

எங்களை நிம்மதியாக இருக்க விடுங்கள் எங்கள் மகளுக்கு சுகமில்லை.என்தம்பிக்கு கலியாணம் நடக்கப் போகுது.நான் உங்கள் உதவிக்கு ஒன்றும் வரவில்லை.தாய் விசும்பினாள்

அவள் தம்பிக்கு கலியாணம் நடக்கப் போகிறாதாம் அதன் பின் சாந்திக்கு நிம்மதி கிடைக்குமா?

இந்த நாட்டிலிருந்தால் என் மகளின் எதிர்காலம் பாழாகி விடும் என் தம்பி எனக்குச் சென்னையில் ஒரு சின்னவீடு வாங்கித் தருகிறேன் என்கிறான் எனக்கு இந்த குளிர் ஒத்துவராது மகளுக்கு இந்த சமுதாயம் ஒத்து வராது

சென்னையில் ஒரு சின்ன வீடு

அடுத்த கொன்பிரன்ஸ் திகதி வர முதல் சாந்தியும் தாயும் லண்டனை விட்டு ஓடிப் போய் விட்டிருக்கலாம். தனது சுய நலத்திற்கு குடும்ப கௌரவத்திற்குச் சாந்தியன் தாய் தன் மகளின் எதிர்காலத்தை பணயம் வைக்கப் போகிறாளா?

சின்வீடு யாருக்கு ?

ஒரு
எழுத்தின் பலம்
ஆத்மாவின் கதறலை காவிக் கொண்டு வருவது
ஆயிரம் நாளங்களுக்குள் வெடித்துச் சிதறும்
மனித உணர்வுகளை நியாயமாய்
சமூகத்தின் முன் சமர்ப்பித்து
பதிலை எதிர்பார்க்காது எதிரொலித்து நிற்பது
எழுத எழுத சகதிகள் வழிந்து
செதில்கள் கழன்று அடையாளம்
ஒரு பெரும் மையமாய் உருப்பெரும்
நடப்பதாய் நினைத்துப் பறந்த போதும்
பறப்பதாய் நினைத்து அலைந்த போதும்
ஒரு வலுவானவளாய் நிலைப்படுத்தி
போதையைப் போக்கி இதுதான் நீ என
என்னையே எனக்கே அறிமுகப்படுத்தும்
உணர்ச்சிகளை வலிகளை கோபங்களை தாபங்களை
தெருநாய்களாய்க் காவிக்கொண்டு அலைந்த போதும்
எங்காவது தாள்களில் அச்சாகி
குருதியாய் படிந்து தடயம் பதித்து
இறுதிவரை எவருடன் எல்லாம் பேசித் தீர்க்கும்
ஒரு துரோகியின் மனத்தில் மிஞ்சிக்கிடக்கும்
மனிதநேயத்துடன் கைகோர்த்து முத்தமிடும்
மனச்சிறையின் சுவர்க் கறைகளைச் சுரண்டி
உடைத்துப் போட வெறிகொள்ளும்
சின்ன ஓட்டைக்குள் தெரியும் அழகான உலகத்தை
பார்த்து மயங்கிக் கிடந்து கனவு காணும ம்
கைதிகளுக்குள் ஒரு கைதியாய் தொலையும் போதும்
விளிம்பில் நின்று சரியும் போதும்
மறுபடியும் எழுப்பிப் பேசக் கற்றக்கொடுக்கும்
மொழி எனும் விரல்களால் வெட்கமின்றி
ஆண்களையும் பெண்களையும் தீண்டச் செய்யும்

கண்களுக்குள் நிரம்பிக் கிடக்கும் விழிநிரை
கறுப்பு கண்ணாடியணிந்து மறைத்துக்
கொண்டாலும்
ஆத்மாவுக்குள் வழியும் வலிகளை நிர்வாணமாய்
வெளிப்படுத்திப் பலமாய் கர்ஜிக்கும்
சின்ன சின்ன கனவு முட்டைகளை
காவிக்கொண்டு நகரும் போதும்
வெண்ணிர் ஊற்றப்பட்ட இதயத்தை
தரதரவென இழுத்துக் கொண்டு அலைந்த போதும்
ஒரு ஆறுதலாய் வாழ்வின் அர்த்தத்தை
கற்பித்து ஒரு நல்ல சகியாய் வழி நடாத்தி
செல்லும்
இன்றைய வாழ்க்கை ஒரு நிழலாகவும்
நாளை வெறும் கேள்வியாகவும் மாறும் போதும்
சளைக்காமல் இறுதிவரை போராடச் சொல்லி
கட்டளை செய்யும்
முழுமையடையாத மனிதர்களை நேசித்து
காதல் காமம் நட்பு பாசம் என்றெல்லாம்
கலவையாய் பிதற்றித் திரிந்த போதும்
அட சீ
மனித வாழ்வே வெறும் அனுபவம் தானடி
என்று யதார்த்தத்தை புலப்படுத்தி
அதே அனுபவங்களை பலமாக்கி
என்னை பொய்மையில் இருந்து
விடுதலை செய்யும்
இது ஒரு புத்தி ஜீவினுடைய எழுத்தல்ல
அதை விட மாறுபட்டது
மனிதத்திற்குள் தன்னை அடையாளம் கண்டு
பைத்தியமாய் அலைந்து திரியும்
ஒரு மனநோயாளினுடையது

பாமதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மானிடராய் வாழ...

-உமா-

சமூகத்தின் சாபக்கேடாகக் கருதப்படும் பால்வினைத்தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் வெற்றிபெற ஆரம்பித்துஇருக்கின்றன.

உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும், சிவப்பு வெளிச்சப்பகுதிகளிலும் இருளின் பிடியில் எந்தவிதமான சமூகப்பாதுகாப்புமின்றி வெறும் பாலியற்பண்டங்களாக, தொழிலாளரென்ற அங்கீகாரம் இன்றி சுரண்டப்பட்ட பால்வினைத் தொழிலாளர்கள் தமது வாழ்வை நிர்ணயிக்க தமது எதிர்காலத்திற்கு உத்தரவாதம் பெற போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்திவருகின்றனர்.

உலகெங்கும் மிகவும் பழமைவாய்ந்த தொழில்வடிவமாகவவே பாலியற்தொழில் கருதப்படுகின்றது. தொன்று தொட்டு மன்னர்களினதும், பிரபுக்களினதும், அனைத்து ஆண்களினதும் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும், தம் மனைவியுடன் மட்டும் திருப்தியடையாத ஆண்கள் பல பெண்களுடன் பாலியல் உறவை வைத்துக் கொள்ள வாய்ப்பளித்தே பால்வினைத்தொழில் உருப்பெற்றது.

ஆணாதிக்க சமுதாயத்தை நிலை நிறுத்துவதற்கான முக்கிய கூறாகவே பெண்ணொடுக்குமுறை இருப்பதுபோலவே இச்சமுதாயத்தில் பால்வினைத் தொழிலாளர்களின் பங்கும் ஆணாதிக்கத்தின் ஸ்திரத்தன்னைமயுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

பெண்களை ஒருதாரமுறை, குடும்பம் என்ற வரையறைக்குள் அடக்கி ஆண்களுக்கு சேவை செய்பவர்களாக மாற்றி, அதேசமயம் ஆண்களுக்கு தங்கள் அனைத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், தமது இஷ்டத்திற்கேற்ப பல பெண்களுடன் பாலியல் உறவை மேற்கொள்ள இப்பெண்களின் இருப்பு அவசியமாகின்றது. இதனால் இவர்கள் சுயமாக இயங்கக்கூடிய தகமைக் கொண்டவர்களாகவோ, சமுகத்தின் அங்கிகாரம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றவர்களாகவோ, சட்டரீதியான உரிமைகளுடையவர்களாகவோ இருத்தல் இம்முதலாளித்துவ அமைப்புமுறைக்குப் பாதகமான விடயங்களே. தொழிலாளர்கள் என்ற அந்தஸ்து எதுவுமின்றி ஒரு விடுதிக்குள், தாதாக்களினதும், மாபியாக்குழுக்களினதும் சிக்கித் தினமும் சுரண்டலுக்கு முகம் கொடுக்கும் இப்பெண்களின் துயரம்பற்றியோ,மேம்பாடு பற்றியோ அரசாங்கங்களும் கவலைப்படுவது இல்லை.

சமூக ஒழுக்கம், அறம் என்பவற்றிற்கு முரணானவர்களென இப்பால்வினைத் தொழிலாளர்களை சமூகத்தின் விளிம்பிக்குத்தள்ளி , அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவிதமான பாதுகாப்பிற்குமான அனைத்து வழிகளையும் அடைத்து, எத்தருணத்திலும் வன்முறையால் எத்தடையுமின்றித் தாக்கப் படக் கூடிய நிலையிலேயே அனைத்துநாடுகளிலும் சட்டங்கள் இயற்றப்பட்டிக்கின்றன.

பல காலமாக உலகின் பலபாகங்களைச் சேர்ந்த பால்வினைத்தொழிலாளர்களால் சுயநிர்ணயத்தைக்கோரியும் தமது தொழிலை சட்டமயமாக்கக்கோரியும், சமூகபாதுகாப்பு வழங்கக்கோரியும் போராட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. தமது நாடுகளில் ஊர்வலங்களை நிகழ்த்துவதுடன் தமது உரிமைகள் பற்றி விவாதிப்பதுடன், ஏனய நாடுகளிலிருந்து பெண்பால்வினைத் தொழிலாளர்களையும் அழைத்து, கருத்தரங்குகளை கூட்டாக நிகழ்த்தியுமுள்ளனர்.



இத்தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாகக் 2001 இலையுதிர்காலத்திலிருந்து ஜேர்மனியில் பால்வினைத் தொழில் சட்டமயமாக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் பல விவாதங்களினூடாகவும், பல எதிர்ப்புகளின் மத்தியிலும், விவாதங்கள் பலமுறை ஒத்திவைக்கப்பட்டாலும் ஜேர்மன் சோசலிஸக்கட்சி, பசுமைக்கட்சி ஆகியவற்றின் கூட்டரசாங்கம் இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. எதிர்கட்சிகளான ஜேர்மன் கிறிஸ்தவக்கட்சி கிறிஸ்துவச் சோசலிஸக்கட்சி ஜேர்மன், சுதந்திர ஜனநாயகக்கட்சி ஆகியனவும், தேவாலயங்களும் தமது பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். சோசலிச ஜனநாயகக்கட்சியினர் தமது ஆதரவைத் தெரிவித்ததுடன் பாராளுமன்றத்தில் இத்தொழிலாளர்களுக்காக விவாதிக்கவும் செய்தனர்.

பால்வினைத் தொழிலாளியாகவிருக்கும் ஸ்டேபானி கிலே என்பவர் கடந்த 20 ஆண்டுகளாக தமது தொழிலைச் சட்டமயமாக்கக் கோரி போராடியுள்ளார். இவர் நூறன்பேர்க்கில் அமைந்திருக்கும் அரசியல் தஞ்சம்கோரியவர்களை ஏற்றுக்கொள்ளும் சமஷ்டி அலுவலகத்தின் (Bundesamt) அதிகாரியாக பணிபுரிந்தவராவார்.

அவரது முனைப்பால் ஏற்படுத்தப்பட்ட போராட்டங்களினாலும், ஆதரவுத்திரட்டல்கள் மூலமும் தான் பாராளுமன்றத்தில் இம்முடிவுகள எடுப்பதற்கு உந்துதலாகவிருந்தது.

சோசலிசக்கட்சியினதும் பசுமைக்கட்சியினதும் கூட்டரசாங்கத்தின் இத்தீர்மானத்தை வலியுறுத்தி பேசிய பசுமைக்கட்சியின் பெண்கள் விவகார பேச்சாளர் இம்கார்ட் ஷ்வே-கிறிக், கறையான் பிடித்த பெட்டகங்களில் அடைக-கப்பட்ட சட்டங்களை மாற்றியமைக்கவேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கின்றோமெனத் தெரிவித்தார். கிறிஸ்த்தவக்கட்சியின் பெண்கள் விவகாராப் பொறுப்பாளர் மரியா ஐச்கோர்ன், பால்வினைத்தொழிலென்பது அறத்திற்கும் ஜேர்மனிய சம்பிரதாயங்களுக்கும் எதிரானதேயென்றும், கூட்டரசாங்கத்தின் இத்தீர்மானமானது ஒருபிழையான வழிமுறையென்றும் தெரிவித்துள்ளார்.

அதைத்தொடர்ந்து ஸம்பேர்க் டியகோனியைச் சேர்ந்த இங்கபோர்க் முல்லர் என்பவர், தம்மைப் பொறுத்தவரையில் பாலியல் என்பது கிறிஸ்தவ தேவாலயத்தின் கருத்துக்கேற்ப சடப்பொருளின் தன்மையாகவோ அல்லது வேலையாகவோ கணிக்கப்படக்கூடாது எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஜேர்மனியின் பெண்கள்விவகார அமைச்சர் கிறிஸ்டின பேர்க்மன் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்கட்சிகளான கிறிஸ்தவக்கட்சி, கிறிஸ்தவ சோசலிஸக்கட்சி , ஜேர்மன் சமஷ்டிகட்சி போன்ற எதிர்க்கட்சிகள் பால்வினைத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு உதவிசெய்யலாமெனத் தெரிவித்திருந்தார்.

சோசலிசக்கட்சி பசுமைக்கட்சி அரசாங்கம் ஏகமனதாக நிறைவேற்றிய சட்டநகலில் பால்வினைத் தொழிலென்பது குற்றமற்றதாக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் பால்வினைத்தொழில் சம்பந்தமான அனைத்து வழக்குகளும் ஜேர்மனியின் அரசியல் யாப்பில் அமைந்திருந்த சட்டப்பிரகாரத்தின்படி, பால்வினைத்தொழிலென்பது அறத்திற்கும், சம்பிரதாயத்திற்கும் எதிரான ஒன்றாகக் கருதப்பட்டிருந்த-மையால் நிராகரிக்கப்பட்டுவந்தன. புதிய சட்டப்பிரகாரத்தின்படி பால்வினைத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கமான பணக்கொடுக்கல் வாங்கல்கள் சட்டபூர்வமானதும், குற்றம்சாட்டப்பட்டு வழக்குத் தொடரக்கூடிய நடவடிக்கையாக கருதபப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவரைகாலமும் இத்தொழிலாளர்களிடமிருந்து வரிவசூலிக்கப்பட்டாலும், அவர்களின் எதிர்காலத்திற்கான எந்தவிதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. இந்நிலை இப்புதிய சட்டத்தின் வருகையுடன் மாற்றம்பெறுகின்றது. பால்வினைத் தொழிலாளர்களுக்காக எதிர்காலத்தில் சமூகக்காப்புறுதிக்கான உத்தரவாதம் கிடைக்கின்றது.

அதாவது அவர்களுக்கான வைத்தியக்காப்பறுதி, ஓய்வூதியக்காப்புறுதி, வேலை யில்லாதவருக்கான பணம் ஆகியவற்றிற்கான நுழைவாயில் திறக்கப்படும்.

பால்வினைத் தொழிலாளர்கள் அவர்கள் பணிபுரியும் விடுதிகளுடன் வேலைக்கான ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். அவர்கள் விடுதிகளில் வேலை செய்வது காப்புறுதிக்குட்பட்டதாகவிருத்தல் வேண்டும். அதேசமயம் அவர்களது தொழில் வேலைத்திணைக்களத்தில் பதிவு செய்யப்படும்.

இச்சட்டமாக்கலின் மூலம் பால்வினைத்தொழிலாளர்களுக்கும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் அல்லது விடுதி நடத்துனர்களுக்கு இடையில் ஏற்படக்கூடிய பணம் தொடர்பான பிணக்குகள் அனைத்துக்கும் எதிராக வழக்குகள் தொடரப்படலாம். விடுதிமுகாமையாளர்கள் தண்டிக்கப்படலாம்.

பால்வினைத் தொழில் சட்டபூர்வமாக்கப்பட்டாலும் அதற்கு சில வரைமுறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. பால்வினைத் தொழிலானது மற்றைய தொழில்களைப் போல் பயிற்றுவிக்கப்படக்கூடாதென்பதுடன். இவர்கள் வேலை செய்யும் விடுதிகளிற்றான விலாசங்கள் வேலைத்திணைக்களத்தால் வழங்கப்படக் கூடாது.

இச்சட்டம் அமுலாக்கலின் பிற்பாடு சட்டவிரோதமானமுறையில் மாபியாக்குழுக்களினது ஆட்கடத்தலும் வியாபாரமும் கட்டுப்படுத்தப்படலாம் என நம்பப்படுகின்றது.

இத்தொழிலை நடாத்துவதற்காக விடுதி சொந்தக்காரர்களால் பொலிசாருக்கு பாதுகாப்பிற்கான பணமும், மாபியக்குழுக்களுக்கு பெருமளவில் கப்பமும் வழங்கப்படவேண்டியுள்ளது.

குற்றப்புலனாய்வுத்துறையின் தகவலின்படி ஜேர்மனியில் 200.000 பேர் பால்வினைத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.அதில் 25 வீதமானவர்கள்-ஜேர்மனியர்கள். மிகுதியினர் வெளிநாட்டவர்களே. இதில் கூடுதலாக கிழக்கைரோப்பாவைச் சேர்ந்தவர்களும், தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

இவ்வெளிநாட்டுப்பெண்கள் தமது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிகளால் சட்டவிரோதமானமுறையில் ஜேர்மனிக்குள் கொண்டுவரப்படுகிறாரகள். இதற்காக அவர்கள் மாபியா குழுக்களிடம் பெருந்தொகையான பணத்தை செலுத்த வேண்டியிருப்பதுடன், அவர்களது கட்டுப்பாட்டிலேயே இருக்கவும் வேண்டியவர்களாகிறார்கள். இது புலிவாலைப் பிடித்தக் கதை போலாகின்றது.

இப்பெண்கள் ஜேர்மனியிற்குரிய வதிவுப்-பத்திரமொன்றைப் பெறுவதற்காக பெருந்தொகையான பணம் செலுத்தி பத்திரத்திற்காக மட்டும் பதிவுத்திருமணம் செய்யவேண்டியவர்களாகிறார்கள். இப்பெண்கள் இப்புதிய சட்டஅமுலாக்கலைத் தமக்குப் பாதகமான விடயமாகவே கருதுகின்றனர்.

ஜேர்மனியில் பால்வினைத் தொழிலில் ஈடபட்டிருப்பவர்களின் விபரங்களைப் பார்க்குமிடத்து, அதிகமானோர் தமக்கு மேலதிக வருவாயைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு தொழிலாகக் கருதுவதால் இதில் ஈடுபடுகிறார்கள். அதிகமானோர் வேலையிழந்தோர், சமூகப்பணம் பெறுபவர்கள், மாணவிகள் மற்றும் மணம்முடித்த வீட்டிலிருப்பவர்கள் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

ஒரு பகுதியினர் இத்தொழிலை விரும்பி ஏற்றுக் கொண்டு செய்தாலும், இன்னொரு பகுதியினர் இதையொரு நரகவாழ்க்கையாகக் கருதி தமக்கு போதியளவு பணம் கிடைத்தவுடன் தாம் தமது வாழ்க்கைமுறையை மாற்றியமைப்பதாகத் தெரிவிக்கின்றனர். இதில் தமது காதலர்களால் இத்தொழிலுக்கு கொண்டவரப்பட்டவர்களும், கணவன்மாரின் கட்டாயத்தின் பேரில் இத்தொழிலில் இருக்கிறவர்களும் அடங்குவர். இத்தொழிலில் ஈடுபடும் மணம்முடித்தப் பெண்கள் தாம் இத்தொழிலிலிருப்பதால் தமது மண வாழ்க்கைக்கு எந்தப் பாதிப்பும் எற்பட இடமளிக்காதிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பாவில் மாத்திரமல்ல இந்தியா, தாய்லாந்து, ஜப்பான், பிலிப்பைன்ஸ, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தங்கள் உரிமைகளுக்காகப் பால்வினைத் தொழிலாளர்கள் குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் ஒன்றிணைந்து தமது பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பதுடன் கலந்துரையாடல்களையும் நிகழ்த்திவருகின்றனர்.

தொழில்வடிவம் ஒன்றாகவிருந்தாலும் அவர்களது கோரிக்கைகளும், அவர்கள் இத்தொழிலைத் தெரிவுசெய்வதற்கான காரணங்களும் வேறுபடுகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை இப்பெண்களின் உழைப்பு வேலையாகக் கணிக்கப்படுவதில்லை, மாறாகக் இழிவானதொன்றாகவே கணிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு சமூகத்தின் அங்கீகாரமோ, அரசாங்கத்தின் பாதுகாப்போ கிடைப்பதில்லை. தொழிலாளர்களுக்கான உரிமைகளோ, சட்டங்களோ எதுவுமே இல்லை.

1999ம் ஆண்டு மகாரஷ்ராவில் உள்ள கோல்காபூர் என்னுமிடத்தில் நடைபெற்ற பால்வினைத் தொழிலாளர்களுக்கான கருத்தரங்கில் , பத்து ஆசிய நாடுகளைச் சேர்ந்த பால்வினைத்தொழிலார்களும் அவர்களுடன் இணைந்து செயற்படும் சமூகசேவை அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் பாலியல் தொழில் சட்டப்பூர்வமாக்குவது, பெண்களுக்கு எதிரான சுரண்டல் என்பனபற்றிச் சில பால்வினைத்தொழிலாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

தாம் செய்யும் தொழிலுக்கு தொழிலாளர்சட்டங்களும், உரிமைகளும் வழங்கவேண்டுமெனவும் இத்தொழிலை சட்டப்பூர்வமாக்குவதால் தமக்கெதிரான சுரண்டலை நிறுத்தலாம் எனவும் வாதிட்டனர்.

சமூகத்தின் அத்தியவசியமான தேவையான பாலியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவையைத் தாம் பூர்த்தி செய்வதால் தம்மை சேவைத் தொழிலாளர்களாக அங்கிகரிக்கவேண்டுமெனவும் கோரினர்.

1996ம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (I.L.O) இ பால்வினைத் தொழிலைச் சட்டமயமாக்கக-கோரியதுடன், பால்வினைத்தொழிலை அதிகளவு பணம் சம்பாதிக்கக்கூடிய பல்தேசிய தொழிலெனக் கூறி, அதற்கு பொருளாதாரஅங்கீகாரம் வழங்கக் கோரியது.

முதலாளித்துவச்சமுதாயத்தில் எல்லோரும் தமது உழைப்பை விற்கின்றனர். பால்வினைத் தொழிலாளர்கள் தமது உடலை விற்கின்றனர். இச்சமுகத்தின் தவறான அறங்கள் இத்தொழலுக்கு வேலை என்ற அங்கீகாரத்தை கொடுக்கமறுக்கின்றதெனத். "தாய்வான் அனுமதியளிக்கப்பட்ட பால்வினைத்தொழிலாளர்களுக்கான அமைப்பு" தெரிவித்தது.

நமது நாட்டிலுள்ள தீராத வறுமையின் காரணமாக, அல்லது பாலியற்பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்ட பெண்கள் அல்லது தனித்துவிடப்பட்ட தாய்மார் போன்றோரே இப்பாலியல் தொழிலைத் தெரிவுசெய்கின்றனரென்ன எனத் தாய்வானைச் சேர்ந்த பெண்ணொருவர் தெரிவித்திருந்தார்.

பாலியற் தொழிலுக்குச் சமூகத்தின் அங்கீகாரம் வழங்கப்படுவதன் மூலம் அப்பெண்களுக்கெதிராக நடாத்தப்படும் பாலியல் வன்முறைகள், பாலியல்-பலாத்காரங்கள் என்பவற்றிற்கெதிராக வழக்குத் தொடுக்கும் உரிமை வழங்கப்படவேண்டுமென இத்தொழிலாளர்கள் கோருகின்றனர்.

பாலியற்தொழில் சட்டமயமாக்கப்பட்டால், இத்தொழிலைச்சுற்றி இயங்கும் விடுதிகள், விடுதிநடத்துனர்கள், ஆட்களைத் தேடிக் கொடுப்பவர்கள் என்பன வன்முறைக்காப்பாற்பட்ட விடயங்களாக மாற்றப்படும்.

பெண்பாலியற்தொழிலாளர்களின் உரிமைகள் பரிசீலிக்கப்படவேண்டும். இவர்கள் சுதந்திரமாக வாழும் உரிமை, அவர்களுக்கான பாதுகாப்பான வேலைச்சூழல், சுதந்திரமாக உலாவும் உரிமை, பெற்றோருக்கான உரிமை, தமது குழந்தைகளைத் தம்மிடத்தில் வைத்திருக்கும் உரிமை போன்றன அவர்களுக்கு வழங்கப்படல்வேண்டுமென டெல்லியில் இயங்கும் "பெண்ணிய, சட்ட ஆய்வகம்" கருத்து தெரிவித்தது.

கனடாவில் இயங்கும் உலக கூட்டு நிறுவனம் ((Global Alliance Agency) கருத்து தெரிவிக்கையில், உலகமயமாதலின் விளைவாக பாலியற்தொழில் பெண்களிடமிருந்து பறிக்கப்பட்டு ஆண்களால் பெண்களை இத்தொழிலுக்கு ஈடுபடுத்துவது என்ற செயலால அவர்களால் கூடியளவு வருமானத்தை ஈட்டமுடிகிறது.

மகாராஷ்டிராவில் பல ஆண்களின் கூட்டாக, சர்வதேச தொடர்புடைய விடுதிகள் ஆண்களால் நடாத்தப்படகின்றன.

வங்காளத்தில் இயங்கும் மகிலா சமவய குழுவானது. வங்காளத்தில் வேலை செய்யும் 40,000 பால்வினைத்தொழிலாளர்களின் அங்கிகாரத்திற்காக குரல்கொடுத்துவருகின்றனர்.

பால்வினைத்தொழிலைச் சட்டமயமாக்குவதன் மூலம். அவர்கள் தாம் பலம் பொருந்தியவர்களாவதால், தமக்கு எதிரான சுரண்டலிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என நம்புகின்றனர்.

இந்தியாவில் பெண்களை பால்வினைத் தொழிலுக்குட்படுத்துவதைத் தடுக்கும் சட்டம்( (Immoral Traffic Prevention) Act, அப்பாவிப் பெண்களைப் பால்வினைத் தொழிலாளர்களாக மாற்றியவர்களை விடுத்து, பால்வினைத் தொழிலாளர்களைத் தான் தண்டிக்கின்றது. இச்சட்டமானது ஓரளவில் புதிதாக வருபவர்களைத் கட்டுப்படுத்த உதவுகின்றது.

பால்வினைத் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்படும் டூர்பா குழுவினாலும், குழந்தைகளைக் கட்டாயப்படுத்தி இத்துறையில் ஈடுபடுத்துவதைத் தடுக்கமுடியாதுள்ளது.

வங்காளத்தில் பிரசித்திப்பெற்ற சிவப்புவெளிச்சப்பகுதியான சோனகச்சியைச் சேர்ந்த பால்வினைத் தொழிலாளர்கள், பாலியல் என்பது எமது தொழில், நாம் எமது உரிமைகளுக்காகப் போராடுகின்றோம் என்ற கோசத்தை முன்வைக்கின்றனர். இந்தியாவில் ஒவ்வொரு மூலையிலும் விடுதிகள் உள்ளன.ஆனால் பெண்பால்வினைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் உரிமைகளும், வழிமுறைகளும் தான் இல்லை யென்றும், பால்வினைத்தொழில் சம்பந்தமான எந்தவிதமான சட்டங்களும் இல்லை என **டுர்பார் மகிலா சமன்வய** குழுவின் அமினா பெணார்ஜி குறிப்பிடுகின்றார்.

இந்தியாவில் பால்வினைத்தொழிலாளர்களிற்காக சட்டரீதியாக வாதிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது பால்வினைத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் மீதான வன்முறைக்கெதிராக எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை.

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ள விடுதிகளில் பங்களாதேசத்திலிருந்தும் நேபாளிலிருந்தும் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வந்து குவிகின்றனர். வேலைவாய்ப்புத்தேடி எல்லைப்புறங்களுக்கு வரும் ஏழைப் பெண்கள் ஏமாற்றப்பட்டு விடுதிகளுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். இங்கு வந்து சேர்ந்தபின் அவர்களால் தப்பிக்கமுடியாது. அதிகமான பெற்றோர்களுக்கு எழுதவாசிக்கத் தெரியாது. தங்கள் பிள்ளைகளை மனம்முடித்துக்கொடுக்கக்கூடிய வசதியும் அவர்களிடம் இல்லை.

நேபாலில் உள்ள ஒரு வறிய குடும்பத்திற்கு 100 டொலர்கள் அனுப்புவதென வாக்குமூலம் அளித்து பிள்ளைகள அழைத்துவந்து, பின் அவர்களை 300 அல்லது 600 டொலர்களுக்கு விற்றுவிடுவார்கள். விடுதியை நடத்துபவரான மடம் என அழைக்கப்படுபவரால், தான் அவர்களுக்கு செலவளித்தத் தொகையை பெற மட்டும் அவர்களைத் தனக்காகவே உழைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

சோனகச்சி டுர்பார் மகிலா சமன்வயவில் பணி புரியும் வைத்தியர். ஜனா இப்பால்வினைத் தொழிலாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்குதல் மூலம் கட்டாயமாக இத்தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கின்றதெனவும், சட்டரீதியான பாதுகாப்பு வழங்குதலென்பது வேலைசெய்வதற்கான சாதகமானதும், வசதியான சூழலை ஏற்படுத்த கூடியதாகவிருக்குமென்றும்,. போலிசாருக்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாபியாக்குழுக்களுக்கும் கப்பம் மறுக்க ஏதுவாகயிருக்குமெனவும் கருதுகிறரார்.

சோனகட்சியியில் இயங்கும் பால்வி-னைத் தொழிலாளர்களின் அமைப்பான "மகிலா சமன்வய குழுவினால்" தயாரிக்கப்பட்ட அறிக்கையில் பின் வரும் விடயங்கள் அடங்கியுள்ளன.




பால்வினைத் தொழிலை சட்டமயமாக்-குதலை நிராகரிக்கின்றது. தங்களுக்குத் தமது தொழிலை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் தேவையில்லை. தமக்கு தேவையானது தம்மிடமிருந்து பெறப்படும் கப்பத்தொகையை இல்லாதொழிப்பதே.

பால்வினைத் தொழிலாளர்கள் சுயமாக இயங்கக்கூடிய ஒரு உயர்குழுவைக் கொண்டதாகவும், அக்குழு பால்வினைத்தொழிலாளர்களை நிர்வாகப்படுத்தி, அவர்களுக்கான சட்டங்கள், ஒழுங்குகள் முதலியவற்றறை இயற்றி இத்தொழிலை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். இத்தொழிலுக்குப் புதிதாக வரும் பெண்களை ஒழுங்கமைத்து, அவர்களின் அபிவிருத்திக்காக உழைக்கும்.

பால்வினைத் தொழில் ஒரு வியாபாரம் என்றமுறையில் நடைபெறுவதால், அதற்குச் சில சட்டஒழுங்குகள் இருத்தல் வேண்டும்.

பாலியல் சமூகத்தின் கட்டாயத் தேவை. ஆதலால் இத்தொழில் புணருத்தாரனம் செய்யப்படவேண்டியதுடன், ஒழுங்கமைப்பு, பாதுகாப்பு, காப்பறுதி, முன்னேற்றம் ஆகிய விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படவேண்டும்.

பால்வினைத் தொழிலாளர்கள் குடும்பத்திற்கு எதிரானவர்களல்ல. குடும்பத்தில் நிலவும் ஆண்- பெண் சமமின்மையையே எதிர்க்கின்றனர்.

எல்லாவிதமான பெண்களின் பாலியல் வெளிப்பாடும் ஆண்களால் கட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது.

பால்வினைத்தொழிலாளியும், ரிக்சோ இழுப்பவன் போலவோ அல்லது கூலித்தொழில் செய்பவன் போலவோ ஒரு சாதாரண தொழிலாளியே.

தாம் கட்டாயத்தின் பேரிலேயே இத்தொழிலுக்குத் தள்ளப்படுகின்றோம். பால்வினைத் தொழிலில் ஈடுபடுவதொன்றும் சுலபமானதோ, இன்பகரமானதோ அல்ல. எதிர்பாராத கருத்தரிப்பு, வலி நிறைந்த கருக்கலைப்பு, பயங்கரமான நோய்கள், சமூகத்தின் அவதூறு, பொலிசின் கெடுபிடி, பிராந்தியச்சண்டியர்களின் கட்டுப்பாடு, தந்தையைத் தெரியாத குழந்தைகளுக்குத் தாயாக இருப்பது போன்ற பாரரதுாரமான விடயங்களிற்கு முகங்கொடுக்க-வேண்டியுள்ளது.

இத்தொழிலாளர்கள் சுயமான பாலியலிற்காகவும், பாலியலில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான பங்கு சுயமானதெரிவு ஒடுக்குமுறையற்ற சமூகம் போன்றவற்றை வேண்டி நிற்கின்றனர்.

பால், வறுமை, பாலியல் போன்ற போராட்டத்திற்கு அப்பாற் தூக்யெறியப்பட்ட விடயங்கள் பற்றி விவாதிப்பதும், மீள்வரையறை செய்வதையும் தமது நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட ஒரு குழவினருக்குக் குறைந்தபட்ச நன்மைகள் பெறுவதற்கும், பொருளாதரீதியானதும், குறியீட்டுரீதியாகவும் நிறுவப்பட்ட வரைமுறைகள், ஆளுமைகளை வரலாற்று ரீதியான முறைமைகளும் வரையறைசெய்யப்படவேண்டும்.

வேலை செய்யுமிடத்தை தாமே தெரிவு செய்யுமிடத்தைத் தாமே தெரிவு செய்யவேண்டுமென்பதுடன், தமக்கெதிரான ஒடுக்குமுறை எதிர்க்கப்படுவதுடன், தடுக்கப்படவேண்டும்.

வேலை வசதிகள், தமது வாழ்வு சம்பந்தப்பட்ட விடயங்கள், வேலையின் சடத்துவத்தன்மை, தராதரம் போன்றன மேம்படுத்தப்படவேண்டும்.

பெண் பாலியற் தொழிலாளிகள் அனைவரும் இணைந்து, பாலியலற்தொழிலைத் தமது கைககளில் எடுத்தியற்க வேவண்டும்.

மகிலா சமன்வய குழு, ஆண்பாலியற் தொழிலாளர்களையும் தம்முடன் இணைத்துள்ளனர்.

பால்வினைத் தொழிலாளர்களின் அதிகமானோர் இதை விரும்பி ஏற்றுக்கொண்டாலும், இவர்கள் பெறும் இலாபங்களைக் காட்டிலும் அதிகளவு நன்மைகளை முதலாளித்துவ அமைப்புமுறை பெறுகின்றது. இச்சமூக அமைப்பமுறையை தக்கவைத்துக் கொள்ளவும், முதலாளித்தவ அமைப்புமுறையின் விரும்பியேற்றுக்-கொள்ளப்படும் ஆணின், தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவனை இன்னபத்தில் ஆழ்த்தவும், ஆண்களின் உழைப்புச்சக்தியை தங்குதடையின்றி பெறுவதற்கு இப்பெண்களின் தொழில்சக்தி சுரண்டப்படுகின்றது.

இப்பெண்கள அதிகார வர்க்கங்களால் சுரண்டப்படுதலும், சமூகத்தால் ஒடுக்கப்படுவதற்கும் சமமானதே இவர்களின் உழைப்பு , உழைப்பாக மதிக்கப்படாததற்கு சமமானதே.

மார்க்ஸினால் வரையறுக்கப்பட்ட தொழில்சக்தி என்ற கோட்பாட்டுக்குள் இவர்களின் உழைப்பு வராதமையால் மார்கஸியவாதிகள் இவர்களைத் தொழிலாளர்கள் எனபதை நிராகரிக்கின்றனர். இவர்களின் உழைப்புச்சக்தியால் உற்பத்தி நடைபெறுவதில்லையென்றும், மறுவுற்பத்தி நடைபெறுவதில்லையென்றும் வாதிடுகின்றனர். வீட்டில் வேலை செய்யும் பெண்களின் உழைப்பு எவ்வாறு சமூகவுற்பத்தியில் மறைமுகமாக பங்குவகிக்கின்றதோ, இதுபோல் நிச்சயமாக இப்பெண்களின் உழைப்பிற்கும் பங்கு உண்டு.

நாம் ஒரு கோட்பாட்டிற்குள் நின்று மறைமுகமாக இச்சுரண்டல் தொடருவதற்கான காரணிகளை இனம் காணல்வேண்டும். முக்கிய காரணியான பொருளாரப் பற்றாக்குறை, பெண்ணொடுக்குமுறை என்பவற்றை கருத்திற்கொண்டு செயற்படல்வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல்வினைத் தொழில்
# பெண்ணிய நோக்கு

-றஞ்சி-

பாலியல்வினைத் தொழில் சம்பந்தமாக பெண்ணியலாளர்களிடம் ஒருபோதும் ஒருமித்த கருத்து இருந்ததில்லை. இவ்வாறு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதும் பொருளாதார ரீதியிலும் ஏன் பாலியல் விடுதலை என்ற ரீதியிலும்கூட உடன்படுகின்றனர். போர்ணோகிராபி மற்றும் பாலியல்வினைத் தொழில் என்பவற்றை எதிர்ப்பவர்களிடமும்கூட இதில் உடன்பாடு இருக்கவே செய்கிறது. 19ம் நூற்றாண்டின் பெண்ணியலாளர்கள் பாலியல் வினைத் தொழிலை முற்றாக எதிர்ப்பவர்களாகவும் இதில் ஈடுபடும் பெண்கள் ஆண்களின் சுரண்டலுக்கு பலியாகிப்போபவர்களாக வரையறுத்தும் இருந்தார்கள்.

பெண்கள் அறநெறிப் பண்புகளின் பொக்கிசம் எனவும் பால்வினைத் தொழிலில் ஈடுபடுவதன்மூலம் இதை கறைப்படுத்தகிறார்கள் எனவும் விவாதங்கள் முன்வைக்கப்பட்டன. இத் தொழிலை பாலியல் விற்பனை என வரையறுத்து, மது விற்பனைக்கு இதை ஒப்பிட்டு இரண்டுமே சமூக சீர்கேடுகளை தோற்றுவிக்கின்றன என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

ஆனால் பெண்களுக்கான வாக்குரிமைக்காக போராடிய பெண்கள் அமைப்புகளும் மற்றும் மிதவாதப் போக்குடைய அமைப்புகளும் இந்த நூற்றாண்டின் திருப்பத்தில் இக் கருத்தை மாற்றியமைத்தன.

1960 மற்றும் 70 களில் பெண்விடுதலையும் பாலியல் விடுதலையும் சமச்சீரான பாதையில் செல்லவேண்டியவை என்ற கருத்து வலுப்பெற்றது. பெண்ணியலாளர்கள் ஒழுக்க விதிகளில் நின்று பால்வினைத் தொழிலை எதிர்ப்பதில் தயக்கம் காட்டத் தொடங்கினர். மரபுரீதிலான ஒழுக்க விதிகள் பெண்ணை பாலியல் ரீதியல் ஒடுக்கியதோடு, பெண்ணின் தேவைகளை ஆணின் தேவைகளுக்கு அடுத்ததான இரண்டாம் நிலைக்குள் தள்ளியதை கிரீர் (Greer) என்ற



பெண்ணியலாளர் குறிப்பிட்டுக் காட்டினார். பாலியல் ரீதியில் பெண்களின் தாழ்நிலை அவர்களின் பொருளாதார மற்றும் அரசியல் தாழ்நிலைகளோடு பிணைந்திருந்தன என்றும் வாதங்களை முன்வைத்தார் கிரீர்.

இன்று, பெண்ணியலாளர்களில் சிலர் பால்வினைத் தொழிலை பாலியல் அடிமைத்தனத்திற்குள சிக்குண்டு கொள்ளும் ஒரு வடிவம் என்ற கருத்தினை முன்வைக்கும் அதே நேரத்தில் சிலர் பாலியல் சுய நிர்ணயத்தினை நோக்கிய பாதையில் இத் தொழிலை காண்கின்றனர். இதனிடையே யார் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன பால்வினைத் தொழில் ஒரு தொழில் என்ற ரீதியில் அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகத்தில் இருந்தே தீரும் என்ற கருத்து பரவலாகவே காணப்படுகிறது.

சட்டத்தரணியான Catharine Mackinnon மற்றும் போர்ணோகிராபி எதிர்ப்பு கோட்பாட்டாளரான Andrea Dworkin போன்ற தீவிரப் பெண்ணியலாளர்கள் பாலியல் தொழிலை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை. இத் தொழிலில் பெண்கள் சுரண்டப்படுபவர்களாகவும் பெண்களை பாலியல் பண்டமாக்கும் நிலையை உறுதிப்படுத்துவதாக அமைகிறது எனவும் கூறுகின்றனர். மேலும் கடந்த காலங்களில் பெண்கள் போராடிப் பெற்றுக் கொண்ட பலவற்றை இச் செயற்பாடு இல்லாமல் செய்துவிடுகின்றன என்றும் வாதிடுகின்றனர்.

அதேநேரம் வேறு சில தீவிரப் பெண்ணியலாளர்கள் பாலியல் தொழிலை ஏற்றுக் கொள்வது மட்டமன்றி இத் தொழில் பெண் விடுதலையில் ஒரு துணிகரமான அம்சம் என்றும் தமது வாழ்வை தம் கையில் எடுக்கும் ஒரு வழியாகவும் சிலருக்கு அமைகிறது என்றும் வாதிடுகின்றனர்.

அமெரிக்க சமூகவியல் பேராசிரியையும் பெண்நிலை எழுத்தாளருமான Wendy Chapkis சில கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். கலிபோர்னியா, நெதர்லாந்து, பிரிட்டன் மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளில் ஒன்பது ஆண்டுகளாக அவர் இதில் ஈடுபட்டார். இதன்போது 50க்கு மேற்பட்ட பாலியல்வினைத் தொழிலாளர்களிடம் நேர்காணலையும் மேற்கொண்டிருந்தார். இந்த நேர்காணல்கள் பெரும்பாலும் தீவிரப் பெண்ணியவாதிகள் வெறுப்புடன் நிராகரித்த அசிங்கங்களையும், அவர்கள் உணர்த்திய அதிகாரத்துவங்களையும் வெளிப்படுத்தின என்கிறார் அவர். அவரின் கருத்துப்படி பால்வினைத் தொழில் பெண்விடுதலையுடன் சம்பந்தப்பட்டதல்ல. உண்மையில் இது பாலியல் வன்முறையின் தவிர்க்கமுடியாத ஒரு வடிவம் என்று பார்ப்பதைவிடவும் ஒரு தொழில் என்ற ரீதியல் புரிந்துகொள்ளப்படுவதே பொருத்தமானது என்கிறார் அவர். மேலும் இத் தொழிலாளர்கள் விரும்புவதெல்லாம் உகந்த வேலை நிலைமைகளையே என்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் பால்வினைத் தொழில் குற்றத் தன்மை நீக்கப்பட்டதாக மாற்றப்பட வேண்டும் என்கிறார் Chapkis. இத் தொழில் குற்றத்தன்மை வாய்ந்ததாக கையாளப்படும்போது சட்டத்திலிருந்து இவர்களை அந்நியப்படுத்துகிறது. காலம் காலமாக சரியான முறையில் கையாளப்படாத அல்லது அங்கீககரிக்கப்படாத தொழிலில் ஈடுபடுபவர்கள் எந்தவித அதிகாரமுமற்றவர்களாக ஆக்கப்படுவதோடு அவர்கள் தமது பாதுகாப்புக்காகவும் உதவிக்காகவும் பொலிசை நாடவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதன்மூலம் "பொலிசை எமது வாழ்வியலில் தலையீடு செய்யும் நபராக தவிர்க்கமுடியாமல் உள்வாங்க நேரிடுகிறது. இது எமக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடுகிறது" என்கிறார்கள் பால்வினைத் தொழிலாளிகள்.

மாறாக, நெதர்லாந்தில் பால்வினைத் தொழில் குற்றத்தன்மை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. அங்கு பொலிசும் பால்வினைத் தொழிலாளிகளும் ஒரே பக்கத்தில் நிற்பதாகவும், பொலிஸ் அக்கடமிகளில் அதிகாரிகளுக்கு தமது வேலை பற்றிய அறிவை ஊட்டுவதற்காக பால்வினைத் தொழிலாளர் தரப்பிலிருந்து முகவர்கள் அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இந்தவகை தொடர்புகள் பால்வினைத் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு தகுந்த வேலைநிலைமைகளை வழங்குவதாகவும் கூறுகிறார் Chapkis.

பால்வினைத் தொழிலை அன்புநிறைந்த ஒரு தொழிலாக அப்பாவித்தனமாக பார்க்க வேண்டியதில்லைல. இத் தொழிலாளிகளின் வாழ்வியலை பொதுமைப்படுத்துவதென்பது சாத்தியமானதுமில்லை. உதிரியான வீதிப் பாலியல் தொழிலாளர்கள் தாம் வலுபடைத்தவர்களாகவும் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இயங்குபவர்களாகவும் தம்மை உணர்வதை அவர்களுடனான நேர்காணல்களிலிருந்து காண முடிகிறது என்கிறார் Chapkis. இவர்கள் அதிக பணம் சம்பாதிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் இதை ஒரு மேலதிக தொழிலாக கைக்கொள்ளும் மேட்டுக்குடிப் பெண்களையும் உயடட பசைடள ஆக ஊாயிமளை சந்திக்க நேர்ந்ததாகக் கூறுகிறார். பல தொழில்களில் பெண்கள் குறைந்த சம்பளத்துடன் வேலைக்கு அமர்த்தப்படுவதும் இதற்குக் காரணமாக அமைந்தவிடுகிறது.

பால்வினைத் தொழிலோடு வன்முறைகள் போதைப் பொருள் பாவனைகள் என்பன பின்னிப் பிணைவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வகைப் பிரச்சிகைளை தீர்ப்பதற்கு பால்வினைத் தொழிலை குற்றத்தன்மைவாய்ந்ததாக கையாள்வது எந்தளவு பிரயோசனம் தரும் என்ற கேள்வி இங்கு எழுகிறது. உண்மையில் இந்த அணுகுமுறை பால்வினைத் தொழிலை இன்னும் இரகசியத்தன்மைக்குள் நகர்த்திவிடுகிறது. இது மேலும் பிரச்சினைகளை வளர்த்துவிடுகிறது. அத்தோடு இத் தொழிலில் ஈடுபடும் பெண்களின் உதவிக்கான வழிகளும் அடைபட்டுவிடுகிறது. சமூகத்திலிருந்து இவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். சமூகம் குற்ற உணர்வை இவர்களுக்கு பரிசாக அளிக்கிறது.

Tracy Quan. PONY (Prostitutes Organaization of New York) இன் இயக்குநர் பதவியிலிருப்பவர். சுமார் 300 பாலியல் தொழிலாளர்களின் ஆதரவு அமைப்பாக 1975 இலிருந்து செயற்பட்டுவரும் இவ் அமைப்பு பால்வினைத் தொழிலை குற்றத்தன்மையற்றதாக்குவதில் குரல்கொடுத்து வருகிறது. இவர் கூறுகிறார்: மக்கள் இத் தொழிலை விரும்புகிறார்களோ இல்லையோ சமூகத்தில் பால்வினைத் தொழில் கலந்துபோய் உள்ளது என்பது உண்மை என்கிறார். மேலும் பால்வினைத் தொழில் ஒரு தொழில்துறைபோல் (industry) கையாளப்பட வேண்டும் என்கிறார்.

பால்வினைத் தொழிலை சட்டரீதியாக்குவது அல்லது தொழில் துறைபோல் கையாள்வது என்ற வாதமும், குற்றத்தன்மை நீக்கம் செய்வது என்ற வாதமும் பெண்ணியலாளர்கள் மத்தியில் முன்வைக்கப்படுகின்றன.

பால்வினைத் தொழில் குற்றத்தன்மை நீக்கம் செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, அது தொழில்துறைபோல் கையாளப்படுவதை பல பாலியல் தொழிலாளர்கள் நிராகரிக்கின்றனர். இப்படி தொழில்துறையாக கையாளப்படுவதன்மூலம் இதன் பேரால் மேன்மேலும் புதிய சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் உருவாக்கப்பட்டு தாம் இன்னும் நசுக்கப்பட்டுவிடுவோம் என அஞ்சுகின்றனர். அதாவது ஏற்கனவே கஸ்டங்களை அனுபவித்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் தமக்குமேல் மேலும் சுமை ஏற்றுவதாக ஆகிவிடும் என்கின்றனர்.

28 வயது நிரம்பிய Carmen என்ற இளம்பெண் 4 வருடங்களாக பால்வினைத் தொழிலாளியாக இருந்தவர். பால்வினைத் தொழிலை சட்டரீதியானதாக்குவது பற்றிய கேள்விக்கு அவர் பதில் கூறுகிறார்: இப்போதுள்ள அமைப்புமுறைக்குள் நாம் கைதுசெய்யப்பட்டால் இரும்புக் கம்பிகளின் பின்னால் தள்ளப்படுகிறோம். பாலியல் தொழிலை சட்டரீதியாக்கியபின் நாம் முட்கம்பிகளின் பின்னால் தள்ளப்படுவோம். இந்த முறையானது நாம் எங்கு போகலாம், எப்போ போகலாம், யாருடன் கதைக்கலாம் என்பதையெல்லாம் தீர்மானித்து எமக்கு திணித்துவிடும் என்கிறார்.

சட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரிகள் தமது பலாத்கார நடவடிக்கைகளுக்கு எப்படி இந்த சட்டங்களையெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன என்று கூறுகிறார் பால்வினைத் தொழிலாளிகளுக்காக செயல்படும் சட்டத்தரணியான Norma Amodovar. உனது லைசென்சுக்காக எனது ஆண்குறியை சுவை என்பதை பதிலாக கொடுக்கப்போகிறதா பாலியல்வினைத் தொழிலை சட்டரீதியிலானதாக்குவது என்பது? என்ற பாலியல் தொழிலாளி ஒருவரின் கேள்வியுடன் எனது இக் குறிப்பை முடித்துக் கொள்கிறேன்.

(இக்கட்டுரை கட்டுரையாசிரியரால் பெண்கள்சந்திப்பில் வாசிக்கப்பட்டது)

## இடைச்செருகல்...

இருபத்தியோராம் நூற்றாண்டில் நாம் பிரசன்னமாயிருக்கிறோம். உலகம் பல துறைகளில் முன்னேறி விட்டது. ஆனால் பெண்களின் உரிமைகள் இன்னும் மறுக்கப்பட்டே வருகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி, வளர்ச்சியடையாத நாடுகளிலும் சரி இன்னும் பெண்கள் இரண்டாந்தரப் பிரஜையாகத்தான் பார்க்கப்படுகிறார்கள். நமது நாட்டின் போராட்ட சூழலை எடுத்து நோக்கினால் பல பிரச்சினைகளை நாம் காணலாம். மனிதஉரிமை அமைப்புகளும் ஊடகங்களும் இலங்கையில் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக செயற்பட முடியாத சூழ்நிலை இருப்பதாகவும் இலங்கை இராணுவத்தினரால் கேள்விக்கிடமின்றி கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவது, பாலியல் வன்முறைகள், படுகொலைகள் சிறைகளில் உள்ளவர்கள் படுகொலை செய்யப்பட்டது போன்ற காரணங்கள் உட்பட விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் படுகொலைகள், சிறார்களை போராட்டத்தில் சேர்ப்பது முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை சிதறடித்தது போன்ற பலவிடயங்களை Human Rights Watch - Report 2002 Srilanka என்ற அமைப்பு அறிக்கை விட்டுள்ளது. ஆனால் இலங்கையில் பெண்களுக்கெதிராக நடைபெறும் வன்முறைகளில் பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது வேதனைக்குரியதே. கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பெண்களுக்கெதிரான வன்முறைகள் பாலியல் வல்லுறவுக் கொடுமைகள் என்பன மூடி மறைக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவி கிருசாந்தி, கோணேஸ்வரி, காமலிற்றா ரஜனி, சாரதாம்பாள், சுமதி சுரேஷ்வரன் விஜயகலா, சிவமணி உட்பட இன்னும் வெளிவராத பல பெண்களின் வாழ்க்கையை சிதறடித்த அராஜகங்கள்உட்பட சிறையில் வாடும் பெண்கள், போரினால் பாதிக்கப்பட்ட கணவன் மாரை இழந்த பெண்களின் வாழ்க்கை உட்பட ஆயுதம் பயன்படுத்தப்படும் போர்களின் போது இடம் பெறும் பெண்கள் மீதான பலாத்காரம், பாலியல் வல்லுறவுகள் என்பன சர்வதேச ரீதியல் குற்றமாக பார்க்கப்பட்டாலும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களோ இவ் விடயத்தில் பாராபட்சமாக நடந்து கொள்கின்றன.

பாலியல் வன்முறையானது பெண்களின் மீதான ஆண்களின் அதிகாரத்தின் அராஜகத்தின் வெளிப்பாடாகும். வெவ்வேறு இடங்களில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதும், பின் தூக்கியெறியப் படக்கூடிய போகப் பொருள்களாக பெண்கள் மிதிக்கப்படுவதும் தொடர்கிறது. தமது பாலுணர்ச்சியை வக்கிரமாக தீர்த்துக் கொள்வதற்காக மட்டமன்றி, பெண்களை அடக்கி ஆளவும் ஆணின் உயர் நிலையை நிலைநாட்டவும் அவர்களிடமுள்ள போராட்டக் குணத்தை நசுக்கவுமான ஆயுதமாக பாலியல் வன்முறை பயன்படுத்தப்படுகிறது. தேசிய இனப் போராட்டங்களின்போது - ஆண்களை பெருமளவுக்கு கொண்டு செயற்படும் இராணுவ அமைப்பிலுள்ள - இராணுவத்தினரால் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போர்க்குணத்தை உளவியல் ரீதியில் அடித்து உளச்சிதைவாக்கும் ஒரு ஆயுதமாகவும் பாலியல் வன்முறை பயன்படுத்தப்படுகின்றது. மேலும் மதத்தின் மீதான அல்லது கலாச்சாரத்தின்மீதான தாக்குதலாகவும், போராட்டத்தை சிதைக்க பலாத்காரமான இனக்கலப்பை உருவாக்குவதற்கும், போராட்ட இயக்கங்களில் பெண்கள் இணைவதை -உளவியல் ரீதியில் அச்சுறுத்தி- தடுப்பதற்கும்கூட வலிமையான ஆயுதமாக பாவிக்கப்படுகிறது. திட்டமிடப்பட்ட முறையில் இவ்வன்முறையானது தனியான தாக்குதலாகவோ கூட்டுமுறையிலாக (பாலியல் வல்லுறவு) தாக்குதலாகவோ அன்றி உணர்வுகளை கேலிசெய்யும் விதத்திலான சித்திரவதை முறையாகவோ மேற்கொள்ளப்படுகின்றது. இவை ஒரு பெண்ணின் மனநிலையை கடுமையாக பாதிப்பதாகவே உள்ளது.

இவ்வாறாக பலியாகிப்போகும் ஒரு பெண்ணும் ஆணாதிக்க கண்ணோட்டத்திலிருந்தும் எப்படி தண்டனையிலிருந்து தப்பிக் கொள்கிறார்களோ, அதேபோல் தான் பாலியல் வன்முறை செய்பவர்களும் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்கின்றனர். இது ஒருவகையில் மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்படுவது போன்றதே. பெண்ணின் உயிருக்கு ஆணாதிக்க சமூகம் தரும் மதிப்பு என்பதையே இது பிரதிபலிக்கிறது. இதற்கு உதாரணமாக அண்மையில் மன்னாரில் இரு பெண்களை பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுத்திய இராணுவ வெறியர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அதனால் சந்திரிகாவின் அரசு ஆண்நிலைக் கருத்துக்களை கேள்விக்குள்ளாக்கும் என்று யாருமே எதிர்பார்க்க முடியாது தான் என்றாலும் குறைந்தபட்சம் பெண்கள் மீதான வன்முறைகள் நடைபெறாமல் இயன்றளவு கட்டுப்படுத்துவதிலும் தான் ஒரு பெண் என்ற ரீதியாலாவது தனது அதிகாரத்தைப் பயன்படுத்த ஏன் முயற்சிக்கக் கூடாது என்ற கேள்வி பெண்களிடையே எழுவது நியாயமானதே.

அதேபோல் போர்ப் படைகளில் பணிபரியும் பெண்களின் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து வருவதாகவும் பெண்கள் இராணுவத்தில் கட்டாயச் சேர்ப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்றும், மறுபக்கமாக யுத்தங்களில் பெண்களும் சிறுமியர்களும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு வருவது மேலும் அதிகரித்து வருகின்றது என்றும் இத்தகைய குற்றங்களை புரிபவர்கள் சர்வதேச சட்டத்தின் போர்க்குற்றவாளிகள் எனவும் ஐ. நா அறிக்கை கூறுகின்றது. ஆனால் இலங்கையில் இப்படியான குற்றங்களை புரிபவர்களுக்கெதிராக எந்தவகைச் சட்டங்களும் பலனளிப்பதில்லை. இவ்வாறு போர் நடைபெறும் நாடுகளில் பாதிக்கப்படுவது கூடுதலாக பெண்களே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல் சிக்கல்களா? உரிமை மறுப்புக்களா?

-பார்வதி கந்தசாமி-



பாலியல் இயல்பு பற்றித் தமிழ் மக்கள் அறியாதது எனக் கூறுவதற்கு என்ன இருக்கின்றது? பாலியல் உரிமைகளை மறுப்பவர்கள் பாலியல் இயல்பு பற்றித் தெரியாமல் இருக்க முடியாது. எமது சமுகத்திலே ஆண்-பெண் வேறுபாடு காலாகாலமாகப் புடம்போட்டு வளர்க்கப்படுவது பாலியல் அடிப்படையில் பெண்கள் மூக்கணாங்கயிறுகளால் பிணைக்கப்-பட்ட மாடுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதுபோல பல தழைகளைப் பெண்பாலாருக்கு இழைப்பதனால் பெரும் லாபம் ஈட்டும் ஆணாதிக்க சமூகம் பாலியல் இயல்புகளை இயன்றவரை தெரியாதவர்களாகவே இருந்து கொள்வர். முதற் பிள்ளையாகப் பெண் பிறந்த அன்றே ஆண் பிள்ளையாக இல்லையே எனத் துக்கம் கொள்ளுதல், அதிகமாகப் பெண் பிள்ளைகள் பெற்றால் அரசனும் ஆண்டியாகப் போகலாம் என்ற பயம் கொள்தல், பொருளாதார உற்பத்தியில் பெண்ணைப் பங்கு கொள்ளவிடாது தடுத்தல், பெண்பிள்ளைகளுக்குப் பெரும் வேலிகளைப் போடல் போன்றவை பெண்களை இன்னமும் மாட்டுத் தொழுவத்தில் கட்டும் பழக்கமாகவே கருதவேண்டியுள்ளது. பாலியல் துன்புறுத்தல் எமது சமூகத்தில் குறிப்பாக, அப்பா, அண்ணன், மாமா, சித்தப்பா, ஆசிரியர், அயல் வீட்டுக்காரன் போன்றோரால் நிகழ்த்தப்படுவதில்லை என்ற சிந்தனைப் போக்கு எமது சமூகத்தில் பரவலாகக் காணப்படும் ஒன்று. ஆனால் குழந்தைகளின் அறிக்கைத் தரவுகளின்படி, பாலியல் துன்புறுத்தல்கள் குழந்தைகளுக்கு மிக நெருங்கியவர்களாலேயே கூடுதலாக நிகழ்த்தப்பட்டுள்ளது. ஆண்-ஆண், பெண்-பெண் பாலினக் கோட்பாடு பற்றியும் பெரும்பாலாரும் மறுப்புக்கொள்கையையே கடைப்பிடிக்கின்றனர்.

தாய்வழிச்சமூகமாக இருந்த தமிழ்ச் சமூகம் பொருளாதாரப் பறிப்பு நிகழ்த்தப்பட்டு ஆணாதிக்க சமூகமாக வளர்ந்து அதனைக் கட்டிக்காக்கும் கனரகப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டு வருகின்றது. யாழ்ப்பாணத்துச் சமூக மீழுருவாக்கம் புலம்பெயர்ந்த நாடுகளில் குறிப்பாக கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் நிகழ்ந்து கொண்டிருப்பதை யாரும் அவதானிக்காது விடமுடியாது. தமிழர் பண்பாட்டைக் காப்பாற்றும் பெரும்பணி பெண்களிடத்தும், வீரம்பேசி முழு மேடைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அலங்கரிக்கும் விக்கிரகங்களாகவும் சமுதாயக் காவலர்களாகவும் இருக்கும் பணி ஆண்களிடத்தும் அதற்குத் துணைபோகும் பணிபெண்களிடத்தும் விடப்பட்டுள்ளதா?. யாழ்ப்பாணத்துச் சமூக ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் சமூக, சமய மட்டங்களில் நடைபெறுவதை இங்கிருந்து வரும் வாரப் பத்திரிகைகளே பக்கம் பக்கமாகப் படங்களிலும் அச்சுக்க-ளிலும் எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாணச் சமூகம் தவிர்ந்த ஏனைய தமிழ்ச் சமூகமும் யாழ்ப்பாணத்துச் சமூக மீழுருவாக்கத்தினால் அங்குபோலவே விழுங்கப்பட்டவையாகவே உள்ளன. வர்க்க ஏற்றத்தாழ்வுகள் இன்று இறுக்கமாவதற்கான அறிகுறிகள் அரும்பத் தொடங்கியுள்ளன.

தமிழிலக்கியப்பரப்பில் காலாகாலமாக ஆண் மகனின் மேன்மையைப் பறைசாற்றும் முயற்சிகள் செய்யப்பட்டு வந்தமைக்குச் சான்றுகள் பல. ஆண்கள்பால் புலமை தக்கவைக்கப்பட்டுக் காக்கப்பட்டு வந்தமைக்கு வள்ளுவத்தில் மலிவாக ஆதாரங்களைக் காணலாம். படிசொல் தவறாத பாவாயாகவும் தற்காத்துத் தற்கொண்டாள் ஆகவும், சொற்காத்துச் சோர்விலாள் ஆகவும், பின் தூங்கி முன் எழும் பேதையாகவும் பெண்களைக் காட்டும் வள்ளுவம் தமிழர் அறநூலாகப் போற்றப்படுகின்றது. சிலப்பதிகாரத்தின் தோற்றப்பாடும் பெறைகாக்கும் பேதைகளைத் தோற்றுவிப்பதாகவே இருந்தது. ஆண்பாலியல் சிறப்புக்களைப் பாடும் பணியில் காப்பியங்கள் எதுவுமே பின்னிற்கவில்லை. குறுந்தொகையில்

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" எனப் பொருளீட்டல் ஆண்களின் கைகளில் இருந்தமையையும் பெண்களின் தங்கியிருந்த தன்மையையும் காணலாம். கிரேக்க தத்துவஞானி அரிஸ்ரோட்டிலும் இதனையே கூறியுள்ளார். "ஆணாக இருக்கவும் மானுடப் பொருட்களைச் சிந்திக்கவும், அழிந்துபோகக் கூடியதும், அழிந்துபோவதுமான பொருட்களைப்பற்றிச் சிந்திக்கும்படி எமக்கு அறிவுரை கூறுபவர்களை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. நம்மால் முடிந்த அளவு நம்மை நாமே இறப்பற்றவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும்." இதன் தொடர்ச்சியாக உலக அரங்கில் ஆண் வாரிசுகளைப் பெற்றுத்தரும் பணியில் பெண்ணின் கருப்பை இயந்திரமாக இயக்கப்பட்டு வந்துள்ளது. இந்துசமயக் கோட்பாடுகளும் "கொள்ளி வைக்கும்" வாரிசுகளாகவும், வினைமாண் முயற்சிகள் மூலம் தடம் பதிக்கும் அதிகார முத்திரைகளாகவும் ஆண்களை வளர்த்து வந்துள்ளது. "எவனொருவன் மறுஉற்பத்தியைச் செய்கின்றானோ அவனுக்கு மரணம் இல்லை" என்பது அரபுமொழி வழக்கு. ஆதிக்கம், உற்பத்தி, அதிகார மூலம் பெண்ணிடம் இயல்பாக இருந்த உயிருற்பத்தி அதிகாரத்தை வென்றெடுத்து தட்டு அதிகாரத்தை நிறுவினர் ஆண்கள்.

இந்த வெற்றிக்குத் தொடர்ந்து மதநிறுவனங்கள் ஆக்கபூர்வமான கைகொடுத்தலைச் செய்து உதவி வந்திருக்கின்றன. இன்றுகூடக் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில் பெண் குருமாருக்குக் கொடுக்கப்பட்ட பங்கு பற்றிய விவாதம் விவாதமாகவே இருக்கின்றது. இந்து மதத்திலும் கடவுளைத் தொடும் உரிமை பெண்ணுக்கு மறுக்கப்பட்டுள்ளது. பெண் ஐயர் என்ற ஒருவரோ சமய சடங்குகள் நிகழ்த்துவதோ விவாகம் செய்துவைப்பதோ இல்லை. சமூகத்தில் புரவியிருக்கும் ஆண்-பெண் வேறுபாடு சமுதாயக் கட்டமைப்புக்களில் எல்லாம் ஊடுருவியிருக்கின்றது. பெண் இரண்டாம்தார ஜீவன் என்பதை நாட்டார் பெண் தெய்வங்களிலும் காணலாம். பெண்ணின் இரண்டாம்தார இடத்தை உறுதிப்படுத்தத் தாய்மைக்கோட்பாட்டை வலியுறுத்துகின்றனர். குழந்தை பொரிக்கும் இயந்திரம், /வீடு/ என்ற கோடு கிளிடப்பட்ட கூட்டினுள் வைத்து குழந்தை வளர்க்கும் இயந்திரம் என்ற அடிப்படையில் தாய்மை என்ற பெண்மைக் கருத்து பெண்ணுக்குள் புகுத்தப்படுகின்றது. உடலமைப்புரீதியான தாய்மைப் பண்பு உளவியலடிப்-




படையாக மாற்றப்படுகின்றது. பிள்ளை வளர்ப்பது என்பது பெண்ணின் பண்புகளில் ஒன்றாகவும், பிள்ளை தவறுவிட்டால் "தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலை" எனவும் தாய்மையின் பண்பைக் காப்பாளர் பண்பாக உருவகித்துச் சாதனைகள் புரியவிடாது தடுத்துள்ளது ஆணாதிக்கச் சமூகம். காத்தல், கொடை, வளப்பம்தரல், ஆக்குதல், கோபம் போன்றவை பெண் தெய்வப்பண்புகளாக உள்ளன. ஆண் தலைமையைக் கட்டிக்காக்கும் பண்புடையவர்களாகவே பெண் தெய்வங்கள் காட்டப்பட்டுள்ளன.

மனுதர்மசாஸ்திரத்திலே ஆணாதிக்க் கருத்துக்கள் வலுவாக ஆட்சி செய்கின்றன.

"குழந்தைப் பருவத்தில் அவளைத் தந்தை கண்காணிக்கிறார் இளமைப்பருவத்தில் கணவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்காணிக்கிறார் முதுமைப் பருவத்தில் மகன் கண்காணிக்கிறார் பெண் என்பவள் ஒருபோதும் சுதந்திரம் பெறப் பொருத்தமானவள் அல்ல" (மனு, 328)

"நாமும் பொழுதும் பெண்கள் ஆண்களில் தங்கியிருப்பவர்களாகவே குடும்பம் வைத்திருக்கவேண்டும். ஆண்கள் உணர்வுகளுக்கான மகிழ்வூட்டும் பணியில் பெண்கள் ஈடுபடுவதும் ஆண்களின் கடடுப்பாட்டுக்குள் இருத்தப்பட்ட நிலையிலையேதான் செய்ய முடியும்" (மனு, 328)

தமிழிலக்கியங்களில் பெண்கள் காலங்காலமாக எவ்வாறு மதிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளம். "பெருமையும் அறிவும் ஆடூஉ மேன" என்ற தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம் பெருமையும் அறிவும் ஆணுக்கு உரிய இலக்கணமாகக் கூறுகின்றது. பாலியல் அடிப்படையில் மனித இனம் பாகுபடுத்தப்பட்டுப் பெண்

"அவன் சோர்வு காத்தல் கடனெனப்படுதலின் மகன்தாய் உயர்பும் தன்னுயர்பாகும் செல்வன் பணிமொழி இயல்பாகலான்" (தொல்.பொ.கற்பியல்-33)

என ஆணுக்காக உருவாக்கம் செய்யப்பட்ட ஒரு உயிராகக் காட்டப்படுகின்றாள். சீவகன் சென்றவிடமெல்லாம் மகளிரை மணந்து ஒருசில மாத வாழ்வுடன் அவர்களைத் தவிக்கவிட்டுச் சென்றுவிடுகிறான். பண்பாடு, சடங்கு, சமயமரபு எல்லாவற்றிலும் பெண் பாலியல்ரீதியில் ஒடுக்கப்படுகின்றாள். பெண்ணின் பெருமை ஆண்களுக்கு அடிமைகளாக்கும் சமுதாயக் கல்வியூட்டலுக்கூடாக வள்ளுவரிடம் பரக்கக் காண்கின்றோம். "பெண்ணின் பெருத்தக்க யாவுள-கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்" என "கற்பு" அவளது உடமையாகச் சுமத்தப்படுகின்றது. புராணங்கள் வரலாற்றுப் பெண்களைப் படைத்து பெண்களுக்கு இலக்கண வரையறை, வாழும் விதிகளைக் கூறுகின்றன. "கண்டனன் கற்பினுக் காந்தையை" என அனுமன் மூலம் சீதையின் கற்பு முதனிலைப்படுத்தப்பட்டும் தீக்குளித்துத்தான் இராமனால் தீண்டப்பட வைக்கப்படுவதும் பெண் சிறைகாக்கும் கற்பின் மூலம்தான் புராண நாயகிகளாக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

காமுகவெறியர்கள் பாலுணர்வு வேட்டையில் ஈடுபடும்போது அவர்களுக்குச் சட்டப்பாதுகாப்பும், சமுதாயப்பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது. சிங்கப்பூரில் தமிழ் ஏஜென்டுகளால் ஏமாற்றப்பட்டு குழந்தைகளையும் சுமந்த பெண்களுக்கு நீதி தேடும் படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்குநாடுகளில் குடும்பங்களுடன் வாழும் இந்த ஏஜென்டுகளைத் தேடிப் பிடித்து நீதியின் கைகளில் ஒப்படைப்பது எளிமையானதா? பிலிப்பைன்ஸ் நாட்டு அமெரிக்கத்தளங்களில் இருந்த இராணுவத் தந்தையரைத் தேடிப் பாதிரியார் அமெரிக்காவிற்குக் குழந்தைகளுடன் வந்ததும் புராணமாகவே போய்விட்டது. பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவர்களுக்கு நியாயமான நீதி வழங்கப்படுவதில்லை. இந்தியாவில் 1989இல் 10 வயதுச் சிறுமி பேரூந்து நிறுவனத்துக்கு அருகாமையில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டமைக்குச் சாட்சிகள் இருந்தன. அவளது கன்னிமைச் சவ்வும் காயப்பட்டு இருந்தது. மாவட்ட நீதிமன்றம் ஆயுட்தண்டனை விதிக்க, டெல்லி உயர்நீதிமன்றம் "வளர்ச்சி அடைந்த ஆண், பருவமடையாத சிறுமியுடன் வன்மையான உறவு கொள்ளும்போது அவனது ஆணுறுப்பில் காயம் ஏற்பட்டிருக்கவேண்டும். அது நிகழாதபடியால் தண்டனை தள்ளுபடியானது" எனக் கூறியது.

விபச்சாரம் செய்யும் பெண் இழிவாகக் கருதப்படுகிறாள், தண்டிக்கப்படுகிறாள். சமூகத்தாலும் நீதிமன்றத்தாலும் தண்டிக்கப்படுகிறாள். ஆனால் விபச்சாரத்திற்கு உள்ளாகும் பலஆயிரம் ஆண்கள் கண்டிக்கப்படுவதுமில்லை, தண்டிக்கப்படுவதுமில்லை. விபச்சாரிகளிடம் சென்ற ஆண் ஊரிலிருந்து கன்னிமை மாறாத பெண்ணை வரவழைத்து தனது குஞ்சு பொரிக்கும் இயந்திரம் ஆக்கிக் கொள்ளலாம். ஆண்கள் ஊரிலும், வேற்றூரிலும், வேற்றுநாட்டிலும் சின்னவீடுகள் வைத்திருக்க முடியும், வைத்திருக்கின்றனர். சிங்கப்பூருக்கு ஏஜண்டாகப் போகும் சமயம் ஒரு குடித்தனமும் புலம்பெயர்ந்த நாட்டில் ஒரு குடித்தனமுமாக வாழ்பவர் பற்றிப் பல கதைகள். ஆனால் பெண்கள் இவ்வாறு செய்ய முடியாது. சமூகத்தின் கற்கள் அவளைத் தாக்கும். பரத்தை ஒழுகும் ஆடவரை முகம் மலர்ந்து வரவேற்கும் பெண்மை தெய்வமாக்கப்பட்டதற்கு வரலாற்றுக் கண்ணகி உதாரணம். சிலப்பதிகாரம் யாத்த இளங்கோ அடிகளுக்கு அது அவசியமாகின்றது. ஆணாதிக்கச் சமூக விழுமியங்களைப் போற்றும் பணியில் காவியங்களை இயற்றிய தமிழ்ப்புலவர்கள் உறுதியான சேவைகளை ஆற்றியுள்ளனர். மயிர்நீப்பின் வாளா கவரிமான்களாக அகலிகை போன்றோர் ஆக்கப்பட்டனர், சபிக்கப்பட்டனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் பாலியல் அடிப்படையில் பெண்கள் உயர்வுநிலையில் இருக்கின்றனர் எனத் தமிழர் சமூகம் பொதுநோக்கைக் கொண்டிருக்கின்றது. இது பற்றிய கருத்துப் படிவம் சமூகத்தில் பரவலாகக் காணப்படுவதற்கு பொலிசாரை அழைக்கும் அவசர இலக்கம் பெண்களது சுதந்திரத்தின் உச்சநிலையை உறுதிப்படுத்தும் கருவியாகக் கொள்ளப்படுவது ஆதாரமாகக் காட்டப்படுகின்றது. கட்டிடச்சிறைகளிலும் நெருப்புப்பெட்டிகளிலும் தமிழ்ப்பெண்கள் பலர் அடைக்கப்பட்டவர்களாக வாழ்வது பல நிறுவனங்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. அடிப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொலிசாரால் கைது செய்யப்படக் காரணியாக அமைகின்றது என்பதை அறிந்தவர்கள் அடிப்பதை நிறுத்தித் தொடர்ச்சியாக உளவியற் துன்புறுத்தல்களைச் செய்கின்றனர் அவர்களை எங்கும் தொடர்கின்றனர் குழந்தைகளைப் பயன்படுத்தி "முட்டாள்கள் அம்மாக்கள்" எனக் கூற வைக்கின்றனர் கூடுகளில் அடைக்கப்பட்டு விடுபடமுடியாது திணறுகின்றனர். பரநோயா எனும் சந்தேக நோய் பிடித்தவர்களாக மனைவிமாரை தொடர்தல், ஐயப்படல், ஒலிநாடாவில் பதிவுசெய்தல், தொலைபேசியினுள் பதிவு நாடாவைப் பொருத்துதல் போன்றவற்றைச் செய்கின்றனர். மனைவியர் யாருடன் பேசுகின்றனர் என்பதில் எந்நேரமும் கவனம் எடுப்பர். ஆண்களைப் பார்க்கவோ, பேசவோ விடமாட்டார்கள்.

கனடாவில் சராசரி 35 தடவைகள் அடிவாங்கிய பின்னரே ஒரு பெண், பொலிசில் புகார் செய்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. காப்பகங்களில் குழந்தைகளுடன் தஞ்சம் புகுவோரின் தொகைகள் அதிகரிக்கின்றன. வயோதிபப் பெண்களும் இதற்கு விதிவிலக்காக இல்லை. அவர்களில் சில பெண்கள் காப்பகங்களையும் நாடாமல் வன்முறைகளுக்கு உள்ளாவது பெண்களின் "தலைவிதி" எனக் கூறிக்கொண்டு தொடர்ந்து பொறைதாங்கிகளாக வாழப் பழகிவிடுகின்றனர். மாடிகளிலிருந்து குதித்த பெண்களின் கதைகள் அவர்களது உளவியல்ரீதியிலான தொடர்ச்சியான சமூகக் கட்டமைப்புக்களால் உருவாக்கப்பட்ட காரணிகள் பற்றிய விளக்கத்தைக் கூறுவன. புலம்பெயர்ந்து உயிர்காத்து, குழந்தைகளை வளர்த்துக் கல்வி புகட்டி வாழவைக்கும் நோக்குடன் வந்த பெண்கள் படுமோசமான கொலையாளிகளால் படுகொலை செய்யப்பட்டமை பாலியல் சமத்துவத்தின் படிகளில் ஏறிய கனடாத் தமிழ்ப் பெண்ணினத்துக்கு ஏற்பட்ட பெரும் விழுக்காடு. உருவம் தெரியாது சிதைத்த கொலை கோரக்கொலை புரிந்தவர்களுக்கு பெண்களில் இருந்த அளவுமீறிய வெறுப்பைக் காட்டுகின்றது.

பாலியல் வதைகளுக்கு உள்ளாகும் பெண்கள் பலரகத்தினர். ஆண்-பெண் பாலியல் சமத்துவம் பேணப்படாதவரை, பெண்கள் பாலியல்ரீதியில் துன்பறுத்தப்படுவதும் முதலாளித்துவ சமூகங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் ஒன்றாகவே இருக்கும். குழந்தைகள் பாலியல் துன்புறுக்கல்களுக்கு உள்ளாகுவதில்லை எனவும், அது மேற்கத்தைய சமூகத்தில் நடைபெறும் ஒன்று எனவும் எமது சமூகம் நம்பிக் கொண்டிருக்கின்றது. குழந்தைகளைப் பாலியல் துன்புறுத்தல் செய்வதற்கும் செய்யப்படுவதற்கும் எந்த ஒரு சமூகமும் விதிவிலக்கானதல்ல. கனடாவிலும் பல குழந்தைகள் தாம் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருத்தலை தமது ஆசிரியர்களுக்குக் கூறியுள்ளனர். இளம்பெண் குழந்தைகள் தங்கள் நெருங்கிய உறவினர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. அப்பெண்கள் உளவியல்ரீதியில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இளம் சிறுமிகளும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டமைகூடப் பரவலாக அவர்களது நெருங்கிய வயது வந்த உறவினர்களாலேயே. இளமையில் இவர்களுக்கு நடைபெற்ற இத்துன்பியல் நிகழ்வுகள் பலவிதமான துன்பியல் நாடகங்களை அவர்கள் வாழ்க்கையில் ஏற்படுத்த



அடிப்படையாக இருந்துள.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்ப்பெண்கள் வெள்ளைச்சகோதரிகளைவிட பாலியல் அடிப்படையில் மிகவும் நசுக்கப்படுவதற்குப் பிரதானமான காரணம் அவர்களின் தோலின் நிறம். இவர்கள் வெள்ளைப் பெண்களாலும் ஒடுக்கப்படுகிறார்கள். புலம்பெயர்ந்த நாட்டு நிர்மாணத்தில் பாலினமும், இனமும் தொடர்ச்சியான பங்களிப்பைச் செய்து வருகின்றன. தமிழ்ப்பெண் இன்று புலம்பெயர் நாடுகளில் தொழிற்சாலைகளில் இரத்தத்தையே உறையவைக்கும் குளிரில் கூடுதலாக இரவு நேர வேலைகளில் ஈடுபடுகின்றனர். பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர். வயோதிபர்களையும் நோயாளர்களையும் பராமரிக்கின்றனர். இரவிலே அலுவலகங்களையும், வர்த்தக நிலையங்களையும் துப்புரவாக்குகின்றனர். சமையற்காரிகளாக இருக்கின்றனர். குழந்தைகள் பாடசாலைகளில் எதிர்கொள்ளும் உபத்திரவங்களை அவளும் எதிர்கொள்கிறாள். குழந்தைகளின் குழு நடவடிக்கை போன்றவற்றால் அவலம் கொள்கிறாள். பெண் குழந்தையினது பாதுகாப்புக்கு அச்சமுறுகிறாள். வர்க்கவேறுபாடுகளை ஜீரணிக்க முடியாது திண்டாடும் அவளுக்குப் புலம்பெயர்ந்த மண் ஒரு சுமையாகத் தோன்றுகின்றது. தேயிலைக் கொழுந்து கொய்யும் பெண்களுக்கும் ஓய்வு உண்டு. ஆனால் இவளுக்கு விடியல் வருமா? தேசம் தொலைத்து வந்தவள் வாழ்வில் ஆயிரம் அட்டைகள் உறிஞ்சும் உணர்வு. அடக்கப்படுகிறாள், ஒடுக்கப்படுகிறாள், யாருக்காகவோ உறிஞ்சப்படுகிறாள். இவளது உரிமைகள் அடகுவைக்கப்பட்டு விட்டனவா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால்வினைத் தொழிலும் ஆண்மேலாதிக்கமும்

*ஆங்கிலமூலம்: அந்திரியா ட்வார்கின்*

**Andrea DWORKIN**

இவர் ஒரு பெண்நிலைவாதி. ஒரு சமபாலுறவாளர். ஒரு எழுத்தாளர்.
இவர் பிறந்தது 26/09/1946. இவர் அமெரிக்காவில் நியூஜேர்சியில் உள்ள கம்டனில் பிறந்தவர். இவர் தனது சிறுவயதிலேயே எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். வியட்நாம்போருக்கெதிரான மாணவர் ஊர்வலங்களில் பங்கேற்றவர். இப்படியான ஊர்வலமொன்றின் போது கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். இந்தச் சிறைவாசம், பெண்களின்மீதான ஆண்அதிகாரத்தைப்பற்றி விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு வழி செய்தது. இது தொடர்பாக இவர் நூல்கள் வெளியிட்டிருக்கின்றார்.
**Woman Hating: A radical look at sexuality (1974)**
**Our Blood: Prophecies and discourses on sexual politics (1976)**
பெண்நிலைவாத சட்டத்தரணி Catherie Mckinnon உடன் இணைந்து **Pornography and Civil rights: A new day for Women's equality (1988)** எனும் நூலை வெளியிட்டார்.
இவர்கள் இருவரும் இணைந்து போர்னோகிராபி எதிர்ப்புச் சட்ட இணைப்பொன்றைக் கொண்டு வந்தார்கள். இவர் வேறு சிறுகதைகள் நாவலும் எழுதி இருக்கின்றார்.

**(மிச்சிக்கன் சட்டக் கல்லூரியில் Michican Journal of Gender & Law என்னும் சஞ்சிகையினால் "பால்வினைத் தொழில்: சர்வகாலாசாலையில் இருந்து செயற்பாட்டுக்கு" என்னும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விவாத அரங்கில் பங்குபற்றிய Andrea Dworkin பால்வினைத் தொழிலும் ஆண்மேலாதிக்கமும் பற்றி பேசிய உரையின் எழுத்து வடிவம்)**

என்னுடைய நண்பர்களுடனும், இந்த இயக்கத்தில் இருக்கும் எனது சகோதரிகளுடனும் சகாக்களுடனும் இங்கு இருப்பதில் நான் மிகவும் பெருமையடைகிறேன்.

அத்துடன் நான் இங்கு இருப்பது குறித்து, சகிக்கமுடியாத கொள்ளையான முரண்பாடுகளை உணருகின்றேன். ஏனெனில், சர்வகாலாசாலை அமர்வொன்றில் பால்வினைத் தொழில்பற்றிப் பேசுவதென்பதை எண்ணிப் பார்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. இது உண்மையிலேயே மிகவும் கஷ்டமானது.

சர்வகலாசாலையில் இருக்கும் முன்னனுமானங்களைக் கொண்டு பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண்களின் யதார்த்தமான வாழ்க்கையைப்பற்றி வெறுமனே கற்பனை செய்ய ஆரம்பிக்க முடியும். சர்வகலாசாலை வாழ்க்கையானது ஒரு நாளை, ஒரு மறுநாள், ஒரு அதற்கு மறு நாள், ஒரு அதற்கும் மறுநாள் என்று இருக்கின்றது என்பதைக் கருத்தமைவாகக் கொண்டு முன்னமைக்கப்பட்டது. அல்லது யாராவது ஒருவர் குளிர்கால நேரத்தை கல்வி பயிலுவதில் செலவளிப்பதற்காக உள்ளுக்குள் வருவதற்காக அமைக்கப்பட்டது. அல்லது கருத்துக்களின்மீதான ஒருவிதமான விவாதங்கள் இருக்கும் அல்லது உங்கள் வாழ்க்கை விலைபோய்விடாதளவு சில அதிருப்திகளுடன் கூடிய சுதந்திரமான ஒரு வருட வாழ்க்கை. இந்தச் சர்வகலாசாலை உலகம் என்பது இங்கு மாணவர்களாக இருப்பவர்கள் அல்லது இங்கு கல்வி கற்பிப்பவர்கள் ஒவ்வொரு நாளும் தாக்கம் செலுத்தும் இடமாகும். இங்குள்ளவர்கள் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அல்லது ஈடுபடுத்தப்பட்ட பெண்களின் வாழ்க்கைக்கு எதிரிடையானவர்கள்.

நீங்கள் பால்வினைத் தொழிலில் ஈடுபட்டிருந்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடைய மனதில் நாளை என்ற ஒன்று இருக்காது. ஏனெனில் உங்களுக்கு நாளை என்பது மிகவும் தொலைவில் இருக்கும் ஒரு காலம். நீங்கள் நிமிடத்திற்கு நிமிடம் வாழப் போகின்றீர்கள் என்று அனுமானம் செய்து கொள்ள முடியாது. நீங்கள் அப்படி அனுமானம் செய்ய முடியாது. நீங்கள் அப்படி அனுமானம் செய்யக் கூடாது. நீங்கள் அப்படிச் செய்வீர்களாயின் நீங்கள் சுத்தமான முட்டாள்கள். பால்வினைத் தொழில் உலகில் ஒருவர் முட்டாளாக இருப்பதென்பது தன்னைக் காயப்படுத்துவதும் தன்னை அழித்துக்கொள்வதுமாகும். பால்வினைத் தொழிலுக்கு ஆளாக்கப்பட்ட எந்த ஒரு பெண்ணும் அவ்வளவு முட்டாளாக இருப்பதைத் தாங்கிக் கொள்ளமுடியாது. அதாவது நாளை என்று ஒன்று வரும் என்பதை உண்மையில் நம்புபவராக இருப்பதை.

இந்த இரண்டு வித்தியாசமான உலகங்களையும் ஒன்றிணைத்துப் பார்க்க முடியாது. என்னால் ஒன்று மட்டும் கூறமுடியும். பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண்ணின் உலகம் என்னுடைய உலகம். அவர்களிடம் இருந்துதான் நான் செயற்படுகிறேன். இத்தனை வருடங்களும் என்னுடைய செயற்பாடுகள் அவர்களைத்தான் அடிப்படையாகக் கொண்டிருந்தன. சர்வகலாசாலையில் இருந்து வரும் பெண்நிலைவாதம் இதைத்தான் சொல்லும்- அதாவது நாங்கள் ஒவ்வொரு வருடமும் இந்தப் பிரச்சனையான பக்கங்களின் கருத்துகளைக் கேட்போம். பின்பு ஒரு நாள், எதிர்காலத்தில், ஏதோ ஒரு வழியில் - அந்த வழியை நாங்கள் இன்னும் கண்டு பிடிக்கவில்லை- எது சரி எது உண்மை என்பதை நாங்கள் முடிவு செய்வோம்- இப்படி இவர்கள் கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் என்னால் அதை நம்பமுடியாது. எனக்கு இந்த வார்த்தைகள் எந்த அர்த்ததையும் வழங்கவில்லை. உங்களில் பலருக்கு இது அரத்தபுஷ்டியுள்ளதாக இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. என்னுடைய சொந்த வாழ்க்கையின் மிகப்பெரிய கலாச்சாரப் பிரிப்பின் குறுக்கே பேசிக் கொண்டிருக்கிறேன். அதனைக் கடந்து பேசுவதற்கு 20 வருடங்களாக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். அதனுடன் ஓரநிலை வெற்றியை அடைந்திருப்பதாக நான் கொள்கிறேன்.

நான் எங்களை மீண்டும் விவாதத்தின் அடிப்படையான விடயத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பால்வினைத் தொழில்: அது என்றால் என்ன? பணத்தைக் கொடுக்கும் ஒரு ஆண் ஒரு பெண்ணினுடைய உடலைத் தனது பாலியல் இச்சைக்காக தான் விரும்பியபடி எதனையும் செய்வதற்கு பாவிப்பது. யதார்த்தத்தில் இது எப்படி இருக்கின்றது என்பதை விட்டு ஒரு கணம் நீங்கள் விலகிச் செல்வது என்பது, நீங்கள் பால்வினைத் தொழிலில் இருந்து விலகி கருத்துக்களின் உலகத்திற்குள் பிரவேசிக்கிறீர்கள் என்பதாகும். அப்படிச் செல்லும்போது இங்கு நீங்கள் சௌகரியமாக இருப்பதாக உணருவீர்கள் உங்களுக்கு ஒரு நல்ல நேரம் இருக்கும் இது மிகவும் வேடிக்கையானது இதில் விவாதிப்பதற்கு நிறைய இருக்கின்றது. ஆனால், நீங்கள் கருத்துக்கள் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருப்பீர்கள். பால்வினைத் தொழில் பற்றியல்ல. பால்வினைத் தொழில் என்பது ஒரு கருத்துரு அல்ல. அது - வாய், யோனி, குதம் இவைகளினுள் அநேகமாக ஒரு ஆண்குறி நுழைக்கப்படும். சிலவேளைகளில் கைகள், சிலவேளைகளில் பொருட்கள்- ஒரு ஆணினால், பிறகு இன்னொரு ஆணினால், பிறகும் இன்னொரு ஆணினால் இப்படி இப்படி. இதுதான் அது.

உங்களுடைய சொந்த உடல்களைப்பற்றிச் சிந்திக்கும்படி நான் உங்களைக் கேட்கிறேன் - போர்னோகிராபிக்காரர்களால் உங்கள் மனங்களில் உருவாக்கப்பட்டுள்ள, தட்டையான, உணர்ச்சியற்ற, மிதக்கும் வாய்கள், யோனிகள், குதவாயில்கள் போன்ற வகைப்பட்ட உலகத்திற்கு வெளியில் உங்களால் உங்கள் உடலைப்பற்றிச் சிந்திக்கமுடியுமென்றால்.



உங்களுடைய உடல்கள் இப்படிப் பாவிக்கப்படுவதைப்பற்றி திட்டவட்டமாகச் சிந்திக்கும்படி நான் உங்களைக் கேட்கிறேன். எப்படிப் பாலியல் கவர்ச்சியானது இது? இது மகிழ்ச்சி தருவதா? பால்வினைத் தொழிலையும் போர்னோகிராபியையும் காப்பாற்றுபவர்கள் ஒவ்வொரு தடவையும் ஒரு பெண்ணினுள் ஏதாவது சிக்கியிருப்பதைப்பற்றி உங்களை எண்ணச் செய்து, ஒரு சிறிய விசித்திரமான சிலிர்ப்பை உணர வைக்க விரும்புகிறார்கள். அவளுடைய உடலில் இருக்கும் நுண்மையான திசுக்கள் துர்ப்பாவனை செய்யப்படுவதை உணரும்படி நான் உங்களைக் கேட்கின்றேன். இந்தச் செயல் மீண்டும், மீண்டும், மீண்டும், திரும்பவும் மீண்டும், மறுபடியும் மீண்டும், இன்னும் மீண்டும், அதன்பின் மீண்டும் நடந்தால் எப்படி இருக்கும் என்பதனை நீங்கள் உணரும்படி நான் உங்களைக் கேட்கிறேன். ஏனெனில் பால்வினைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழில் என்பது இதுதான்.

அதனால்தான் - பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அல்லது ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒரு பெண்ணின் நோக்கில் இருந்து - இது ஹோட்டல் பிளாஸாவில் நடந்ததா அல்லது அதனைவிட மரியாதையும் வசதியும் குறைவான இடத்தில் நடந்ததா என்றெல்லாம் மற்றவர்கள் பிரித்துப் பார்ப்பது போல் பிரித்துப் பார்க்கும் விடயமல்ல இது. இவைகள் முற்றிலும் ஒப்புக்கொள்ள முடியாத உலகங்களுடன் சமாதானப்படுத்த முடியாத உணர்வுகள். நீங்கள் சொல்வீர்கள், எப்படியென்றாலும் சூழ்நிலைகள் என்பது முக்கியமானதென்று. இல்லை. அவைகள் இல்லை. ஏனெனில் நாங்கள் பேசிக்கொண்டிருப்பது வாய், யோனி, குதம் என்பன பற்றித்தான். பால்வினைத் தொழில் என்ன என்பதை சூழ்நிலைகள் குறைக்கவோ அல்லது மாற்றவோ மாட்டாது.

பால்வினைத் தொழில் என்பது இயற்கையான இழிவுபடுத்தும் ஒரு தொழில் என்று எங்களில் பலர் சொல்கின்றோம். உங்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நான் உங்களுக்கு சுயமான பால்வினைத் தொழில் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன் - அதாவது மோசமான பலாத்காரமற்ற, மேலதிக வன்முறையற்ற, ஒரு பெண் தாக்குதலுக்கு உட்படாமல், ஒரு பெண் தள்ளி விழுத்தப்படாமல் இருக்கும் ஒரு நிலைபற்றி. பால்வினைத் தொழில் என்பது அதனளவிலும் அதுவாகவும் ஒரு பெண்ணின் உடலை துர்ப்பாவனை செய்தல். இதனை நாங்கள் கூறும்பொழுது, மிகவும் சாதாரண மனப்பான்மை கொண்டவர்கள் என்று நாங்கள் குற்றம் சுமத்தப்படுகிறோம். ஆனால் பால்வினைத் தொழில் என்பது மிகவும் சாதாரணமானது. நீங்கள் சாதாரண மனப்பான்மை கொண்டவர்களாக இல்லாவிட்டால் நீங்கள் இதை எப்பொழுதும் புரிந்து கொள்ளமுடியாது. எவ்வளவுக்கெவ்வளவு சிக்கலாக இருப்பதற்கு நீங்கள் முயலுகின்றீர்களோ அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் யதார்த்தத்தில் இருந்து விலகிச் சென்றுவிடுவீர்கள் - பாதுகாப்பாக இருப்பீர்கள், மகிழ்ச்சியாக இருப்பீர்கள், பால்வினைத் தொழில் என்ற விடயம் பற்றி விவாதங்கள் செய்வதில் மிகவும் வேடிக்கையை அனுபவிப்பீர்கள். பால்வினைத் தொழிலில் எந்த ஒரு பெண்ணும் முழுமையாக இருப்பதில்லை. பெண்களின் உடல்கள் பால்வினைத் தொழிலில் பாவிக்கப்படுவதுபோல எந்த ஒரு மனித உடலையும் பாவிப்பதென்பது முடியாதது. அப்படிப் பாவிக்கப்பட்டதன் முடிவில் அல்லது அதன் நடுவில் அல்லது அதன் ஆரம்பத்திற்கு நெருக்கமாக, ஒரு மனித உயிரியை முழுதாகக் கொண்டிருப்பதென்பது முடியாதது. எந்தப் பெண்ணும் பின்போ அல்லது பிந்தியோ முழுமையைப் பெறமுடியாது. பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு துர்ப்பாவனை செய்யப்பட்ட பெண்களுக்கு சில தெரிவுகள் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மிகவும் கெட்டிக்காரத்தனமான பெண்கள் சில மிகமுக்கியமான தெரிவுகளை மேற்கொள்கிறார்கள் என்பதைக் காண்பீர்கள்: தங்களுக்குத் தெரிந்ததைப் பாவித்தல், தங்களுக்குத் தெரிந்ததை உங்களுக்கு பரிவர்த்தனை செய்வதற்கு முயலுதல். ஆனால் எவரும் முழுமையைப் பெறுவதில்லை. உங்களுக்குள் ஆக்கிரமிப்பு இருக்கும் பொழுது, உங்களுடைய உடலுக்குள் கொடூரம் இருக்கும்பொழுது உங்களிடமிருந்து எவ்வளவோ அகற்றப்பட்டுவிட்டது. எங்களுக்குள் இருக்கும் வலியை வேதனையை நாங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள கஷ்டப்பட்டு முயற்சி செய்கின்றோம். நாங்கள் வாதாடுகின்றோம். வேற்றுமைக்குள் ஒத்த தன்மைகளை உருவாக்குகின்றோம். பால்வினைத் தொழிலைப் பொறுத்தவரை என்னால் எண்ணக்கூடிய ஒரு ஒற்றுமை என்னவென்றால், இது எந்த ஒன்றை விடவும் கூட்டான பாலியல் பலாத்காரத்தைப் போன்றது என்பதுதான்.

ஓ! நீங்கள் சொல்கிறீர்கள் கூட்டான பாலியல் பலாத்காரம் என்பது முற்றாக வேறுபட்ட ஒன்றென்று. ஒரு அப்பாவிப் பெண் வீதியில் நடந்து கொண்டிருக்கிறாள். அவள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் தூக்கிச் செல்லப்படுகிறாள். ஒவ்வொரு பெண்ணும் அந்த அப்பாவிப் பெண்தான். ஒவ்வொரு பெண்ணும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் தூக்கிச் செல்லப்படுகிறாள். பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒவ்வொரு தடவையும் மீண்டும் மீண்டும், திரும்பவும் திரும்பவும், இன்னும் இன்னும், மறுபடியும் மறுபடியும் ஆச்சரியத்தைத்தான் சந்திக்கிறாள். இந்தக் கூட்டான பாலியல் பலாத்காரத்திற்கு பணப் பரிமாற்றத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது. அவ்வளவுதான். இதுதான் கூட்டான பாலியல் பலாத்காரத்துக்கும் பால்வினைத் தொழிலுக்கும் உள்ள ஒரேயொரு வித்தியாசம். ஆனால் பணம் என்பது ஒரு அபூர்வமான பண்பைக் கொண்டது. அப்படியில்லையா? ஒரு பெண்ணுக்கு நீங்கள் பணத்தைக் கொடுங்கள். அவளுக்கு நீங்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு என்னவெல்லாம் செய்தீர்கள். இதை அவள் விரும்பினாளா? இது அவளுக்கு வேண்டியதா? எல்லாம் நீங்கள்தான். இப்போது நாங்கள் ஆண் உழைப்பு பற்றி புரிந்து கொள்ளுகிறோம். ஒரு ஊதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆண்கள் தங்களுக்கு விருப்பமில்லாத தொழிலைக்கூட தொழில் என்ற அடிப்படையில் செய்கிறார்கள். இதைப் புரிந்து கொள்கிறோம். ஆண்கள் ஒரு தொழிற்சாலையில் மாற்றுத் தொழில் செய்யும்பொழுது கிடைக்கும் அந்தப் பணம் இப்படியான ஒரு அனுபவமாக எப்படி மாறுகின்றது என்று அவர்கள் சொல்வதில்லை. உண்மையிலேயே எதற்குமே ஆசை கொள்ளவில்லை. நாங்கள் சலிப்பு, மரணம்வரை முடிவின்மை என்பவற்றைக் காண்கிறோம். நாங்கள் சொல்கின்றோம் நிச்சயமாக ஒரு ஆணின் வாழ்க்கைப் பண்பு இதைவிட நல்லதாக உயர்வானதாக இருக்கவேண்டும் என்று.

பணத்தின் அபூர்வ தொழிற்பாடு பால்வாதமாக்கப்-பட்டுள்ளது. அதாவது பெண்கள் பணத்தை வைத்திருக்கலாம் என்று கருதப்படவில்லை. ஏனெனில் பெண்களிடம் பணம் இருக்கும்பொழுது பெண்கள் தெரிவுகளைச் செய்யமுடியும் என்று வைத்துக் கொள்வோம். அவர்களின் தெரிவுகளில் ஒன்றாக, பெண்கள் ஆண்களுடன் இருக்கமுடியாது என்றும் தெரிவுசெய்ய முடியும். அப்பொழுது தங்களுக்கு பாலியல் உரிமை இருக்கின்றது என்னும் உரிமையில் இருந்து தள்ளிவைக்கப்படுவார்கள். அப்படி அது தேவைப்படுமானால் ஒரு முழு வர்க்க மக்களுமே கொடூரமாகவும் மரியாதை இன்றியும் விலக்கி வைக்கப்பட்டும் நடத்தப்படுவார்கள். சேவை செய்யவேண்டிய நிலைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தள்ளப்படுவார்கள். எனவே தங்களுக்கு உரிமை இருக்கின்றதென்று கருதும் பாலியல் சுகத்தை ஆண்கள் பெறுவார்கள். இதுதான் ஆண்மேலாதிக்கத்தின் அர்த்தத்தின் உள்ளீடு. ஆண்மேலாதிக்கம் என்பது ஒரு அரசியல் கட்டுமான அமைப்பு.

இது எப்பொழுதும் அசாதாரணமானது. இந்தப் பணப் பரிவர்த்தனையை நோக்கும் பொழுது, அநேகமானவர்களின் மனதில் பணம் என்பது பெண்ணைவிட அதிக மதிப்புள்ளது என்று புரிந்து கொள்கிறார்கள். 10 டொலர்கள், 30 டொலர்கள், 50 டொலர்கள் என்பது பெண்ணினுடைய முழுவாழ்க்கையை விடவும் அதிகளவு பெறுமதியானது. பணம் ஸ்தூலமானது. பெண்ணைவிட அதிகளவு ஸ்தூலமானது. பணத்துடன் அவன் ஒரு மனித உயிரை (மனித வாழ்க்கையை) வாங்கமுடியும். அதனுடைய முக்கியத்துவத்தை அழிக்க முடியும். சிவில், சமூக பிரக்ஞையின் ஒவ்வொரு கூறில் இருந்தும், மனச் சாட்சியில் இருந்தும், சமூகத்தில் இருந்தும், சட்டத்தின் பாதுகாப்பில் இருந்தும் பிரஜா உரிமைக்கான எந்த உரிமையில் இருந்தும், மனித கௌரவத்துக்கும் மனித இறைமைக்குமான எந்த கருத்துநிலையில் இருந்தும் பாழாய்ப்போன டொலர்களுக்கு எந்த ஆணும் இதனைச் செய்யலாம். பெண்கள் பெண்களாக இருப்பதற்காகவே அவர்கள் ஏன் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஏதாவது ஒரு காரணத்தை நீங்கள் தேடினால் அது வறுமைதான். வறுமை என்பது போதுமானது. வறுமை கடினமானது. வறுமை காயப்படுத்துகின்றது. இந்த மோசமான பெண்கள் தாங்கள் பெண்களாக இருப்பதற்காக கவலைப்படக்கூடும். பசியுடன் இருப்பது கொடுமையானது. வசிப்பதற்கு ஒரு நல்ல இடம் இல்லாதிருப்பது கொடுமையானது. நீங்கள் உண்மையில் மிகவும் விரக்தியாக உணருவீர்கள். வறுமை என்பது மிகமோசமான தண்டனை. ஆனால் இந்த வாழ்க்கைக்கு வறுமை மட்டும் போதுமானதன்று. ஏனெனில் வறுமை மட்டுமே ஒரு கும்பல் பெண்களை, ஆண்கள் கேட்கும்போது மட்டும் தங்கள் உடலை விற்பதற்கு, வழங்காது. இந்தப் பெண்கள் கும்பலை உருவாக்குவதற்கு வறுமை மட்டும் போதுமானதன்று. அவர்கள் எவ்வளவுதான் பசியோடிருக்கிறார்கள் என்பதெல்லாம் ஒரு பொருட்டேயல்ல. எனவே வெவ்வேறு கலாச்சாரங்களில் சமூகங்களில் வெவ்வேறு விதமாக ஒரே விலையைப் பெற்றுக் கொள்வதற்கு வெவ்வேறு விதமாக ஒழுங்கமைக்கப்படுகின்றன. பெண்களின் வறுமை மட்டுமல்ல. ஆனால் ஒரு பெண் கொண்டிருக்கும் ஓரே ஒரு பெறுமதியான பொருள் அவளுடைய "பாலியல்" என்றழைக்கப்படும் ஒன்று. அது அவளுடைய உடலோடுள்ளது. ஆனால் அது விற்கப்படக் கூடிய ஒரு பொருளாக மாற்றப்பட்டுள்ளது. அவளுடைய "பாலியல்" என்றழைக்கப்படும் ஒரு விடயம் கருத்திலெடுக்கப்படக் கூடியதாக அமைகின்றது. அவளுடைய உடல் யாராவது வாங்குவதற்கு விரும்பும் ஒரேயொரு பொருளாகின்றது. அதிலிருந்து ஒரு அனுமானம் எடுக்கப்படலாம். அவள் வறுமையில் இருந்தாள். அவளுக்குப் பணம் தேவைப்பட்டது. எனவே அவள் தன்னுடைய பாலுறுப்பை விற்றாள். இந்த அனுமானம் பிழையாகவும் இருக்கலாம். இந்த அனுமானமானது பால்வினைத் தொழிலுக்கு ஈடுபடுத்தப்பட்ட அந்தக் பெண்கள் கும்பலை உருவாக்கப் போவதில்லை. இது அதைவிடக் கூட எண்ணிக்கையைக் கொள்ளுகின்றது. உதாரணமாக, எங்களுடைய சமூகத்தில் இப்பொழுது பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சனத்தொகையில், வறுமையான பெண்கள் இருக்கிறார்கள். வறுமையான குடும்பங்களில் இருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சிறுவயதில் பாலியல் துர்ப்பாவனைக்கு ஆளான குற்றவாளிகள். விசேடமாக இவர்கள் தகாத பாலுறவில் ஈடுபட்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வீடிழந்தவர்களாக இருக்கின்றார்கள். தகாத பாலுறவு என்பது ஒரு பாலியல் தொழிலுக்குப் போகப்போகும் பெண்ணுக்கு அதனை தயார்படுத்தும் இடங்களாக அமைகின்றது. திட்டமிடப்படாமலேயே. எனவே நீங்கள் தயார்ப்படுத்துவதற்கு எங்கேயும் அனுப்பத் தேவையில்லை. அவள் அங்கேயே இருக்கின்றாள். அப்படியான சூழ்நிலையில்தான் வாழுகின்றாள். அவள் அங்கு பயிற்றப்பட்டவளாகின்றாள். இந்தப் பயிற்றுவிப்பு குறிப்பிடப்படவேண்டியதும் முக்கியமானதும் ஆகும். அவளுடைய சொந்த உடலிற்கு எந்தவிதமான உண்மையான எல்லைகளையும் வைத்திருக்காமல் இருப்பது என்பது. தான் பாலியல் இச்சைகளைத் தீர்ப்பதற்கு மட்டும்தான் பெறுமதியானவள் என்று விளங்கிக்கொள்வது. ஆண்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு என்ன வழி? பாலியல் குற்றவாளியான ஆண் அதனைக் கற்றுக் கொடுக்கிறான் சிறுவயதிலேயே. ஆனால் அதுவும் போதுமானதல்ல. ஏனெனில் அவள் வீட்டைவிட்டு ஓடுகிறாள். பிறகு தெருக்களில் வீடில்லாது திரிகிறாள். பெரும்பாலான பெண்களுக்கு இப்படியான ஆதரவின்மைகளின் ஏதோ ஒரு வடிவத்தை தரிசித்தல் நடைபெற நேரிடுகின்றது.

பெண்களிற்கு வதிவிடமின்மை என்பதன் கருத்து என்ன என்பது பற்றிக் கடந்த சில வருடங்களாக நிறைய யோசித்திருக்கிறேன். நான் நினைக்கிறேன் இது, ஒரு முன் நிபந்தனை. தகாத பாலுறவுடனும் வறுமையுடனும் கூடிய பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படக் கூடிய பெண்களைக் கொண்ட ஒரு சனக்கூட்டத்தை உருவாக்குவதற்கு. ஆனால் இதற்கு ஒரு பரந்த கருத்தும் உள்ளது. வீடொன்றிருக்கும் எந்தப் பெண்ணைப் பற்றியாவது நீங்கள் நினைத்துப் பாருங்கள். 18 வயதை அடைவதற்கு முன்பு மூன்று பெண்களுக்கு ஒரு பெண் என்ற வீதத்தில் பாலியல்ரீதியான துர்ப்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படப்போகும் ஒரு சமூகத்தில் எந்த ஒரு பெண்பிள்ளையும் பாதுகாப்பாக இருக்காது.

1. அண்மையில் கிடைத்த தரவுகளில் இருந்து திருமணமான பெண்களில் இரண்டு பேருக்கு ஒருவர் ஏற்கனவே தாக்கப்பட்டிருக்கிறார் அல்லது தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார். இப்படியான ஒரு சமூகத்தில் எந்த ஒரு மனைவியும் பாதுகாப்பாக இல்லை.

2. நாங்கள் வீட்டை உருவாக்குபவர்கள், நாங்கள் இந்த வீடுகளை உருவாக்குகின்றோம். ஆனால் எங்களுக்கு அதில் ஒரு உரிமையும் இல்லை. நான் நினைக்கிறேன். பால்வினைத் தொழில் என்பது ஒரு உருவணி என்று கொள்ளலாம் என்று சொல்வதில் பிழைவிட்டிருக்கிறோம் என்று. எல்லாப் பெண்களுக்கும் நடைபெறும் ஒன்று என்பதில்.

நான் நினைக்கிறேன் இருப்பிடமின்மை என்பதுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் அந்த உருவணியாக இருக்கமுடியும் என்று. நான் நினைக்கிறேன் பெண்கள் பாதுகாப்பான ஒரு இடத்தை உடைமையாகக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள் என்று. அவளுக்கு மட்டும் சொந்தமான, ஒரு இடம் அங்கு அவளுக்கு தன்னுடைய சொந்த உடலின்மீது வெறுமனே இறைமையற்றிருப்பது. ஆனால் அவளுடைய யதார்த்த சமூக வாழ்க்கையில் இறைமை உடையவளாக இருக்கிறாள், இது குடும்ப வாழ்க்கையாக இருந்தாலும் சரி நண்பர்களுடனாக இருந்தாலும் சரி. பால்வினைத் தொழிலில் ஒரு பெண் வீடில்லாதவளாக தொடர்ந்து இருக்கிறாள்.

ஆனால் பால்வினைத் தொழிலின் நிபந்தனைபற்றி மிகக் குறிப்பிடத்தக்க ஏதோ இருக்கின்றது. நான் அதுபற்றி உங்களுடன் உரையாட முயற்சிக்கிறேன்.

இந்த உரையாடல்களில் நான் ஒன்றை அழுத்திக் கூற விரும்புகின்றேன். இந்த பால்வினைத் தொழில் பற்றிய விவாதங்களில் நாங்கள் எல்லோருமே மொழியைப் பார்க்கின்றோம். நாங்கள் எல்லோருமே எங்களுக்குத் தெரிந்தவற்றை சொல்வதற்கு, வழிகளைத் தேடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். ஒரு நடுத்தர வர்க்கம்பற்றிய ஊகம் ஒன்று உள்ளது. அதாவது எல்லாவற்றையும்பற்றி அறிந்து வைத்திருக்கும் ஒருவருக்கு அறிதல் பிரயோசனமானது. அநேகமான பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களுக்கு, ஒன்றுமறியாத ஒருவருக்கு அறிதல் பிரயோசனமானது என்ற ஊகமும் உள்ளது. உண்மையில் இதில் எதுவும் உண்மையில்லை. இதில் எது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதென்றால், பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களுக்குத் தெரிந்ததை நாங்கள் அறிந்து கொள்ள முயற்சிப்பது. ஏனெனில் அது மிகப்பெரிய விழுமியத்தைக் கொண்டது. இது உண்மை. அத்துடன் இவைகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள். இது ஒரு அரசியல் காரணத்திற்காக மறைக்கப்பட்டுள்ளது. இதை அறிவதற்கு, அறிவதற்கு அண்மையாக நெருங்கி வருவது, எங்கள் எல்லோரின்மீதும் குந்தி இருக்கும் ஆண்மேலாதிக்க கட்டுமான அமைப்பை எப்படி உடைப்பதென்பதை அறிந்து கொள்வதற்கு.

நான் நினைக்கின்றேன், பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் ஒரு குறிப்பிட்டளவு தாழ்வுச் சிக்கலை அனுபவிக்கின்றார்கள் என்று. பொதுவாகப் பெண்கள் அசுத்தமானவர்கள் என்று கொள்ளப் படுகின்றார்கள். ஆம், விடயங்கள் மிகமோசமாகும்பொழுது, பயங்கரமான விடயங்கள் நடைபெறும்பொழுது, ஒரு பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படும்பொழுது, ஒரு பெண் தாக்கப்படும்பொழுது, எங்களில் பலர் இதை ஒரு உருவணியாக உணர்கிறோம். ஆம், நீங்கள் உங்களுடைய நடுத்தரவர்க்க வாழ்க்கையின் அடியில், ஏனெனில் நீ ஒரு பெண் அதனால் அசுத்தமானவள் என்பதற்கு நிறைய அனுமானங்கள் உள்ளன. ஆனால் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண், ஒரு அசுத்தமான பெண் என்பதற்கு இலக்கணமாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இங்கு ஓர் உருவணியும் இல்லை. அவள் அசுத்தங்களினால் மூடப்பட்ட போர்க்கப்பட்ட ஒரு பெண், எப்பொழுதும் அவளுக்கு மேல் இருந்த ஒவ்வொரு ஆணும் அவனுடைய ஒரு சிறு துண்டை அவளிடம் விட்டுவிட்டுப் போயிருக்கிறான். அவளும் ஆண் மேலாதிக்கத்தின் கீழ் ஒரு முற்றான பாலியல் தொழிற்பாடு கொண்ட ஒரு பெண். எனவே பாலியல் என்பது அசுத்தமானது என்று நம்புபவர்கள் அனைவரும் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட



பெண்கள் அசுத்தமானவர்கள் என்று நம்புகிறார்கள்.

பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண், எப்படியாயினும், இந்த அசுத்தத்தில் நிலையான பொருள் அல்ல. அவள் பரவக்கூடியவள். ஏனெனில் ஒரு ஆண், பிறகு ஒரு ஆண், அதற்குப் பின் ஒரு ஆண், இன்னும் பிறகு ஒரு ஆண். அவளிடம் வந்து பின் நீங்கிவிடுகின்றனர். உதாரணமாக எயிட்ஸ் பற்றிய விவாதங்களில் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள்தான் இந்த நோய்த் தொற்றுதலின் மூலகாரணியாகப் பார்க்கப்படுகின்றார்கள். இது ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம். பொதுவாக ஆண் பெண்களுடன் சம்பந்தப்பட்ட, பாலியலுடன் சம்பந்தப்பட்ட பிழையான, உழுத்த விடயங்கள் எல்லாவற்றிற்கும் மூல உற்பத்தியாக பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண் பார்க்கப்படுகின்றாள். அவள் தண்டனைக்குரிய ஒருத்தியாக பார்க்கப்படுகின்றாள். அவள் "செய்யும" விடயத்திற்கு என்றில்லாமல், "செய்யும்" என்பதை மேற்கோள் குறிக்குள் இடுகின்றேன். ஏனெனில் பெரும்பாலாக அவளுக்கு செய்யப்படுவது - ஆனால் ஏனெனில் - அவள் அப்படி இருப்பதால்.

அவள் உண்மையில் இறுதியில் பெயரற்ற பெண். அப்படி இருப்பதை ஆண்கள் விரும்புகிறார்கள். அவள் தன்னுடைய 24வது பொய்ப் பெயருக்குள் இருக்கும் பொழுது - போர்னோகிராபிக்காரர்கள் வியாபாரத்திற்காக இந்த வாரம் என்னென்ன பெயர்களை உபயோகிக்கின்றார்களோ அத்தனையும் அவள் பெயர்கள். அவளுடைய பெயரின்மை ஆணுக்குச் சொல்கின்றது என்னவென்றால் அவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் எவரும் இல்லை என்று. அவளுடன் எந்த கொடுக்கல் வாங்கலும் வைக்கத் தேவையில்லை என்று. அவளுக்குப் பெயரே இல்லை. அவள் யாரென்று நான் நினைவில் வைத்திருக்கத் தேவையில்லை. எனக்கு எந்த விதத்திலும் அவள் விசேடமானவள் இல்லை. அவள் ஒரு பெண்ணுடலைக் கொண்ட ஓர் உருவம். அவள் இப்படி உணர்ந்து கொள்ளப்படுகிறாள், நடத்தப்படுகிறாள் - நீங்கள் இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இது யதார்த்தமானது - யோனியில் இருந்து வரும் வழுவழுப்பான பொருள். அவள் அசுத்தமானவள். பல ஆண்கள் அங்கு சென்றிருக்கிறார்கள். நிறைய விந்துக்கள். யோனியில் இருந்து வெளியேறும் வழுவழுப்பான பொருள். உடலின் உள்ளேயானது. இது யதார்த்தமானது. இதுதான் நடக்கின்றது. அவளுடைய குதம், குதவாயிலான உறவின் மூலம் அநேகமாகக் கழிந்து விடுகிறது. அதிலிருந்து இரத்தக் கசிவு ஏற்படுகின்றது. அவளுடைய வாய் விந்துக்களின் ஏந்துகலனாக உள்ளது. இவ்வாறுதான் அவள் நடத்தப்படுகின்றாள். உணர்கிறாள். எல்லாப் பெண்களும் புனிதமற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஏனெனில் மாதந்தோறும் வெளியேற்றப்படும் குருதியினால். ஆனால் அவள் வேறு நேரங்களிலும் இரத்தம் சிந்துகின்றாள். அவள் இரத்தம் வடிக்கிறாள். ஏனெனில் அவள் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றாள். அவள் இரத்தம் சிந்துவதுடன் ஊமைக்காயங்களையும் கொண்டிருக்கிறாள்.



ஆண்கள் பெண்களை பால்வினைத் தொழிலில் பாவிக்கும்போது பெண்ணினுடைய உடம்பில் அதீதமான வெறுப்பைக் காட்டுகிறார்கள். அந்த உடம்பு இந்தப் பூமியில் இருக்கும் எல்லாவற்றையும் போலவே தூய்மையானது. ஒரு பூரணமான மனித வாழ்வு என்பது ஒரு சில பாலியல் வாயில்களாக மட்டும் குறுக்கப்படுவது மிக ஆழமான மோசமான அவமதிப்பு. அவன் ஒரு ஆண். தான் விரும்பிய எதை வேண்டுமானாதலும் செய்யலாம். இந்தக் கூட்டத்தில் உள்ள ஏனைய பெண்கள் உங்களுக்கு இதை ஏற்கனவே சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் புரிந்து கொள்ளும்படி நான் உங்களைக் கேட்கிறேன். நீங்கள் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் உங்களை விரும்புகின்றேன். அது உண்மை. அவன் தான் விரும்பிய எதை வேண்டுமானாலும் செய்யலாம். அவளுக்கு செல்வதற்கு எந்த ஒரு இடமும் இல்லை. முறைப்பாடு செய்வதற்கு எந்தப் பொலிஸ்காரனும் இல்லை. அந்தப் பொலிஸ்காரனும்கூட எந்த ஒரு ஆணையும் போல இதைச் செய்து கொண்டிருக்கும் ஒருவனாக இருக்கக்கூடும். அவள் சென்று சந்திக்கும் வழக்கறிஞன் கூட அன்பாக ஒரு கட்டணத்தை எதிர்பார்ப்பான். அவளுக்கு மருத்துவரீதியிலான உதவி தேவைப்படும்போது. அதுவும் இன்னொரு முன்பு கண்ட ஆண்களைப் போல் ஒருவனாக இருக்கும். இதனை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? அவள் இலக்கணரீதியாக எதுவுமற்றவள். இப்பொழுது எங்களில் பலர் நாங்கள் எதுவுமற்றதாக உணரும் பல அனுபவங்களைக் கண்டிருக்கிறோம். அல்லது எங்களை எதுவுமற்றதாக அல்லது அதற்கும் கீழான பெறுமதியற்றவளாக கருதுகிறார்கள் என்று உணர்த்தப்பட்டிருக்கிறோம் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணுக்கு தான் எதுவுமில்லை என்று உணர்வது அல்லது உணர்த்தப்படுவது அன்றாட வாழ்க்கை அனுபவம்.

இடையில், அவன் இங்கு வீரன், கதாநாயகன். அவளுடைய உடலைப் பாவிப்பதனூடாக ஏனைய ஆண்களுடன் இணைப்புச் செய்வதில் அவன் எப்பொழுதும் காரியமாக இருக்கிறான். அவன் அங்கு இருப்பதற்குரிய காரணங்களில் ஒன்று, அவனுக்கு முன்பாக ஏற்கனவே பல ஆண்கள் அங்கு வந்திருக்கின்றார்கள். அவனுக்குப் பின்னும் சில ஆண்கள் வருவார்கள். இது ஒரு கொள்கையல்ல. கோட்பாடல்ல. இதை வாழும்பொழுது இது உண்மை என்பதை நீங்கள் காணலாம்.. ஆண்கள் பெண்களின் உடலை பால்வினைத் தொழிலிலும் கூட்டுப் பாலியல் பலாத்காரத்திலும் பாவிக்கின்றார்கள். ஒருவருடன் ஒருவர் பரிவர்த்தனையை ஏற்படுத்துவதற்கு. தங்களிடம் பொதுவாக என்ன உள்ளதென்பதை உணர்த்துவதற்கு அவர்களிடம் என்ன பொதுவாக இருக்கின்றதென்றால் அவர்கள் அவள் இல்லை என்பதுதான். எனவே அவள். ஆண்மையினதும் அவனுடைய அதியுச்ச பாலியல்ரீதியான செயற்பாட்டினதும் வாகனமாக ஆகிறாள். அவன் அவளுக்கு இதனை வார்த்தைகளில் சொல்கின்றான். அவளை நோக்கிய பாலியல்ரீதியிலான சொல்லாடல்கள் செயற்பாடுகளை அவன் ஏனைய ஆண்களுடன் பகிர்ந்து கொள்கின்றான். அவன் பாவிக்கும் அவ்வளவு கெட்ட வார்த்தைகளும் அவள் எப்படி (அவள் எது) என்பதை அவளுக்கு எடுத்துரைக்கும் வாரத்தைகள்தான். (அத்துடன் பால்வினைத் தொழிலுக்கு ஆளாக்கப்பட்ட எந்தப் பெண்ணினதும் பார்வையில் இருந்து - அவள் அந்தப் பார்வையைத் தெரிவிப்பதாய் இருந்தால், அதை அநேகமாக அவள் செய்யமாட்டாள் - கெட்ட வார்த்தைகளைப் பாவிப்பதற்கான உரிமைக்காக ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலைஞர்கள் பெறும் கூலி என்பது இந்த உலகத்தில் மிகவும் இழிந்த ஊனமான பகிடிகள். ஏனெனில் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணை நோக்கி இந்தக் கெட்ட வார்த்தைகளில் ஒன்றை பாவிக்கும் எந்த ஆணையும் தடுப்பதற்கு எந்தச் சட்டமும் இல்லை, எந்த விதியும் இல்லை, எந்த அடையாளமும் இல்லை, எந்த உரிமையும் இல்லை. இந்தச் சொற்கள் அவை கொண்டிருக்க வேண்டியதெனக் கருதப்படும் கொடுக்குகளைக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் உண்மையில் அவை அவளை விபரிக்கின்றன.) அவள் விலைபோகக் கூடியவள். அவளுக்குப் பெயரில்லை, இது விசித்திரமானது. அவள் ஒரு வாய், ஒரு யோனி, ஒரு குதம் - அவளைப் போல் வேறு பலர் இருக்கும் பொழுது, அவளை குறிப்பாக யாருக்குத் தேவைப்படுகின்றது? அவள் இறக்கும்பொழுது யார் அவளின் இழப்பை உணருவார்கள்? யார் அவளுக்காக அழுவார்கள்? அவளைக் காணவில்லை, யாராவது போய் அவளைத் தேடுவார்களா? நான் கேட்கிறேன், அவள் யார்? அவள் எவருமில்லை. உருவணியினால் எவருமில்லையல்ல. இலக்கணத்தினால் எவருமில்லை.

இப்பொழுது இன அழிப்பின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், உதாரணமாக நாசிகள் யூதர்களை உண்ணிகள் என்று அழைத்தார்கள். நாங்கள் அவர்களை நிர்மூலமாக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அமெரிக்காவின் உள்நாட்டுமக்களைப் படுகொலை செய்த வரலாற்றில், கொள்கையை உருவாக்கியவர்கள் சொன்னார்கள்: அவர்கள் உண்ணிகள், அவர்களைக் கொல்லுங்கள் என்று. கதரின் மக்கினென் முதலில் "இனச் சுத்திகரிப்பு: பால்வினைத் தொழிலாளர்களைக் கொலை செய்தல்" பற்றிப் பேசினார். அவர் சொல்வது சரி. பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள், இன அழிப்புக்கு உபயோகப்படுத்தப்படக்கூடிய பெண்களாக இருக்கின்றார்கள். பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவசரகால நிலைமை போன்றதொரு நிலைக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதனை நாங்கள் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. ஏன் நாங்கள்? அவர்கள் எவருமாக இல்லை. ஒரு ஆண் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணைக் கொலைசெய்யும்போது அவன் தான் செய்தது சரியென்று உணருகின்றான். அது ஒரு நேர்மையான கொலை. அவன் ஒரு அழுக்குத் துண்டத்தை அப்புறப்படுத்திவிட்டான். அவன் நடந்து கொண்டது சரிதான் என்று சமூகம் அவனுக்குச் சொல்கிறது.

அத்துடன் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களினால், ஒரு குறிப்பிட்ட வகையான அநாகரிகத் தன்மை உணரப்படுகின்றது. ஆம் எல்லாப் பெண்களும் பண்டங்களாக உணரப்படுகிறார்கள். எல்லாப் பெண்களும் பண்டங்களாக உபயோகப்படுத்தப்படுகிறார்கள். ஆனால் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் ஒரு குறிப்பிட்ட வகையான பொருளைப்போல் நடத்தப்படுகின்றார்கள். அதாவது, ஒரு இலக்கு. ஒரு இலக்கு என்பது எந்தப் பழைய பொருளுமல்ல. வீட்டைச்சுற்றி இருக்கும் சில பொருட்களில் நீங்கள் விசேட கவனம் செலுத்துவீர்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு இலக்குக்குப் பின்னால் போகிறீர்கள். நீங்கள் அதைச் சரியாக எய்கிறீர்கள். அப்படித்தான் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்ணும். இது உங்களுக்கு எதைச் சொல்லவேண்டும் என்றால், ஒரு ஆண் தான் தேடும்பொழுது என்ன செய்கிறான், எதைக் கண்டு பிடிக்கிறான், அதில் எவ்வளவு பலாத்காரம் இருக்கின்றது என்று. அதற்கு பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணைப் பாவிக்கிறான்.

இங்கு நான் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, இங்கு இருக்கும்பொழுது உணரும் முரண்பாடுகளில் ஒன்று என்னவென்றால், நான் கூறும் விடயங்களில் ஏதாவதை சிறிதளவாயினும் சுருக்கமாகக் கூறுவது, உடனடியாக ஒவ்வொருவருடைய மனத்தையும் மூல விடயத்தில் இருந்து அகற்றிச் சென்று விடுமோ என்று அச்சம் கொள்கிறேன். இங்குள்ள அடிப்படையான விஷயம் என்னவென்றால் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண்களுக்கு என்ன நடக்கின்றது? பால்வினைத் தொழில் என்றால் திட்டவட்டமாக என்ன? என்பதுதான். இந்தக் கவனிப்புப் பிழை நடந்துவிடும் அபாயத்தை உணருகிறேன். ஏனெனில் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்ணை கு... செய்வதன் அவசியம் கொண்ட ஆணைப்பற்றி நீங்கள் சிந்திப்பதற்கு முன்வந்தாலன்றி, நீங்கள் பால்வினைத் தொழிலைப்பற்றி சிந்திக்கமுடியாது. அவன் யார்? அவன் என்ன செய்கின்றான்? அவன் எதை விரும்புகின்றான்? அவனுக்கு என்ன தேவைப்படுகின்றது? அவன்தான் எல்லோரும்.

நீங்கள் திங்கட்கிழமை ஒரு மணித்தியாலத்தை ஒதுக்கவேண்டும் என்று விரும்புகின்றேன். உங்களுடைய சர்வகலாசாலைக்குக் குறுக்கே நடந்து செல்லும்படி வேண்டுகின்றேன். ஒவ்வொரு ஆணையும் உற்று நோக்கும்படி வேண்டுகின்றேன். அவனுடைய ஆடைகளை உங்கள் கண்களால் நீக்கும்படி கேட்கின்றேன். அவன் ஒரு விறைப்பான துளையைக் கொண்டவனாக இருப்பதாக பார்க்கும்படி வேண்டுகின்றேன். அவன் ஒரு பெண்ணின்மேல் அமர்ந்து, அவர்களுக்கு அருகில் இருக்கும் மேசைமீது பணத்துடன் இருக்கும் காட்சியை உங்கள் மனக்கண்முன் கொண்டு வரும்படி கேட்கின்றேன். இந்தச் சட்டக் கல்லூரியின் தலைவர், பேராசிரியர்கள், ஆண் மாணவர்கள், எல்லோரையும் இப்படிப் பார்க்கும்படி வேண்டுகின்றேன். நீங்கள் அவசரகால அறைக்குச் செல்வதாக இருந்தால்கூட அங்கும் இதனைச் செய்ய வேண்டுகின்றேன். உங்களுக்கு மாரடைப்பு இருந்தால் அங்கு உங்களுக்குச் சேவை செய்ய வரும் வைத்தியரிடம் இதனைச் செய்து பார்க்க வேண்டுகின்றேன். ஏனெனில் இது பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் வாழும் உலகம். உங்களுக்கு என்ன நடக்கின்றதென்பதைப் பொருட்படுத்தாத உலகம் இது. உங்களிடம் இருந்து ஒரு துண்டைக் கேட்கும் இன்னுமொரு ஆண் வரக்கூடும். உனக்கு அவனிடம் இருந்து ஏதாவது தேவைப்பட்டால் நீ அவனுக்கு அந்தத் துண்டைக் கொடுக்க வேண்டும்.

பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண்களைப் பாவிக்கும் ஆண்கள் தாங்கள் ஏதோ பெரிய கெட்டித்தனமானவர்கள் என்று எண்ணுகிறார்கள். அவர்கள் தங்களைப்பற்றி மிகவும் பெருமையாக எண்ணுகின்றார்கள். - அவர்கள் தங்களைப்பற்றி பீற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் நாவல்கள் எழுதுகின்றார்கள். அவர்கள் பாடல்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதுகின்றார்கள், அவர்கள் சட்டங்கள் இயற்றுகின்றார்கள். தாங்கள் கதாநாயகத் தன்மைகொண்ட தேடுதல் உள்ளவர்கள் என்று எண்ணுகின்றார்கள். ஏன் அவர்கள் அப்படி நினைக்கின்றார்கள்? ஏனெனில் அவர்கள் காட்டுமிராண்டிகள். வெளியே சென்று "அழுக்கான" ஒரு பெண்ணுடன் உரசுவர். பின்பு அதுபற்றிப் பேசுவதற்காக வாழ்வர். கடவுளே தொலைந்து போ. அவர்கள் அது பற்றிப் பேசுவதற்காக வாழ்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக. உண்மையாக எல்லா நேரத்திலும் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது ஒரு பொருட்டல்ல. அவளுக்கு என்ன தீங்கை அவர்கள் இழைத்திருக்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல- அவர்கள் அதுபற்றி சொல்வதற்காக வாழ்கிறார்கள். அதுபற்றிப் பாடுவதற்காக வாழ்கிறார்கள். அதைப்பற்றி எழுதுவதற்காக வாழ்கிறார்கள். அதைப்பற்றி தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக வாழ்கிறார்கள். அது பற்றித் திரைப்படம் எடுப்பதற்கு வாழ்கிறார்கள். நான் உங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இந்த ஆண்கள் யாவரும் கோழைகள். இவர்கள் காட்டுமிராண்டிகள். இவர்கள் முட்டாள்கள். இவர்களால், தாங்கள் எதைச் செய்ய நினைகக்கிறார்களோ அதனைச் செய்வதற்கு முடியும். ஏனெனில் அவர்களுக்குப் பின்னால் ஆண் என்ற ஒரு வர்க்கத்தின் அதிகாரம் அவர்களிடம் இருக்கின்றது. அதை அவர்கள் பெறுகின்றார்கள். ஏனெனில் அவர்கள் பெண்களுக்கு எதிராக பலத்தை உபயோகிக்கின்றார்கள். கோழை என்றால் என்ன என்பதற்கு உங்களுக்கு ஒரு வரைவிலக்கணம் தேவை என்றால் அது இதுதான். அதாவது ஒரு வரக்கத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் தள்ளி விழுத்தி அவர்களின்மேல் நீங்கள் நடந்து செல்வது. ஆண்களுக்குத் தேவையான அதிகாரத்தை அவர்கள் வைத்திருக்குமாறு, பெண்களை அவர்கள் விரும்பியபடி பாவிக்குமாறு சமூகங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. சமூகங்கள் வித்தியாசமான வழிகளில் ஒழுங்கமைக்கப்பட முடியும். எனினும், பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் ஒரு கூட்டம் பெண்களை உருவாக்கும் அது. உதாரணத்துக்கு, அமெரிக்காவின் பெண்கள் வறியவர்கள், அதிகளவு பெண்கள் தகாத பாலுறவுக் குற்றவாளிகள், பெண்கள் வீடற்றவர்கள். ஆசியாவின் சில பகுதிகளில் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருப்பதனாலேயே 6 மாதக் குழந்தைகள் அடிமைகளாக விற்கப்படுகிறார்கள். அப்படித்தான் அவர்கள் அங்கு செய்கிறார்கள். ஒரே இடத்தினை வந்து சேர்வதற்கு ஒரேமாதிரியாகத்தான் செயற்படவேண்டும் என்பதில்லை. ஒவ்வொரு இடத்திலும் அதற்கு மாதிரியான செயற்பாடுகள் இருக்கின்றன.

ஆண்மேலாதிக்கம் என்பதன் கருத்து என்னவென்றால், சமூகமானது தனக்குத் தேவையான எந்த விதத்திலும் பால்வினைத் தொழிலுக்கு பெண்கள் குழாமை உருவாக்குகின்றது. ஆண்கள் முதன்மையாக உச்சியல் இருப்பதற்கு, தங்களுக்குத் தேவையானதை வைத்திருப்பதற்கு, தங்களைப் பெரியவர்களாக உயர்ந்தவர்களாக உணருவதற்கு, இலக்கணத்தில் உருவகத்தில் எல்லா வழிகளிலும். இவைகளிற்குப் பிறகும் நாங்கள் அவர்களை மனிதராக இருப்பதற்கான ஒரு மாதிரியாகக் கொள்ளுகின்றோம் அல்லது ஒரு உதாரணமாகக்




கொள்ளுகின்றோம். நாங்கள் சொல்கின்றோம் நாங்கள் மனிதராக இருக்க விரும்புகின்றோம் என்று. நாங்கள் சொல்கின்றோம் அவர்கள் எங்களை மனிதர்களாக நடத்தவேண்டும் என்று விரும்புவதாக. நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் மனிதம் என்ற சொல்லை நாங்கள் உருவணியாகப் பாவிக்கின்றோம். ஆண்கள் எப்படிச் செயற்படுகின்றார்கள் என்பது குறித்து நாங்கள் பேசவில்லை. நாங்கள் சொல்லுவது, ஒரு மனித உயிரி என்றால் என்ன என்பது பற்றி நாங்கள் எண்ணும் ஒரு கருத்து, ஒரு கனவு. எங்களிடம் இருக்கும் ஒரு பார்வை. . நாங்கள் சொல்கின்றோம் அவர்கள் எங்கள்மேல் ஏறி மிதிப்பதை நாங்கள் விரும்பவில்லை. அத்துடன் நாங்கள் முழுமனதோடு சொல்கின்றோம் ஒரு மனித உயிரி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர்களுடைய தராதரம் நன்கு போதாது. ஏனெனில் அவர்கள் எங்களிற்கு என்ன செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். நாங்கள் அவர்களைப்போல இருக்க முடியாது. ஏனெனில் அவர்களைப் போல் இருப்பதென்றால் அதன் கருத்து அவர்கள் ஒரு கூட்டம் சனங்களைப் பாவிப்பதுபோல் சனங்களைப் பாவிப்பது. - ஒன்றின் முக்கியத்துவத்தை அல்லது அடையாளத்தை நிலை நாட்டுவதற்காக. நாங்கள் ஆண்களைப்பற்றி மனித உயிரிகள் என்று பேசும்பொழுது அவர்கள் எங்களுக்கு பகுதியாக கற்பனைக் கதைகளில் வரும் உருவங்களாகத்தான் தெரிகிறாரகள். நாங்கள் உண்மையில் ஆண்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்று என்பது குறித்துப் பேசவில்லை. நாங்கள் பேசுகின்றோம், நாகரிகத்தின் மத்தியஸ்தர்களாக ஆண்கள் கருதப்படுவதைப் பேசியிருக்கும் பழைய கதைகள்பற்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த அரசியல் இயக்கமானது, நாங்கள் வாழ்க்கையில் ஒருவருடன் ஒருவர் கொண்டிருக்கும் மனிதப் பண்புகள் என்று எதை விளங்கிக் கொகிறோமோ, அது இந்த ஆண்கள் யதாரத்தத்தில் நடந்து கொள்ளும் பண்புகள் கொண்ட தன்மையல்ல என்பதைப் புரிந்துகொண்டு செயற்பாட்டில் ஈடுபடுகின்றது.

ஆண் முன்னிலைப்படுத்தப்பட்ட சமூகம் ஒன்றில் பால்வினைத் தொழில் என்ன செய்கின்றதென்றால், தனக்குக் கீழ் அடித்தளம் இல்லாத ஒரு சமூக அடித்தளத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றது. பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் அடித்தளத்தில் இருக்கிறார்கள். எல்லா ஆண்களும் அதற்கு மேல் இருக்கிறார்கள். பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஆண்கள் கூட பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களினாலும் பெண்பிள்ளைகளினாலும் அமைக்கப்பட்ட இந்த அடித்தளத்திற்கு மேல்தான் இருப்பார்கள். இந்தச் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்கள் பால்வினைத்தொழிலில் ஈடுபடுத்தப்படுவது என்னும் காரணியினால் நனமையடைகிறார்கள். இலாபம் பெறுகின்றார்கள். அந்த ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணைப் பாவிக்கின்றானோ இல்லையோ. இது சொல்லப்பட்டிருக்கக்கூடாது ஆனால் இது சொல்லப்பட்டிருக்கவேண்டும்: ஆண் முன்னிலைப் - படுத்தலில் இருந்துதான் பால்வினைத் தொழில் உருவாகின்றது. அது பெண்ணின் இயல்பான தன்மையில் இருந்து வரவில்லை. இது இருந்து கொண்டிருக்கும் ஒரு அரசியல் யதார்த்தம். ஏனெனில் ஒரு மக்கள் கூட்டம் இன்னொரு மக்கள் கூட்டத்தின்மேல் தொடர்ச்சியாக அதிகாரத்தைப் பேணுகின்றது. இதை நான் அடிக்கோடிடுகின்றேன். ஏனென்றால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது ஆண் ஆதிக்கம் குரூரமானது. நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது, ஆண் ஆதிக்கம் அழிக்கப்படவேண்டும். ஆண் ஆதிக்கம் முடிவுக்கு வர வேண்டிய தேவையுள்ளது. வெறும் சீர்திருத்தம் என்பதல்ல, வெறும் கொஞ்சம் நல்லதாக ஆக்குவதாக அல்ல, சில பெண்களுக்கு மட்டும் ஓரளவு நல்லதாக ஆக்குவதாக என்பதல்ல. நாங்கள் இங்கு ஆண்களின் பாத்திரம் என்ன என்பதை நோக்க வேண்டிய அவசியமுள்ளது. உண்மையிலேயே அதனைப் பார்ப்பது, அதனைப் புரிந்து கொள்வது, அதைக் கற்றுக் கொள்வது - அதாவது பெண்களை வறுமைக்குள் வைத்திருக்கும், பெண்களை வீடற்றவர்களாக வைத்திருக்கும். பெண்பிள்ளைகளை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தும், அதாவது பால்வினைத் தொழிலாளப் பெண்களை உருவாக்கும், பால்வினைத் தொழிலுக்குப் பாவிக்கப்படும் பெண்கள் கூட்டத்தை உருவாக்கும் - இவைகளில் ஆண்களின் பாத்திரத்தைப்பற்றி நாங்கள் உற்று நோக்கவேண்டிய தேவை உள்ளது. மேலும் பால்வினைத் தொழிலை இன்புற்றிருக்கும் ஒரு கற்பனையானதாகக் காட்டுவதில், கலாச்சாரரீதியாகப் பெண்களைக் காணாமற் போகச் செய்யும் விலை கொடுத்தலை செய்வதில், இந்தச் சமூகத்தின் அதிகாரத்தை - பொருளாதார ஆதிக்கம், கலாச்சார ஆதிக்கம், சமூக ஆதிக்கம், பயன்படுத்தலில், அமைதியை - காயம்பட்ட பெண்களின் அமைதி, பாதிக்கப்பட்ட பெண்களின் அமைதி, பாவிக்கப்பட்ட பெண்களின் அமைதி - உருவாக்குவதில், இப்படியானவற்றில் ஆண்களின் பாத்திரம் என்ன என்பது பற்றி நோக்க வேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது.

பெண்களைக் குரோதமாக எண்ணும் வகையை உருவாக்குவதில், பெண்களுக்கு எதிரான தப்பபிப்பிராயங்களை உருவாக்குவதில், பெண்களின்மீது நடத்தப்படும் பலாத்காரங்களுக்கு கலாச்சாரத்தை ஒரு பக்கபலமாக, அதைத் தூக்கிவிடக் கூடியதாக, அதை நியாயப்படுத்துவதாக உபயோகிப்பதில் ஆண்களின் பாத்திரம் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய தேவை எங்களுக்கு உள்ளது. தாங்கள் மட்டுமே வைத்திருக்கக்கூடிய சுதந்திரம் பற்றிய ஒரு அரசியல் கருத்தியலை உருவாக்குவதில் ஆண்களின் பாத்திரம்பற்றி நாம் நோக்க வேண்டிய தேவை உள்ளது. இது விசித்திரமானதாக இல்லையா? சுதந்திரம் என்பது என்ன? இரண்டாயிரம் ஆண்டு கால சம்பாஷணைகள். அதுவும் எப்படியோ எங்களை வெளியில் தள்ளிவிடுவதில் முயன்று வெற்றி கண்டுள்ளது. அவர்கள் கொண்டிருந்த விசித்திரமான தங்களுக்குத் தாங்களே பேசும் ஓரங்கப் பேச்சுத்தான் இங்கு செல்லுபடியாகின்றது. பெண்களை இழிவாகக் கருதும் அரசியற்கட்டுமான அமைப்புகளை உருவாக்குவதில் - அதாவது பால்வினைத் தொழிலை உருவாக்குவதில், அதனைப் பாதுகாப்பதில் - எப்படிச் சட்ட அமுலாக்கம் இதனைச் செய்கிறது என்பதில், எப்படிப் பத்திரிகை எழுத்துக்கள் இதனைச் செய்கின்றன என்பதில், எப்படிச் சட்டத்தரணிகள் இதனைச் செய்கின்றார்கள் என்பதில், இந்த ஆண்களின் பாத்திரம் என்ன என்பதை நாங்கள் நோக்க வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இந்த எல்லா ஆண்களும் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களை எப்படிப் பயன் படுத்துகிறார்கள், அப்படிச் செய்வதன்மூலம் பெண்களின் மனித கௌரவத்தை எவ்வாறு அழிக்கிறார்கள் - இந்த வழிகளை நாங்கள் அறிவதற்கான அவசியம் உள்ளது.

இந்தப் பிரச்சினைக்கான பரிகாரம் அரசியல்ரீதியானது. அதன் கருத்தானது ஆண்களிடம் இருந்து அதிகாரத்தை அகற்றுவது. இது யதார்த்தமான விடயம். இது முக்கியமான விடயம். அவர்களுக்கு உண்மையில் இந்த அதிகாரம் அதிகப்படியாக உள்ளது. அவர்கள் அதனைச் சரியாகப் பாவிப்பதில்லை. அவர்கள் கொடூரச் செயல்களைப் புரிபவர்கள். அவர்கள் எதனைத் தங்களது கைகளில் வைத்திருக்கின்றார்களோ அதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. அதாவது அவர்களிடம் இருந்து அது எடுக்கப்படவேண்டும். எங்களைத் தங்களில் இருந்து அப்புறப்படுத்திப் பார்க்கும் அதிகாரத்தை நாங்கள் அவர்களிடம் இருந்து எடுக்க வேண்டும். தங்களிடம் இருந்து அப்புறப்படுத்தி எங்களைக் காயப்படுத்தும் அதிகாரத்தை அவர்களிடம் இருந்து எடுக்க வேண்டும். அவர்களுடைய பணத்தை அவர்களிடம் இருந்து எடுக்க வேண்டும். அவர்களுக்கு இது அதிகமாக இருக்கின்றது. பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு பெண்ணைப் பாவிப்பதற்கு செலவளிப்பதற்கு ஒரு ஆணிடம் பணம் இருக்குமென்றால் அவனிடம் பணம் மேலதிகமாக உள்ளது. அதை அவனிடம் இருந்து பறிக்க வேண்டும். அவனுடைய சட்டைப்பையில் இருக்கும் பணம் அவனுக்குத் தேவைக்கு அதிகமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கள் மீதிருக்கும் அவர்களுடைய சமூக அதிகாரத்தை நாங்கள் அகற்ற வேண்டும். பொய்யர்களும், வேஷதாரிகளும், பிடிவாதமாகக் கொடுஞ் செயல் புரிவோர்களும் அமைத்துள்ள கொடுங்கோலாட்சியில் நாங்கள் வாழ்கின்றோம்.

இப்பொழுது அவர்களுக்கெதிராகப் போராடுவதற்கு நீங்கள் விலை கொடுக்க வேண்டியிருக்கும். அவர்கள் பெண்களிடம் இருந்து அகற்றப்படவேண்டும். இதனை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? அவர்கள் தூக்கியெறியப்பட்டு ஒழிக்கப்படவேண்டும். பால்வினைத் தொழிலில் இல்லாமலாக்கப்பட முடியாமல் இருப்பது எதுவென்றால் அது ஆண் அதிகாரம். பெண்கள் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படாமல் இருக்க வேண்டும் என்றால் ஆண் அதிகாரம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

நீங்கள், நீங்கள் ஒவ்வொருவரும் ஆண்கள் அதிகாரம் செலுத்தும் ஒவ்வொரு நிறுவனத்தையும் நலிவடையச் செய்து அழிக்க வேண்டும். நீங்கள் செய்யத்தான் வேண்டுமா என்று கேட்காதீர்கள்? எப்படி என்பதுதான் கேள்வியே அன்றி, அப்படியென்றால் என்பதல்ல. எப்படி? ஒன்றைச் செய்யுங்கள். உங்களுடைய வாழ்நாளை இதைச் செய்யலாமா அதைச் செய்யலாமா என்று விவாதங்கள் செய்வதில் கழிப்பதிலும் பார்க்க செயற்பாட்டில் இறங்குங்கள். அன்புக்குரியவர்களே, நாங்கள் இன்றிரவு இயந்திரத் துப்பாக்கிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவர்கள் இந்தத் தீர்ப்பிற்குத் தகுதியானவர்கள் தானா? இது சரியானதா? சரியா? நாங்கள் எங்கள் இதயங்களை இந்தக் கேள்வியினால் உடைப்போம். இது சரியானதா? அவர்களுடைய சட்டங்களை நீங்கள் மதிக்காதீர்கள். இல்லை. அவர்களுடைய சட்டங்களை மதிக்காதீர்கள். பெண்கள் சட்டங்களை அமைப்பதற்கான தேவை இருக்கின்றது. நான் நினைக்கிறேன், நானும் கதரின் மக்கினெனும் இதற்கு உதாரணமாக இருந்திருக்கிறோம் என்று. நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். இப்போதிருக்கும் சட்ட அமைப்பின்படி எந்த ஒரு பெண்ணும், இந்த உலகத்தில் இருக்கும் எந்த ஒரு பெண்ணும் ஒரு ஆணின் ஆண்குறியை நக்குவதை நிகழ்த்திக் காட்டவேண்டிய எந்தக் காரணமும் இல்லை.

நீங்கள் இங்கிருந்து எதை எடுத்துச் செல்லவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்றால், பாலியல் அதிகாரப்படிமுறையின் எந்த ஞாபகச் சின்னங்களையும், எதையும், அதாவது எந்தப் பெண்ணாவது எங்காவது பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டார் என்பதை விளக்கும் எதையும். நீங்கள் உங்களைச் சுற்றிப் பார்த்தீர்கள் என்றால் நீங்கள் ஆண்மேலாதிக்கத்தைக் காண்பீர்கள். சில இடங்களில் நீங்கள் இதைக் காணமுடியாது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஒரு பெண் பால்வினைத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறாள். எல்லா அதிகாரப் படிமுறைகளுக்கும் ஒரு அடித்தளம் தேவை. ஆண் அதிகாரத்தின் அடித்தளம் பால்வினைத் தொழில். எனவே நீங்கள் அதற்கு இடம் கொடுக்கும் பொழுது, நீங்கள் அதனுடன் சமரசம் செய்யும்பொழுது, நீங்கள் அதனைக் கண்டு கொள்ளாதிருக்கும் பொழுது நீங்கள் அதற்குத் துணை போகிறீர்கள், உடந்தையாகிறீர்கள். ஆனால் எனக்குத் தெரியும் உங்களுடைய வாழ்க்கையும் கழுமரத்தில்தான் தொங்குகிறது என்று. ஆம். ஆனால் நீங்கள் உடந்தையாக இருக்கின்றீர்கள்? இந்த இரண்டும் உண்மை. இன்னொரு பெண்ணினது வாழ்க்கையின் அழிப்பில்.

நான் உங்களைக் கேட்பதென்னவென்றால், ஆண்மேலாதிக்கத்தின் எதிரிகளாக உங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பால்வினைத் தொழில் குற்றத்தில் - பெண்களுக்கெதிரான குற்றம். பால்வினைத் தொழிலின் மனித உரிமைகளுக்கெதிரான குற்றம்: இதைத் தவிர்ந்த இந்த முக்கியமான விடயத்திற்கு அப்பாற்பட்ட எல்லாமும் - இருந்து அழிக்கப்படவேண்டும். ஒரு பொய், ஒரு மன்னிப்பு, ஒரு சமாதானம், ஒரு நிரூபணம், எல்லாச் சுருக்கமான வார்த்தைகளும் பொய்கள். நீதி, சுதந்திரம், சமத்துவம் இந்த வார்த்தைகள் எல்லாமே பொய். நீங்கள் பொய் சொல்ல முடியும். இந்த நிறுவனத்தில் நீங்கள் பொய் சொல்வதற்கு கற்றுத் தரப்படுவீர்கள். இந்தத் துர்ப்பாவனையை உருவாக்குவதற்கு பாதுகாப்பதற்கு இருக்கும் கட்டுமான அமைப்பை கலைப்பதற்கு நீங்கள் உங்களுடைய வாழ்க்கைகளைப் பாவிப்பதற்கு முடியும். நீங்கள் மிகவும் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு நபர். நீங்கள் துர்ப்பாவனையாளருடன் அல்லது போராளியுடன், எதிர்ப்பவருடன், பரட்சியாளருடன் நிற்க முடியும். நீங்கள் இதனைச் செய்விக்கப்பட்ட ஒரு சகோதரியுடன் நிற்கலாம். நீங்கள் மிகவும் புத்திசாலியாக இருந்தால் நீங்கள் இவர்களிற்கு இடையில் நிற்பதற்கு முயற்சிக்கலாம். அவன் உங்களுக்கூடாக அவளை அடையக்கூடியதாக. இதுதான் அநேகமாக துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் "தெரிவு" என்ற வார்த்தையின் அர்த்தம். இவைகள் தெரிவுகள். நான் உங்களை ஒரு தெரிவைச் செய்யும்படி கேட்கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விமர்சனக் களம்

# பெண்கள் சந்திப்பு மலர் 2001 : எனது பார்வையில்

இந்த 21ம் நூற்றாண்டிலும், தமக்குள்ளே ஊறிப் போயிருக்கும் பழைமைகளைக் களைந்தெறியத் தைரியமின்றி, தமக்கு முன்னே கட்டியெழுப்பியிருக்கும் கலாச்சார வேலிகளைத் தாண்டும் துணிவின்றி, தாமே தமக்கு விலங்கிட்டு

எம்மில் சில பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் பெண்கள் சந்திப்பும் அதையொட்டிய மலர் வெளியீடும் மகிழ்வையே தருகிறது.

பெண்ணியம் பேசுவது தற்போதைய நாகரீகம் எனப் பிதற்றும் ஆண் சமூகத்துக்கு, அந்த ஆண்சமூகம் தம்மைத்தான் மிதிக்கிறது என்று தெரியாமல், புரியாமல் குடை பிடித்து பலம் சேர்க்கும் - இன்னும் அறியாமையிலேயே உழன்று கொண்டிருக்கும் எமது சில பெண்களுக்கு மத்தியில் பெண்கள் சந்திப்பு 10 ஆண்டுகளைக் கடந்தது ஒரு பெரிய சாதனையே!

பெண்கள் சந்திப்புக் குழுவின் கருத்தில் இருந்தும் தேவா அவர்களின்

- சுவடுகளின் மீள்பார்வை - மூலமும் பெண்கள் சந்திப்புப் பற்றியும் தாயகத்தில் ஆயுதந்தூக்கி வீரியத்துடன் பெண்கள் போராடினாலும் எஞ்சியுள்ள பெண்கள் மீதான அடக்குமுறைகளும் வன்முறைகளும் பற்றியும் அறிய முடிந்தது.

முன்னைய பெண்கள் சந்திப்பு மலர்கள் எதுவுமே என் பார்வைக்கு எட்டாததால் ஒப்பீட்டுக்கோ அல்லது இம்முறை வெளியான மலரின் வளர்ச்சி பற்றிக் கூறவோ என்னிடம் விடயங்கள் இல்லை.

ஆனால் எந்தவித ஒப்பீடும் இன்றி இதை ஒரு மலர் என்று பார்க்கும் போது கருத்துக்களையும் அதிருப்திகளையும் முன் வைத்த பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயானாலும், கருத்துக்களைத் தந்த பெண்களின் வளர்ச்சியும், தமது பிரச்சனைகளை மட்டுமின்றி தம்மைச் சுற்றியுள்ள மற்றைய பெண்களின் பிரச்சனைகளையும் கூடத் தயக்கமின்றி வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த அவர்களின் துணிவும் அதை அழகு தோய்த்துத் தந்த விதமும் பெண்ணென்ற முறையில் என்னைப் பெருமை கொள்ளவே செய்கிறது.

இவர்களின் இந்த மனப்பூர்வமான பங்களிப்பு பெண்களின் முன்னேற்றத்திற்கான ஒரு பெரிய அறிகுறியே!

எடுத்த மாத்திரத்தில் மனதைக் கவர்ந்தவை மலரை அழகு படுத்திய ஓவியங்கள்.

சமையலறைதான் எமக்கான இடமென்று ஒதுக்கி விடப்பட்ட எமது உலகில் தமிழ்ப்பெண் ஓவியர்கள் என்பவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவானவர்களே. இந்த நிலையில் புங்காவிருது பெற்ற வாசுகியின் அட்டைப் பட ஓவியமும் உள்ளே கதை பேசிய அவரது மற்றைய அழகிய ஓவியங்களும் ஒரு மன நிறைவையே தந்தன.

பின் அட்டையின் ஓவியம் மனதைக் கவர படைப்பாளி யாரென மனம் வினாவ உள்ளே தேடியதில் எட்டு வயதுச் சிறுமி ஆரதியின் கைவண்ணம் அது எனத் தெரிந்த போது மிகவும் வியப்பாக இருந்தது.

மிகுந்த திறமை அவருக்குள் - அதாவது ஒன்றை தனக்குள் கிரகித்து அதை மூளையில் பதிய வைத்து மீண்டும் அதை மற்றவர்கள் பார்வைக்கு ஓவியமாகக் கொண்டு வந்த திறமை மிகவும் பாராட்டப் பட வேண்டியதொன்று.

பெற்றோர்களாலும் சுற்றியுள்ளவர்களாலும் சரியான முறையில் ஆதரவு வழங்கப் படும் பட்சத்தில் நிட்சயமாக சிறுமி ஆரதி எதிர்காலத்தில் ஒரு சிறந்த ஓவியராக பரிணமிப்பார்.

**பிங்கலைக்கும் மற்றைய ஓவியர்களுக்கும் வாழ்த்துக்கள்.**

அடுத்து ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் அலசும் போது -

எல்லாமே தரமாக, சோகமாக, யதார்த்தமாக, உணர்வுகளைச் சுடுவதாக, எப்படி ஏமாற்றப் படுகிறாய் என்று சுட்டிக் காட்டுவதாக........ பல் தரப்பட்டு - ஆனாலும் சுவையாக இருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது உணர்வுகளை எமது மொழியிலேயே சொல்ல வந்த **ஆழியாளின் - பதில் - கவிதை**

தமது சுகபோக வாழ்வுக்காய் எமது கனவுகளைப் பறித்து, உணர்வுகளை மிதித்து, கால்களையும் கைகளையும் கலாச்சாரச் சங்கிலிகளால் பிணைத்து, இறகுகளைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டு.........

எம் உழைப்பையும் வனப்பையும் உறிஞ்சி உறிஞ்சித் தமதாக்கிக் கொண்ட ஆண்வர்க்கத்தின் பாரிய சுயநலத்தை மிகக் குறைந்த வார்த்தைகளால் வடித்து விட்ட

**அனார் அவர்களின் - சூரியனைப் பற்ற வைக்க - கவிதை**

பெண்களுக்கு ஓய்வு என்பது வாழ்வே ஓய்ந்த போதுதான் என்பதைச் சொல்லி

சிறுமியாக இருக்கும் போதிலிருந்து வயோதிபம் வரை ஓடாய் தேயும் பெண்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டி, இறுதியில் ஆண்களிலும் அன்பு, பாசம், கருணை, நேசம், பச்சாத்தாபம் உள்ளவர்களும் இருக்கிறார்கள் என்பதை விளக்கிய

புர்கான் பீ இப்திகார் அவர்களின் - **அவளுக்கும் ஓய்வு தேவை** - சிறுகதை

வன்புணர்வினால் வதைபட்ட பெண்களின் மென்உணர்வுகள் மீண்டும் விசாரணை என்ற பெயரில் வார்த்தைகளால் வன்புணர்வு செய்யப்படுவதை அழகாகச் சொன்ன

**நளாயினி தாமரைச்செல்வன் அவர்களின் - சாட்சி - கவிதை**

பெண்கள் மீதான வன்முறைகள், - ஆயுதக் கலாச்சாரத்தில் கணவனை இழந்த இரு பிள்ளைகளின் தாயான ஒரு பெண்ணின் ஆட்சியிலேயே நடை பெறுவதை விளக்கிய

**ஜெயந்திமாலாவின் - மன்னம்பேரியிலிருந்து சாரதாம்பாள் வரை - கட்டுரை**

விதைத்ததை அறுக்க வேண்டுமென்பதை அமெரிக்காவுக்கு விளக்கிய

**சத்யா அவர்களின் - சிதைந்தகொடி - கவிதை**

சர்வதேசப் பெண்கள்தினம் உருவாகிய கதையை நேர்த்தியாகத் தந்த

சுவிஸ் றஞ்சியின் - **சர்வதேசப் பெண்கள் தினம்** - கட்டுரை

குழந்தையில்லாத காரணத்தால் இயல்பாகவே தோன்றி விட்ட தனிமையைப் போக்க புத்தகங்கள் துணையானாலும், குழந்தையில்லாத ஒரு பெண்ணின் மனதின் ஓர் மூலையில் பூத்திருக்கும் தவிர்க்க முடியாத வெறுமையையும் - இவைகளையும் தாண்டி ஒரு பெண்ணிடமுள்ள இயற்கையின் மீதான லயிப்பையும் - அவைகளோடு சமூகத்துக்குள் வேரூன்றி இருக்கும் - சாத்திரம் சம்பிரதாயம் போன்ற மூட நம்பிக்கைகளையும் அந்த நம்பிக்கைகளில் மூழ்கி தமது பிள்ளைகளின் எதிர்காலங்களையே பாழடிக்கும் சில பெண்களின் அறியாமைகளையும் விளக்கிய

**சுமதி ரூபனின் -கத்தரிக்கப் படாத சிறகுகளும் பறக்கத் துடிக்கும் குருவிகளும் - சிறுகதை**

இயற்கையின் அழகில் மயங்கிய

**பாலரஞ்சனி ஜெயபால் அவர்களின்**

**- ஒரு தூக்கணாங்குருவிக் கூடும் ரெட்லைனும் - கவிதை**

போராட்டக்களங்களிலும் ஆங்காங்கு வேறு கல்வி கலை..... சார்ந்த இடங்களிலும் பல பெண்கள் சாதனைகளைப் புரிந்து பெண் இனத்துக்கே பெருமை சேர்த்தாலும் - உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம் இன்னும் எத்தனையோ பெண்கள் அடக்கப் படுவதும் ஒடுக்கப் படுவதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆனாலும் பெண்கள் எல்லோருமே பாரதி கண்ட புதுமைப் பெண்களாக மாறி விட்டதாக நம்பி விட்ட

**தேவகி மனோகரன் அவர்களின் - பெண்ணின் மறுமலர்ச்சி - கட்டுரை**

சமூகத்தின் கோட்பாடுகள் சீர்கெட்டதாய் இருந்தாலும் அதனோடு வாழ்ந்து தொலைக்க வேண்டிய கட்டாயத்தை வெறுப்புப் பூசிக் காட்டிய

**ஜெபா அவர்களின் - குஞ்சுக்குருவியின் சிறகசைத்த ஆசையில்... - கவிதை**

எல்லாப் பொருட்களையும் பணம் பெறுவதற்காக விற்பார்கள். கல்யாண சந்தையில் மட்டும் பெண் என்ற உயிர்ப்பொருள் பணம் கொடுத்து இன்னொருவனுக்குச் சுகம் கொடுப்பதற்காக விற்கப் படும்.

இந்த வேடிக்கையான **விற்பனைச் சந்தையில்** பொறுப்பற்ற கணவன்மார்களிடம் வாழ்வைத் தொலைத்து ஜடமாகிப் போன பெண்களின் மன உணர்வுகளையும்.

திருமண பந்தத்தில் இணைந்தால்தான் சமூகத்தில் ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என்ற நிலையில், தாய் தந்தையரின் திருப்திக்காகவேனும் திருமணத்துக்கு முகம் கொடுப்பதற்காக, முகம் தெரியாதவர்களுடன் நாள் நட்சத்திரங்களையும் சேர்த்துப் பேரம் பேசும் புலம் பெயர் நடைமுறைகளையும், புழுங்கி அவியும் பெண்களின் மனநிலைகளையும் புடம் போட்டுக் காட்டும்

**தயாநிதி அவர்களின் - சொர்க்கம் நிச்சயிக்கப் படுகின்றது - சிறுகதை**

காலங்காலமாக உயிர்களைப் பாதுகாக்கும் இயற்கையின் பலத்தையும் அதனுடன் நாம் பாசத்துடனும் நட்புடனும் ஒன்ற வேண்டிய அவசியத்தையும் சுருக்கமாக அழகாகச் சொன்ன

பாமதியின் - **இயற்கைக்குள் மனிதனும்... மனிதனிற்குள் இயற்கையும்...... -கட்டுரை**

எதைச் செய்ய நினைத்தாலும் கருவிலேயே ஆரம்பிக்கப் பட்ட

நீ பெண்! அதனால்......... என்ற திணிப்புக்கள் பதியப் பட்ட மூளையிடமிருந்து மீளமுடியாததொரு குற்ற உணர்வும், பெற்றோர், கணவன், சமூகம் இணைந்த ஒரு கும்பலின் பல் வேறுவிதமான அழுத்தங்களை எதிர் நோக்க முடியாத ஆனால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சிக்கலும் எப்படி ஒரு பெண்ணைத் தோற்கடிக்கிறது என்பதையும்,

திருமண பந்தத்தில் பேச்சினாலும் எழுத்தினாலும் மட்டுமே புனிதம் பூசப்பட்ட மனைவி என்ற பதவிக்குள் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தம்மைத் தொலைத்த பெண்களின் மன உணர்வுகளையும் தாய்மை உணர்வை வெறும் பதவியாக்கி - அது கிடைக்காத

போது அனுதாபக் கொடுவாளால் கீறிப் பார்க்கும் சமூகத்தின் அறியாமைக்குள் சிக்கித் தவிக்கும் பெண்களின் விரக்தியின் உருவங்களையும் மிகச் சுருக்கமாகக் கூறி விட்ட

**துர்க்காவின் - கண்ணாடிபொம்மை - சிறுகதை**

அதே போலவே எதைச் செய்ய நினைத்தாலும் கருவிலேயே ஆரம்பிக்கப் பட்ட

நீ பெண்! அதனால்......... என்ற திணிப்புக்கள் பதியப் பட்ட மூளையிடமிருந்தும் அம்மா சொல்லி வளர்த்த கலாச்சார உணர்வுகளிலிருந்தும் மீளமுடியாமல் பெண்ணை வெறும் வீட்டு வேலைக்காரியாக எண்ணும் கணவன் என்பவனின் வசவுகளோடு வாழ்வை நகர்த்தும் பெணணின் அவலத்தைக் கூறிய

**ராகினியால் அனுப்பப் பட்ட - அநாமதேயக் - கவிதை**

பெண்விடுதலை கிடைத்து விட்டதுதானே என்று பெண்களே கேட்கும் ஒரு இக்கட்டான காலகட்டத்துக்குப் பொருத்தமாய் -

ஆங்காங்கு ஓரிரு பெண்களுக்கு சந்திரமண்டலத்தில் காலடி வைக்கவும், ரெயின் ஓட்டவும், விமானமோட்டவும் - ஏன்...! இன்னும் பெண்களால் முடியாதென்று சொல்லி வைத்த வேலைகளிலெல்லாம் தடம் பதிக்கவும் அனுமதி கிடைத்தாலும், அவை சாதனைகளாகவே அமைந்தாலும் - மிகுதி ஒட்டு மொத்தப் பெண்களுக்கும் இவைகளையே காட்டிக் காட்டி கண்துடைப்புச் செய்யும் ஆண் சமூகத்தின் ஏமாற்று வித்தையை விளக்கிய

ஓவியாவின் - சிகரங்களைத் தொட்ட பின்பும் - கட்டுரை

கடமை என்ற பெயரில் ஜடமாக்கப் படும் மனைவியின் வேதனையை இலகு தமிழில் புரிய வைத்த

**நளாயினியின் - புரியும் வேதனை - கவிதை**

**அவ வீட்டிலை சும்மாதான் இருக்கிறா** - என்று எல்லா ஆண்களாலுமே வாய்ப்பாடமாக ஒப்பிக்கப்படும்

வேலை என்று கணிக்கப் படாத வீட்டு வேலைகளே - ஒரு மனைவியின் (பெண்ணின்) தலையில் இறக்க முடியாத பாரிய சுமையாகச் சுமத்தப் பட்டிருப்பதையும், அந்த வேலைகளிலிருந்து சாதுர்யமாகத் தப்பித்துக் கொள்ளும்

ஆண்களின் சாமர்த்தியத்தையும் மிக மிக யதார்த்தமாக அழகாக நன்றாகச் சித்தரித்திருக்கும்

**மல்லிகாவின் - அவள் சரியான கெட்டிக்காரி - சிறுகதை**

புலம் பெயர் சாதனங்களிலும், புலம் பெயர் தொடர்பு ஊடகங்களிலும் கூட பெண்களின் கருத்துக்களும், உரிமைகளும் நாசூக்காகக் கத்தரிக்கப் படுவதை ஆரோக்கியமான முறையில் அலசிய

**ஜெயந்தியின் - புலம் பெயர் சாதனங்களும் தொடர்பு ஊடகங்களும் - அலசல்**

போராட்டம் வாழ்வென்றால் சரிந்து போகாமல் வலிந்தவளாய்... இயற்கையோடு ஒன்றி உறுதியோடு வாழ் - என்று ஒரு தெளிவான நம்பிக்கையையும் ஏமாற்றங்கள் துன்பங்களிலிருந்து வீழ்ந்து போகாத தைரியத்தையும் மனதுக்குள் விதைக்கக் கூடிய வகையில் அமைந்த

**பாமதியின் - பூமி அதிரப் போவதில்லை - கவிதை**

ஒரு பெண்ணின் கனவுவாழ்க்கைக்கும் நியவாழ்க்கைக்கும் இடையிலான முற்றிலும் வேறுபட்ட கோலம்

இப்படியும் நடக்கிறதாம் என்று காதில் சேதியாக வந்த ஒரு விடயம் அதாவது -

புலம்பெயர்ந்த பின் அங்கான நிலைப்பாட்டிற்காக - ஆயிரம் காலத்துப் பயிர் என்று அழகாகச் சொல்லி வைக்கப் பட்ட கல்யாணப் பயிர் - வெறுமனே பூச்சாடியில் வைக்கப் பட்ட பிளாஸ்டிக் பூப்போல செயற்கைப் பயிராகி விடுகின்ற பரிதாபம்.... அது - எப்படி நடக்கிறது எனபதை மிகத் தத்ரூபமாகக் காட்டிய

**நிரூபாவின் - வந்தவர் வருவாரா? - சிறுகதை**

கலவியில் கூட தாம் உயர்வு எனக் காட்ட நினைக்கும் ஆண் சமூகத்தின் ஆதிக்கத்தை - கலவியில், வீட்டு வேலைகளில், குழந்தைவளர்ப்பில், பராமரிப்பில்..... என்று எல்லாவற்றிலும் சமநிலை தேடும் பெண்மனம் உடைக்கத் துணிவதையும்,

தொலைவில்தானே! யாருக்கோதானே! எமக்கில்லைத்தானே! என நினைத்தவை எதிர்பாராத நேரத்தில் எமை நோக்கி வந்ததையும் அதனால் நாம் வெகுண்டு போனதையும் எமது முகங்கள் இருண்டு போனதையும் மிகச் சொற்ப வார்த்தைகளில் பதித்து விட்ட

**தான்யாவின் - கவிதைகள்**

ஆண்குழந்தையும் பெண்குழந்தையும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்து ஒரே குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தாலும் வளர்ச்சிப் பாதை ஒரு கட்டத்தில் மாற்றப் பட்டு - எல்லாமே இயல்பாய் நடப்பது போலவே பிரமைப் படுத்தப் பட்டு - பெண் அடக்கப் பட்டு விடுவதையும் அவள் வேலைகள் வீட்டு வேலைகள் என்று ஆக்கப் பட்டு - அவை ஆண்களின் வேலை போல சமூக மறு உற்பத்திக்கான வேலை இல்லையென்ற கண்ணோடு பார்க்கப் பட்டு விடுவதையும் அடிப்படைக் கருத்தாகத் தொடங்கி - பெண்களின் விடுதலை அடக்குமுறை சம்பந்தமான பல கருத்துக்களை தன்னுள்ளே அடக்கிவிட்ட

**உமாவின் - மார்க்ஸியப் பார்வையில் பெண்ணியம் - அடுத்த கட்டத்திற்கான நகர்வு - ஆய்வுக்கட்டுரை**

கனவுகள் காணாத - மற்றைய நேரங்களில் கனவாகிப் போய் விடுகின்ற சின்னச் சின்ன ஆசைகளை சின்னச் சின்ன வரிகளில் அழகாகப் பதித்து விட்ட

**நிவேதாவால் தமிழாக்கம் செய்யப் பட்ட சத்யாவின் - மாறுபட்ட மனிதர்கள் மத்தியில் மாறுபடும் நான் - (ஆங்கிலக்) கவிதை**

நளாயினியின் சாட்சி கவிதை சொன்னது போன்றதொரு - வன்புணர்வு செய்யப் பட்டவளின் மென் உணர்வுகளை விசாரணை என்ற பெயரில் மீண்டும் மீண்டும் வன்புணர்வு செய்யும் அவலத்தை விளக்கும்

தேவாவின் - மீள்வே கிடையாது - சிறுகதை

அக முரண்பாடுகளைக் கொண்ட முதலாளித்துவத்தால் நாசூக்காக பெண்களின் உரிமைகள் மறுக்கப் படுவதையும் சில குறிப்பிட்ட வேலைகள் பெண்களுக்கென நியமிக்கப் பட்டு அவர்கள் மீண்டும் மீண்டும் அவைகளையே படிக்க வைக்கப் பட்டு குறைந்த சம்பளங்களில் வேலைக்கமர்த்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவது போன்ற தந்திரமான ஏமாற்று உபாயங்கள் கையாளப் படுவதையும்

பெண்களின் சக்திகள் முதலாளித்துவத்தால் உறிஞ்சப் படுவதையும்

முன்னேறிக் கொண்டிருக்கும் நவீன உலகம் கூட இன்னொரு மூலையிலிருந்து இன்னும் இலகுவான முறையில் வீட்டிலிருந்த படியே இணையத்தளங்கள் மூலமும் தொலைபேசிகள் மூலமும் பெண்களை ஆண்கள் சுவைத்து ருசி பார்க்க போகப் பொருட்களாக பயன் படுத்தும் தன்மைகளையும் எடுத்துக் காட்டி இவைகளிலிருந்து வெளியேற என்ன வழியென்ற கேள்விக்குறியோடு முடித்திருக்கும்

**தயாநிதியின் - பெண்களின் உரிமைப் போராட்டத்தின் எதிர்கால்ம் எவ்வாறு அமையப் போகிறது? - ஆய்வு**

**இறக்கைகளை விரித்துப் பற என கவிதை எழுதி விட்டு வீட்டுக்குப் பறந்து போன எழுதாப் பெண்கள்** என்று எழுதி மனதை தன்பால் ஈர்த்து விட்ட **பிரதீபாவின் - என்னுடைய நாட்கள் - கவிதை**

பெண்களின் மன உணர்வுகளையும், **பெரும்பாலும்** அவர்களால் சொல்லப் படாமலே அமிழ்ந்து போய் விடுகின்ற ஆசைகளையும் இதமாகச் சொன்ன

அதே **பிரதீபாவின் - பிரதீபா கவிதைகள் -**

கருகிப் பொசுங்கிய தோலின் நாற்றத்தை, என் மூக்கில் அருவருப்பாய் இருத்தி விட்ட - ஐரோப்பிய ஆசியப் பெண்களின் திருமணத்தின் முன் பின்னான உடலுறவுகள் பற்றியும் அதிருப்திகள் பற்றியும் மிகவும் ஆழ்ந்து உள்ளார்ந்து நோக்கிய ஒரு அறிவு பூர்வமான பார்வையை மிகமிக யதார்த்தமாய் முன்வைத்த

**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் - முதலுறவுக்கு அடுத்தநாள் - சிறுகதை**

புலம்பெயர் தமிழ்ப்பெண்கள் தொடர்ந்தும் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், துரோகங்களினால் ஏற்படும் ஏமாற்றங்கள் விரக்திகளினால் - பெண்கள் எதிர் கொள்ளும் உளவியற் தாக்கங்களையும் அதனால் நடந்தேறும் தற்கொலைகளையும், அதிலிருந்து அந்தப் பெண்களை காக்க சுற்றியுள்ள மற்றைய பெண்கள் செய்ய வேண்டிய ஆரோக்கியமான உதவிகளையும் பிரயோசனமான முறையில் தொகுத்து எம் முன் வைத்த

**பாமதியின் - தமிழ்ப்பெண்கள் எதிர் நோக்கும் சூழ்நிலையும் - மாற்றத்தை நோக்கின எமது பங்களிப்பும் - ஆய்வுக்கட்டுரை**

என்று அனேகமான எல்லா ஆக்கங்களுமே - **உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரந்து விரிந்திருந்து தலைதூக்கித் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் பெண்களின் பல்வேறு பிரச்சனைகளை** அலசி ஆராயந்திருந்தன.

**இத்தனை பிரச்சனைகளையும் எழுத்தில் வடித்து அதை பதிவாக்கி ஒரு புத்தகமாக்கி மற்றவர்கள் பார்வைக்கு கொண்டு வந்தது பெண்களில் ஒரு சாராரரவது முன்னேற்றப் பாதையை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதையே உணர்த்தியது.**

**இன்றைய உலகில் இவை தவிர்ந்த இன்னும் பல பிரச்சனைகள் பெண்களுக்கு இருக்கின்றன.**

**அவைகளும் காலப் போக்கில் வெளிச்சத்துக்கு வந்து - அதற்கான நிவாரணம் அளிக்கப் பட்டு - பெண்கள் முழுமையான விடுதலையைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் ஆக்கங்களை அன்போடும் அக்கறையோடும் தந்த அத்தனை சகோதரிகளுக்கும்** நன்றி **கூறி இதை முடிக்கிறேன்.**

சந்திரவதனா செல்வகுமாரன்

யேர்மனி

**சாருநிவேதிதாவின் உன்னதசங்கீதம்**

சாருநிவேதிதாவின் பேனா முனை கூட பெண்களை நிர்வாணப் படுத்தி அணுஅணுவாகச் சித்திரவதை செய்து தனது வக்கிரத்தன்மையை உன்னதசங்கீதம் மூலம் காட்டியிருக்கிறது.

சில ஆண் **இலக்கியவாதிகளின்** - பேனா முனைகளிலேயே **இத்தனை** வக்கிரமும் குரூரமும் தோய்ந்திருக்கும் என்றால் **அந்த சில ஆண்களின் சிந்தனா சக்தி** எவ்வளவு **தூரம்** வக்கிரப் பட்டிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

**அப்படியான வக்கிரபுத்தி படைத்த** ஒரு **படைப்பாளியின் படைப்பான - 13 வயதுச் சிறுமியின் மேலான பாலியல் வக்கிரக் கொட்டுதலைத் தாங்கி வந்த சனதருமபோதினி** தொகுப்பின் வெளியீட்டில் வந்த பணத்தை பெண்கள் சந்திப்பு மலர் வெளியீட்டுக்குப் பயன் படுத்தாது திருப்பிக் கொடுத்து எதிர்ப்பைத் தெரிவித்தது மிகவும் வரவேற்கத்தக்க திருப்தி தரக் கூடிய விடயமே!

இந்த உன்னத சங்கீதத்துக்கு மிகவும் தரமானதொரு **கண்டன விமர்சனத்தை**

முன் வைத்திருந்த **சுவிஸ் ரஞ்சி**

கொதித்துப் போய் தத்தமது பார்வைகளில் கண்டனங்களை முன்வைத்த

**நளாயினி தாமரைச்செல்வன், விஜி**-பிரான்ஸ், **ஜெபா**-பிரான்ஸ்

**கட்டுடைப்பும் ஆடைகலைப்பும் - மீண்டும் மீண்டும் அரங்கேற்றம்** என்ற தலைப்பில் - கண்டனத்தோடு ஆதாரபூர்வமான சில உண்மைகளையும் ஆக்ரோசத்தோடு முன்வைத்த**உமா-யேர்மனி** ஆகியோருக்கும் நன்றி

*-சந்திரவதனா செல்வகுமாரன்*

*பெண்ணியம் பேசுவது தற்போதைய நாகரீகம் எனப் பிதற்றும் ஆண் சமுகத்துக்கு, அந்த ஆண்சமுகம் தம்மைத்தான் மிதிக்கிறது என்று தெரியாமல், புரியாமல் குடை பிடித்து பலம் சேர்க்கும் - இன்னும் அறியாமையிலேயே உழன்று கொண்டிருக்கும் எமது சில பெண்களுக்கு மத்தியில் பெண்கள் சந்திப்பு 10 ஆண்டுகளைக் கடந்தது ஒரு பெரிய சாதனையே!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பயந்தாங்கொள்ளி

-நிருபா-

"அப்பப்பா தோட்டத்தில பாம்பு ஒண்டு தொங்குது. அது என்ன?"

"கயிறு"

"இல்ல"

"குடை"

"விசரே?"

எனக்குத் தெரியும் இவன் கண்டுபிடிக்கமாட்டான் எண்டு.

"பயித்தங்கொடி"

"உனக்கு கண்டுபிடிக்கேலாது"

"தலைமயிர்"

"நானே சொல்லட்டோ?"

"சரிசொல்லு"

"புடலங்காய்" நான் சொன்னனான்தானே கண்டுபிடிக்கவேமாட்டான் எண்டு.

"இனி வேற ஏதேன் விளயாடுவமே?"

"இன்னும் ஒரு நொடி சொல்லுறன். அதுக்கு விடை சொல்லுபாப்பம்."

"இண்டைக்கு முழுக்க நொடி சொல்லித்தானே விளையாடுறம். வேற ஏதேன் விளையாடுவமோ?"

"இன்னும் ஒரே ஒரு நொடி. அதுக்குப் பதில் சொல்லீட்டியெண்டா வேற ஏதாவது விளையாட்டு விளையாட வருவன்"

"சரியான பதில் சொன்னா நான் சொல்லுற விளயாட்டு விளையாட வருவியோ?"

"ஓம். சரியாச்சொன்னாயெண்டா வருவன்தானே."

"என்ன விளையாட்டெண்டாலும்."

"ஓமெடா"

நல்ல நொடியா யோசிக்கவேணும். என்ன சொல்லலாம்...? அப்பப்பா சொல்லித் தந்தது. இதை இவன் கண்டேபிடிக்கமாட்டான்.

"வெள்ளப்பிள்ளையார் கோயிலில விழுந்துகும்பிட இடமில்ல."

"............"

"நிறைய நேரம் யோசிக்கேலாது. உடன சொல்லு"

"முட்டை"

"உனக்கு என்னெண்டு தெரியும்?"

"யோசிச்சுச் சொன்னனான். இப்ப விளையாட வாறிறோ?"

"என்ன விளையாட்டு?"

"அம்மா அப்பா"

"உதுக்கு நான் வரமாட்டன்."

"சரியான விடை சொன்னா வாறனெண்டு சொன்னனியெல்லோ?"

"உதுக்கு வரமாட்டன்."

"என்ன விளையாட்டெண்டாலும் வாறனெண்டெல்லே சொன்னனி."

"உதவிட வேற என்னெண்டாலும் வருவன். எட்டுகோடு விளையாடுவமே?. உடைஞ்ச சிலேட்டொண்டு கண்டுபிடிச்சனான். அத நல்லாத் தீட்டிவச்சிருக்கிறன்"

"விக்கியண்ணயோட மட்டும் விளையாடுவியோ?"

"உனக்கு ஆர் சொன்னது?."

"நான் பாத்தனான்"

"உனக்கு விசரே? நான் அவரோட விளையாடேல்ல.?"

"பொய்சொல்லாத. சுள்ளித்தடி."

"போடா உரிச்சகோளி. ஐயோ நுள்ளாத. நாயே."

"இனிமே விளையாடக் கேள் பாப்பம். சுள்ளித்தடி. அவரோட மட்டும்போய் விளையாடன். இனிமேல் உன்னோட நான் விளையாட வரவேமாட்டன்."

"நானும்தான். கோவங் கோவங் கோவம். கண்ணக் கட்டிக்கோவம். செத்தாலும் பாவம். நடுச்சாமத்தில பாம்பு வந்து கொத்தும்."

எனக்கு சரியா நோவுது. நிக அடையாளம்கூடத் தெரியிது. சாரப் பாம்பு கொத்தவேணும். நல்ல கஸ்ரமான நொடியாச் சொல்லியிருந்தா அவன் கண்டுபிடிச்சிருக்கவேமாட்டான். என்ர விருப்பமான வேற விளையாட்டு ஏதேனும் விளையாடியிருக்கலாம். அப்பப்பா இன்னுமொரு நொடி சொல்லித்தந்தவர். மறந்துபோச்சு.

அவர் இருந்திருந்தா கேட்டிருக்கலாம். அந்தப் பேயைப் பற்றியும் வடிவாக் கேக்கேலாம போச்சு. ஆனா நல்ல வேளையா அப்பப்பா செத்த நாளில இருந்து அந்தப் பேயும் வாறேல்லத்தானே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் அப்பப்பா பேயா வரேல்ல? ஒருவேள இனித்தான் வருவாரோ?

இப்பதான் ஞாபகம் வருகிது.

ஏறேறுசங்கிலி இறங்கிறங்கு சங்கிலி. எட்டாத கொப்பெல்லாம் எட்டிவா சங்கிலி. ஜெகதீசோட நேசம்போட்டாப்பிறகு இந்த நொடிய கேக்கத்தான் வேணும்.

டும். டும். டும். எண்டு கேக்கிது. பிறகு. டுடும். டுடும் எண்டும் காதுக்குள்ள வந்து கேக்கிது. பெரிய வெளிச்சமாத் தெரியிது.

ரண்டு கையாலையும் காதப்பொத்திக்கொண்டு அம்மா மூலேக்குள்ள குந்தியிருக்கிறா.

ஆச்சிதான் மெதுவா மெதுவா நடந்து யன்னலுகளச் சாத்திறா. அவா பாவமெல்லே. நானும் போய்ச் சாத்தட்டே? அவவுக்கு ஏலாதுபோல. எங்களக் கூப்பிடிறா.

"இந்த மனிசிக்குச் சொன்னாக் கேக்காது. அந்தக் கம்பிக்கிக் கிட்டப் போகாதயெண." அம்மாக்கு வேல ஆச்சிய நெடுகலும் திட்டிறதுதான்.

யன்னலச் சாத்தவேணுமெண்டா யன்னல்கம்பிக்குக் கிட்டப் போகாமல் என்னெண்டு சாத்திறது? நானும் அக்காவும் படஅறைக்கதவுகளச் சாத்தீட்டம். இன்னுங் குசினிக்கதவு சாத்தேல்ல. ஆச்சி அங்க போட்டா சாத்திறத்திக்கு. டுடும் எண்ட சத்தம் ஒருக்கா கூடிது. ஒருக்கா குறையிது. அம்மா எங்கள இழுக்கிறா. இப்ப நாங்கள் பெரிய கட்டிலுக்குக் கீழ படுத்திருக்கிறம். அம்மா இப்பவும் காதப் பொத்திக்கொண்டுதான் இருக்கிறா. கண்ணை இறுக்கி மூடினபடி. ஆச்சி கட்டில் காலில சாஞ்சிருக்கிறா. அம்மாக்கு இடிமுழக்கமெண்டா ஏன் இவ்வளவு பியமோ தெரியாது.

மழை பெஞ்சிதெண்டா எனக்கு நல்ல வாசி. அப்பதான் வெள்ளம் விளையாடலாம். வீட்டில தொட்டியள் எல்லாம் நிறைஞ்சிடும். கொஞ்சம் குளிரா இருந்தா ஆசையா இருக்கும். மாமரத்துக்குக் கீழ நிறையத் தண்ணி நிக்குமெல்லே. அதுக்குள்ள வெள்ளம் அளஞ்சு விளையாடுறத ஒரு நாள் அம்மா கண்டிட்டா. சுள்ளித்தடியாலதான் குண்டிக்குக் கீழ ஒண்டு தந்தா. மொத்தத் தடியால அடிக்கிறதிலும் பாக்க மெல்லிசானதால அடிக்கிறதுதான் சரியா நோகுமென்ன?

எனக்கு ஆச்சியின்ர வீடு இருக்குத்தானே. அங்கபோய் விளயாடுவன்தானே. அங்கயும் மாமரம் இருக்கு. நிறையநேரம் நிண்டு விளையாடலாம். மழைகாலத்தில அட்டையெண்டா எனக்கு அரியண்டம். உடன மிதிச்சுச் சாக்கொண்டு போடுவன். ஊர்ந்து ஊர்ந்து வருங்கள்.

மின்னல் மின்னேக்க நிண்டு பாக்கவேணுமெண்டுதான் ஆச. அம்மா ஒருநாளும் விடமாட்டா.

"உனக்கு எத்தினதரமெண்டு சொல்லுறது. யன்னலுக்குக் கிட்ட நிக்காதயெண்டு."

இழுத்துக்கொண்டு கட்டிலுக்குக் கீழ போட்டா. கண்ணப் பொத்திக்கொண்டு காதையும் மூடிக்கொண்டு கிடக்கிறா. அம்மா ஒரு கண்ணத்திறந்து பாத்தா. அப்பதான் கேட்டனான். ஆர் இந்த வெளிச்சத்த அடிச்சுக் கொண்டு நிக்கிறதெண்டு.

"உனக்கு இந்தச் சவத்தைவிட வேற கதையில்லையோ" எண்டு பேசிறா.

இடி எங்கயிருந்து வருகிதெண்டு அம்மாட்டக் கேட்டனான். மேலயிருந்த வருகிது எண்டுமட்டும்தான் சொன்னவா. அவாட்டத்தான் இதுகளப் பற்றியெல்லாம் கதைக்கேலாதே. ஒருவேள மேகமும் மேகமும் இடிபடேக்கதான் வருகிதோ எண்டு நினைச்சன். ஏனெண்டா கறுப்பு முகிலும் முகிலும் மோதேக்கதானே மழை வாறது.

ஆனா ஒருநாள் ஜெகதீஸ் சொன்னான் வானம் வந்து கடலுக்க தண்ணி குடிக்குமாம். பிறகுதான் அது மேல போய் மழையா வருமாம். கீரிமலைக் கடலுக்க தான் பாத்ததெண்டு சொன்னவன். ஒரு நாள் ஒரு கடலுக்க போன்னாங்கள். அங்க மூங்கில் மரமெல்லாம் நிண்டிது. அங்க நிண்டு பாத்தனான். முகில் கீழ வரேல்ல. பிறகு வந்து குடிச்சிருக்குமெண்டு நினைக்கிறன். அங்க குடிக்கிறதுகள் எங்க போய்ப் பெய்யும்?

அப்பப்பாட்டத்தான் கேக்கவேணுமெண்டு நினைச்சுப்போட்டு மறந்துபோனன். அவரிட்ட இனிக் கேக்கேலாதுதானே. முந்தி அவரிட்டத்தான் எல்லாம் கேக்கிறனான். சாகிறது எண்டா என்னெண்டு கேட்டன்.

"நெடுகலும் நித்திர கொள்ளுவினம்." எண்டு சொன்னார்.

"அப்ப எழும்பவே மாட்டினமோ?"

"இல்ல"

"ஒருநாளும்"

"இல்ல"

"அப்ப அவயளுக்குப் பசிக்காதோ?"

"இல்ல"

"கக்கூசும் வராதோ?."

"மடைச்சி உனக்கு அறிவிருக்கே? சாப்பிடாட்டி வாராதுதானே." மலரக்கா பேசிறா.

பிறகு "உந்த விசரி கேக்கிறதெல்லாத்துக்கும் பதில்சொல்லிக்கொண்டிருக்கிறியளோ அப்பா" எண்டு அப்பப்பாவயெல்லே பேசிறா. நான் சாப்பிடாட்டியும் கக்கூசுக்கு வாறதுதானே.

"இவளுக்கு விளங்கப்படுத்த மலேசியாவில இருந்து ஆள்கொண்டுவரவேணும்." மலரக்கா புறுபுறுக்கிறா. அவவுக்கு புறுபுறு ஆத்த எண்டுதான் பட்டம்.

"ஏன் சாகிறவ?" என்னோட படிக்கிற வளர்மதியின்ர அண்ணை செத்துப்போனாராம்.. ஏழெட்டுநாளா அவள் பள்ளிக்கூடத்துக்கே வரேல்ல. தூக்குப்போட்டவராம்.

"பயம்"

"ஏன் பயம்?"

"உலகத்தில வாழப் பயம்"

"எனக்கு பேய்க்குமட்டுதான் பயம் அப்பப்பா."

"பயந்த பீச்சாண்டி நீ போய் இந்தச் சாம்பல கோடிக்குள்ள கொட்டிப்போட்டு வா" எண்டு மலரக்கா என்னைத் துரத்திறா.

அவா சொல்லுற வேலையள் செய்தாத்தான் விளையாடலாம். கல்லுச் சுண்டி விளையாடுறதுதான்.

அப்பப்பாவக் கேட்டா எல்லாம் சொல்லுவார். பேசவே மாட்டார். எங்கட வீட்டுக்குப்பின்னால ஒருநாள் இடி விழுந்ததாம். அங்கநிண்ட தென்னமரமெல்லாம் முறிஞ்சு விழுந்துபோச்சாம். ஒருதென்னமரம் விழுந்து எங்கட வீட்டுச் சுவர் ஒண்டு உடைஞ்சுபோச்சாம். நான் அப்ப பிறக்கவே இல்லையாம். பின் வளவுக்க போய்ப் பாத்தனான். ஒரு பெரிய குழியொண்டு கிடந்திது.

வீட்டுக்குமேல ஒரு கம்பிமாதிரி ஏதோ வைச்சுவிட்டா இடிவிழாதாம். கலாக்கா அம்மாவுக்குச் சொல்லேக்க கேட்டனான். நாங்களும் எங்கட வீட்டுக்குமேல கம்பி வைச்சா எவ்வளவு நல்லம்? பிறகு கட்டிலுக்குக் கீழபோய் ஒழிக்கத்தேவையில்லைத்தானே.

ஆச்சி வீட்டில இருந்தா நல்லம். ஏன் அவா சிலநேரம் கோவிச்சுக் கொண்டு போறவா? அவாநிண்டா அம்மா அழமாட்டாதானே. ஏன் அம்மாவுக்கு இடி எண்டா இவ்வளவு பயமோ தெரியாது. கதவு யன்னல் எல்லாம் ஆச்சிதானே சாத்திறது.

ஆச்சி கோவிச்சுக்கொண்டு போனாவெண்டா பனவளவுக்குள்ள இருக்கிற தன்ர கொட்டில் வீட்டுக்குள்ளதான் படுக்கிறவா. ஆச்சிவீட்ட காவலுக்குப் படுக்கப்போறதெண்டா பேப் புழுகம் எனக்கு. அம்மா சாப்பாடு கட்டித் தருவா. மச்சமெண்டா கரித்துண்டு வைச்சுவிடுவா. அப்பதான் பேபிடிக்காது.

நான் ஒருநாள் திருவெம்பாவுக்குப் போகேக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொத்தியாத்தையைக் கண்டனான். உண்ணானைக் கண்டனான்.

மூண்டுதரம் இரவில கதவு தட்டினா திறக்கக்கூடாதாம். பேய்தான் வந்து தட்டிறதாம். சுகந்தி சொன்னவள். மறந்துபோய்த் திறந்தா அவ்வளவுதான். கொண்டுபோய் எங்கயாவது தூரவிட்டிடுமாம். ஒற்றச் செருப்போட சுகந்தி ஒருநாள் காலம்பிற தோட்டத்துக்குள்ள நிண்டவளாம்.

அக்காக்கள் பஸ்ஸிலயெல்லே பள்ளிக்கூடம் போறவ. வேளைக்கு எழும்பவேணும். எனக்கு நல்ல வாசி. ஆச்சீட்ட நெடுகலும் படுக்கப்போகலாம். வேளைக்கே போடுவன். அம்மா இன்னும் வேளைக்குப் போகச் சொல்லுறவா. பத்த வளவு கடந்தெல்லே போவேணும். சாப்பாட்டக் கொண்டுபோய் வைச்சிட்டு அப்பப்பா வீட்டுக்கு ஓடிடுவன். அங்கதான் ஜெகதீசும் வாறவன் விளையாட. அப்பப்பா நல்லா இருட்டினாப்பிறகுதான் வாறவர். ஜேகதீசோட நான்போய்த்தான் நேசம் போட்டனான். அப்பவும் கேக்கிறான் வாறியோவெண்டு அம்மர அப்பா விளையாட. மாட்டனெண்டிட்டன். அப்பப்பா தோட்டத்தால சுருட்டுக்கட்டவும் போறவர். இருட்டுப்படத்தான் வருவார்.

"மூச்சு எண்டா என்ன"

"காத்து"

"காத்துப்போகாமல் என்னெண்ட சாகிறது?"

உன்ர அறிவிக்கு பள்ளிக்கூடம் போகத் தேவையில்லையெடி ஜீவி.

மலரக்கா நெடுகலும் இப்பிடித்தான். அப்பப்பாவோட நான் கதைக்கேக்க குறுக்கும் மறுக்குமா கதைக்கிறது.

"மரங்களெல்லாம் ஆடேக்க காத்து வரும்தானே. அப்ப ஏன் சாகினம்?"

"காத்து மூக்குக்குள்ளால போய் சுவாசப்பைக்குள்ள போகாட்டி சாவினம்."

"தூக்குப் போட்டுச் சாகிறதெண்டா என்ன?"

"கழுத்தில இறுக்கிக் கயித்தக் கட்டி காத்துப்போகாமல் செய்யிறது"

"ஏன் அப்பிடிச் செய்யிறது?"

"வாழ விருப்பமில்லாட்டி"

"அப்பிடியெண்டா அவயளும் பேயாவருவினம் தானே? செத்தா பேயாவினமாம். மலரக்காதானே சொன்னவா."

"பேயுமில்ல கீயுமில்ல." அப்பப்பாவுக்குக் கோவம் வருகிது. அப்பிடியெண்டாத் தலையைத்தான் ஆட்டுவார்.

இப்பதான் மலரக்கா சுண்டி விளையாடுவமோ எண்டு கேக்கிறா. அப்போதையே அவாவக் கேட்டனான். சட்டிபான களுவவேணும். முத்தம் கூட்டவேணும். நெடுகலும் இப்பிடித்தான் சாட்டிறது. மாட்டன் எண்டிட்டு இப்ப நான் அப்பப்பாவோட கதைச்சுக் கொண்டிருக்கேக்க வரட்டாம்.

அண்டைக்கொருநாள் சுண்டி விளையாடேக்கதான் அந்தப் பேய் வந்திது. நான் எட்டுக் கல்லு சுண்டி எடுத்திட்டன். அந்தநேரமாப் பாத்து வந்து குழப்பீட்டிது. கொத்தியாத்தயெண்டா குந்திக்கொண்டே இருக்கும். ஆனா இந்தப் பேயெண்டா ஓடித் திரியிது. நானும் ஜெகதீசும் கோடிக்க ஓடீற்றம். மலரக்காவுக்கு கொத்தியாத்தயெண்டா பயம். ஆனா பேயெண்டா பயமேயில்ல. அதோட ஒரு நாள் கதச்சுக்கொண்டு நிக்கிறா. சின்னப் பிள்ளயளத்தான் பேபிடிக்குமாம். எனக்கு பே எண்டாலே பேப்பயம்.

இந்தப் பேயைப் பற்றி ஒருத்தருக்கும் சொல்லேலாது. சொன்னா மலரக்கா விளையாட வரமாட்டா. எனக்கும் ஜெகதீசுக்கும் மலரக்காவுக்கும் மட்டும்தான் தெரியும். அவன் சொல்லுறான் பேக்கும் தெரியுமெண்டு. பேக்கு கண்ணில்லத்தானே. அப்ப என்னெண்டு தெரியும்?

அப்பப்பாவுக்கு மீன் பொரியலெண்டா விருப்பம். ஆச்சிவீட்ட போகேக்க அம்மா தந்துவிட்ட சாப்பாட்ட அப்பப்பாவுக்கெண்டு கோடிக்க கொண்டுபோய் வைச்சனான். ஆனா அவர் பேயா வந்து சாப்பிடவேயில்ல. நாய்தான் சாப்பிட்டது.

ஆச்சி என்னத் தேடப்போறா. மலரக்காட்ட சொல்லிப்போட்டுப் போவமெண்டுதான் கதவத் திறந்தன். அந்தப் பே படுத்திருக்கு. அவவுக்கு விசர். பே பிடிக்குமெண்டு தெரியுமெல்லே. ஒருவேள அவவப் பிடிச்சுவச்சிருக்கோ? பயமாக்கிடக்கு.

ஒரு நாள் அவாட்டக் கேட்டன்.

அறம்பிறமா கேள்விகேட்டியெண்டா நெல்லிக்காயும் ஆயவிடமாட்டன். சுண்டிவிளையாட வரவும்மாட்டன் எண்டிட்டா. அதுக்குப் பிறகு நான் கேக்கிறேல்ல.

உன்னை ஆர் கதவத் திறக்கச்சொன்னதெண்டு கன்னத்தில அடிச்சுப்போட்டா.

அண்டைக்கு ஒருநாள் பேய் வீட்டுக்குள்ள ஓடீற்றிது. தட்டி ஓட்டேக்குள்ளால பாத்தனான். விக்கியண்ணேன்ர முகம் மாதிரி கிடந்திது. மலரக்காவும் பக்கத்தில நிக்கிறா. ஜேகதீசிட்டச் சொன்னன். ஆனா அந்தப் பேயக்காணேல்ல. அதுக்குள்ளதானே ஓடினது.

அப்பப்பா கண்டாரெண்டா பேய அடிச்சுத் துரத்தீடுவார். அவரிட்டச் சொல்லவும் ஏலாது. பிறகு நெல்லிக்காய் ஆயவிடமாட்டா.

ஆச்சிக்கு எப்பவும் அயதி. கோழி அடைக்க மறந்துபோடுவா. இரவு எட்டு ஒன்பது மணியாப்பாத்து "கோழி அடக்க அயத்துப்போனனெடி வா அடைப்பம்" எண்டுவா. எனக்கு இருட்டுக்குள்ள வெளியால போகப் பேப் பயம். அவான்ர சீல நுனியப் பிடிச்சுக்கொண்டுதான் போவன். அங்கால இங்கால பாக்கிறதே இல்ல. பேய் இருட்டா இருக்கும். திருவம்பாவைக்கு காலமேல எழும்பிப் போகேக்கையே கொத்தியாத்த இருக்கிற பக்கம் பாக்கிறேல்ல. சிலநேரம் குடையால மறச்சுக்கொண்டு போறனாங்கள்.

"ஐயோ அதால போகாதயெணை. கொத்தியாத்த இருக்குமெணை"

சொல்லச் சொல்லப் ஆச்சி அதாலதான் போறா. "பா. பா. பா." "பா. பா. பா." மூண்டுகோழி பிடிச்சிட்டம்.

அந்த நொண்டிக் கோழியத்தான் இன்னும் காணேல்ல. எங்கபோச்சுதோ?

பொழுதுபட அப்பப்பா வீட்டுக்குக் கிட்டத்தானே கண்டனான். அங்கபோய்ப் பாப்பம்.

பேக்காத்து அடிக்கிது. இப்ப லாம்பு நூந்திதெண்டாத்தான் மணியா இருக்கும். எனக்கு நடுங்கிது. பே வந்தா அவ்வளவுதான். நொண்டிக் கோழி எங்கயேன் விழுந்துகிடக்கோ தெரியாது. ஒருக்காத் தூக்கிவிட்டனான். நடந்திது. பிறகு எங்கயாவது விழுந்திருக்கும்.

"என்னப்பு? நீ இங்க என்ன செய்யிறா?."

ஆச்சி கேட்டாப் பிறகுதான் பாத்தன் மலரக்கான்ர பின் வளவுக்குள்ள விக்கியண்ண நிக்கிறார். நொண்டிக்கோழிய கண்டனியளோ எண்டு கேக்கிறத்துக்குள்ள மலரக்கா கொட்டிலுக்குள்ள ஓடீற்றா. விக்கியண்ணையும் பாக்கேல்லையாம்.

அதில பேயின்ர வெள்ளச் சீலை கிடக்கு. நான் கிட்டவே போகேல்ல. பயந்துபோனன். ஆச்சிக்குச் சொன்னன். அது பேயின்ர சீலையாத்தான் இருக்கவேணும் எண்டு. பேயும் இல்ல கீயும் இல்லயாம். நான் கண்டதெண்டு சொல்லுறன். நம்பிறா இல்ல. மறந்துபோய் ஆச்சிக்குச் சொல்லிப்போட்டன். ஒருத்தருக்கும் சொல்லவேண்டாமெண்டு ஆச்சிக்குச் சொன்னான். அவா சொல்லமாட்டாதானே.

அப்பப்பாட்டக் கேக்க வேணுமெண்டுதான் யோசிச்சனான்.

பாம்பு செட்ட கழட்டிறதுதானே. ஒரு நாள் சாரப்பாம்பின்ர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரியசெட்டயொண்டப் பாத்தனான்.

"பே நெடுகலும் வெள்ளச்சீலைதான் கட்டிறதோ?" அப்பப்பாட்டக் கேட்டனான். ஒண்டுமே சொல்லுறார் இல்ல.

அண்டைக்கு அதில கிடந்தது பேயின்ர சீலையாத்தான் இருக்கவேணும். பேக்கு ஆர் சீலை வேண்டிக் குடுக்கிறது?

காலம பள்ளிக்கூடம் பேகேக்க போய் பாக்கிறன் அதக் காணேல்ல.

விளையாட வாறியோ எண்டு ஜெகதீசக் கேட்டன். மாட்டானாம்.

"கோழ்மூட்டி"

"நீதான்"

"பேயப்பற்றிச் சொல்லாதயெண்டு எத்தினதரம் உனக்குச் சொன்னது."

"நான் சொல்லேல்ல"

"நீ சொன்னனீ. எனக்குத் தெரியாதெண்டுமட்டும் நினைக்காத. உன்ர கோச்சிக்கு எல்லாத்தையும் சொல்லிப்போட்டாயென்ன. இனிமேல் அங்க விளையாடப்போகேலாது."

மலரக்காட்டப் போனனான். முத்தத்தில இருந்தவா. அரியண்டம் அதுமுழுத்திலும் துப்புதுப்பெண்டு துப்பிவைச்சிருக்கிறா. சுகமில்லியோ தெரியாது. கிட்டப்போறன் அப்பதான் சொல்லுறா "இனிமேல் இந்த வீட்டுப்பக்கம் வராத" எண்டு. எனக்கு அழுகையா வந்திது. "நெல்லிக்காயும் ஆயேலாதோ?" எண்டன் "எனக்கு விசரக்கிழப்பாம இப்பபோ" எண்டிறா.

கக்கூசிருக்க பனையெடிக்குப்போறன். அப்பதான் அப்பப்பா வீட்டுப்பக்கமா எல்லாரும் கத்திக்கொண்டு ஓடினம். நானும் பின்னால ஓடினன்.

அப்பப்பான்ர கழுத்தில கயிறு இருந்திது. எல்லாரும். அழுகினம். அப்பப்பா செத்துப்போனாராம். இனி அவர் நெடுகலும் நித்திரதான் கொள்ளுவார். எழும்பவே மாட்டாரோ?

பேயும் செட்ட களட்டிறதோ எண்டு கேக்க வேணுமெண்டு யோசிச்சனான். காத்துப்போகாமத்தானே செத்தவர். நான் ஒருக்கா கொப்பியால விசுக்கட்டோ? காத்துப்போகுமெல்லே. அப்பப்பா! அப்பப்பா! ஐயோ அவையள் என்னை அப்பப்பாவுக்குக் கிட்டப் போகவே விடுகினமில்ல.

07.04.02 - 17:30 - 21:00 மணி

**கொல்ன் (koeln)**

## 21ம் பக்கத் தொடர்ச்சி...

பாலியல் தேவைப்பட்டுள்ளது. அவர்கள் மனைவியர் வீடுகளுக்குள் அடைந்து கிடக்க இந்த அவாப் பிடித்த ஆண்கள் எவ்வளவு பணம் கொடுத்தும் வேற்றுப் பெண்களை அனுபவிக்கத் தயாராயிருந்தார்கள். அந்தப் பெண்கள் சிறுமிகளாகக் கன்னி கழியாதவர்களாக இருப்பதையே இவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

இவர்களது இந்த வஞ்சகத்தனமான அற்ப ஆசைகளுக்கு ஏழைப் பெண்கள்தான் பலியானார்கள்.

ஆரம்பகாலத்தில் யப்பானில் தாய் தந்தையரை இழந்த பெண் குழந்தைகளும், தாய் தந்தையர் ஏழைகளாக இருந்த குடும்பத்துப் பெண்குழந்தைகளும் குறிப்பிட்ட சில குடும்பங்களினால் வீட்டு வேலை செய்வதற்கெனச் சொல்லி அடிமைகளாக வாங்கப் பட்டார்கள்.

அவர்கள் உணவு உடை கொடுத்து வளர்க்கப் பட்டு இந்த இச்சை கொண்ட ஆண்களுக்காகத் தயார்படுத்தப்பட்டார்கள்.

அந்தப் பிள்ளைகளை வாங்கும் போது அவர்கள் அழகாக இருக்க வேண்டுமென்பதில் இந்தக் குடும்பங்கள் மிகவும் கவனம் காட்டின. அழகிய பெண் குழந்தைகள்தான் நல்ல விலைக்குப் போனார்கள்.

இந்தப் பெண் குழந்தைகள் பருவவயதுக்கு வந்ததும் இந்த மிராசுதாரர்களுக்கு முன் நடனமாடி பாட்டுப்பாடி அவர்களுடன் படுக்கைகளைப் பகிர்ந்து பணம் சம்பாதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இந்தப் பணம் அவர்களை வாங்கி வளர்த்த அந்த வளர்ப்புப் பெற்றோருக்கே ஒரு சதம் பாக்கியில்லாமல் கொடுக்கப் பட்டது.

இந்தப் பெண்களை தாம் வளர்ப்பதுக்கும் வாங்குவதற்கும் செலவழித்த பணம் என்று சொல்லி அந்த வளர்ப்புப் பெற்றோர் ஒரு கணக்கு வைத்திருப்பார்கள். அந்தக் கணக்குத் தீரும் வரை இந்தப் பெண்கள் இந்தத் தொழிலைச் செய்து பணத்தை வளர்ப்புப் பெற்றோருக்குக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இப்படித்தான் விலைமாதர்கள் உருவானார்கள் என்றொரு ஆதாரபூர்வமான கதை உள்ளது. இவர்கள் புலளாய (ஹைஹஷா) என அழைக்கப் பட்டார்களாம்.

இது இன்றைய நவீன உலகத்திலும் தொடர்வது மிகவும் மனவருத்தமான ஒரு விடயமே.

இன்று பெண்கள் அவர்கள் கணவன்மார்களாலேயே பால்வினைத் தொழிலுக்கு வற்புறுத்தப் படுகிறார்கள்.

உதாரணமாக தற்போது ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகளாக வெளியேறிய குடும்பத்துப் பெண்கள் குடும்பச் செலவைச் சமாளிப்பதற்காக அவர்கள் கணவன்மார்களாலேயே பால்வினைத் தொழிலுக்கும் இரவு நடனத்துக்கும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

1992 இலிருந்தே பாக்கிஸ்தான் எல்லையில் -பெண்கள் விபச்சார விடுதிச் சொந்தக்காரர்களுக்கும் தரகர்களுக்கும் விற்கப்படுவது நடந்து கொண்டிருக்கிறது. இங்கு 12 வயதுப் பெண்பிள்ளைகள் நல்ல விலை போகிறார்களாம். இவர்கள் பெரிதும் விரும்பி வாங்கப் படுகிறார்கள்.

இப்படியே உலகின் பல மூலைகளிலும் பெண்களும் பெண்குழந்தைகளும் வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் எல்லாப் பெண்களும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்காவிடில் இதற்கு விமோசனம் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை.

பெண்களே ஒன்று திரளுங்கள். நீங்கள் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஒவ்வொரு வயதிலும் ஆண்களாலும் சமூகத்தாலும் ஒவ்வொரு விதமாகப் பயன்படுத்தப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

எதையும் உங்கள் பிரச்சனையில்லை என்று சொல்லி ஒதுங்கி விடாதீர்கள்.

நாளை நீங்களோ அல்லது உங்கள் மகளோ இதே பிரச்சனையில் வதைபடலாம் என்பதை மறந்து விடாதீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்